
18

# வ. வே. சு. ஐயர்



# வ.வே.சு.ஐயர்

புலவர் என்.வி. கலைமணி எம்.ஏ.,

சாந்தி நிலையம்

புதிய எண்: 126,

உஸ்மான் சாலை,

தியாகராய நகர், சென்னை-17.

விலை : ரூ.22.00

❑ VA.VE.SU.IYAR ❑ A Book on VA.VE.SU.IYAR's Life and thoughts ❑ BY : N.V. KALAI MANI ❑ First Edition: December 2001 ❑ Price: Rs.22.00 ❑ © SHANTHI NILAYAM ❑ Published by : SHANTHI NILAYAM, 126/108, Usman Road,T. Nagar, Chennai - 600017 ❑ Printed at: Sivakami Printo Graphics, 160, Big Street, Triplicane, Chennai- 600 005. ❑ Phone : 8445051 ❑

# ஆசிரியரின் பிற நூல்கள்

டாக்டர் மு.வ.வின் நம்மை மேம்படுத்தும் எண்ணங்கள்
பகவான் ஸ்ரீராமகிருஷ்ணரின் ,,
அண்ணல் மகாத்மா காந்தியின் ,,
காமராஜரின் ,,
டாக்டர் வி. ராதாகிருஷ்ணனின் ,,
சர் வின்ஸ்டன் சர்ச்சிலின் ,,
ஸ்டாலினின் ,,
டார்வினின் ,,
அறிஞர் அண்ணாவின் ,,
அன்னி பெசண்ட் அம்மையாரின் ,,
கவிஞர் கண்ணதாசனின் ,,
குன்றக்குடி அடிகளாரின் ,,
பெஞ்சமின் ஃபிராங்கிளினின் ,,
அன்னை தெரேசாவின் ,,
நம்நாட்டுத் தலைவர்களின் ,,
நாட்டுக்கு உழைத்த நல்லவர்களின் ,,
அரிஸ்டாட்டிலின் ,,
பிளாட்டோவின் ,,
ரூசோவின் ,,
சிந்தனையாளர் சாக்ரடீசின் ,,
ஜே. கிருஷ்ணமூர்த்தியின் ,,

ரஸ்ஸலின் நம்மை மேம்படுத்தும் எண்ணங்கள்

நீட்சேயின் ,,

கன்பூசியஸின் ,,

தந்தை பெரியாரின் ,,

டாக்டர் முத்துலட்சுமியின் ,,

பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரத்தின் ,,

மார்ட்டின் லூதரின் ,,

எமர்சனின் ,,

வால்டேயரின் ,,

ஆல்பர்ட் ஐன்ஸ்டைனின் ,,

நார்மன் வின்செண்ட் பீலின் ,,

டென்னிஸ் டைடிராட்டின் ,,

மூதறிஞர் ராஜாஜியின் ,,

கார்ல் மார்க்ஸ்சின் ,,

சா அதியின் ,,

உலக அறிஞர்களின் ,,

சிக்மண்ட் ஃப்ராய்டின் ,,

தமிழக முன்னோடிகளின் ,,

திருவள்ளுவரின் திருக்குறளில் ,,

ஹிராடெடசின் ,,

பாரதியின் ,,

கவிக்குயில் சரோஜினியின் ,,

கலீலியோவின் ,,

இங்கர்சாலின் ,,

வேத இதிகாச புராணங்களில் ,,

இங்கர்சாலின் உண்மை ,,

# பிரிட்டிஷ் போலீசைப் பிணம் ஏமாற்றியது!

பிரெஞ்சு ஆட்சியிலே உள்ள புதுச்சேரி நகருக்கு அருகே சின்ன பாபு சமுத்திரம் என்ற ஊர் அந்த ஊர் பிரிட்டிஷ். ஆட்சிக்கும் பிரெஞ்சு ஆட்சிக்கும் இடையே உள்ள எல்லைக்கோடாக இருந்தது. அந்த ஊருக்கு அருகே பிரெஞ்சு அதிகாரத்துக்கு உட்பட்ட சிறு கிராமத்திலே உள்ள தனது நண்பர் ஒருவரைப் பார்க்க வ.வே.சு. ஐயர் வந்திருந்தார். தனது நண்பருடன் பேசிக் கொண்டிருந்த நேரத்தில், இதை ஒற்றர்களால் தெரிந்து கொண்ட பிரிட்டிஷ் போலீசார், அந்த வீட்டைச் சுற்றி வளைத்துக் கொண்டார்கள். இதை வ.வெ.சு.ஐயரும் புரிந்து கொண்டார்.

ஐயர் பேசிக் கொண்டிருந்த வீட்டில் அழுகுரல் ஓசை எழுந்தது. கிராமத்துப் பெரியவர்கள் சாவுச் செய்தியைக் கேட்டதும், ஒருவர் பின் ஒருவராக வந்து துக்கம் விசாரித்து விட்டு அந்த வீட்டின் வாசலிலேயே உட்கார்ந்திருந்தார்கள். இதே நேரத்தில் அக்கம் பக்கத்து வீட்டுப் பெண்களும் அங்கே கூடி விட்டார்கள்.

கூடிய பெண்கள், அவரவர்களுக்குரிய மனக்குறைகளை ஒப்பாரியாகப் பாடி, மாரடித்துக் கொண்டு, ஒருத்தியை ஒருத்தி அவரவர் கைகளால் சங்கிலி போல இணைத்து, பிணத்தின் முன்னாலே சுற்றிச் சுற்றி வட்டமாக நகர்ந்து கொண்டு; கும்பலாக, உட்கார்ந்து கொண்டும், நின்று கொண்டும் அழுது கொண்டும் இருந்தார்கள்.

சவம் இருந்த இடத்திற்கு எதிரே பந்தல் ஒன்று இருந்தது. அப் பந்தலிலே படர்ந்திருந்த பாகற்கொடியிலே காயும் பழங்களும்

காய்த்துத் தொங்கி, பார்ப்பவர்கள் மனத்தை ஈர்த்துக் கொண்டிருந்தன.

அந்த இழவு வீட்டின் கும்பலிலே கூடி அழுது கொண்டிருந்த பெண் ஒருத்தி, தன்னுடன் வந்திருந்த இன்னொரு பெண்ணுக்குப் புரியும்படியாக, பாட்டோடு பாட்டாக, ''பந்தலிலே பாவக்காய், பந்தலிலே பாவக்காய்'' என்று பாடிக்கொண்டே அழுதாள். மூக்கைச் சிந்தித் தரையிலே போட்ட அவளது சினேகிதி; அவளுக்குப் பதில் கூறும் ஜாடையில், 'போகையிலே பாத்துக்குவோம், போகையிலே பாத்துக்குவோம்', என்று பாடி அழுது கொண்டே இருந்தாள்.

இவர்கள் இருவரும் இப்படிப் பாடிய பாட்டைக் கேட்ட வீட்டுக்குச் சொந்தக்காரி, தானும் பாட்டோடு பாட்டாக, 'அது விதைக்கல்லவோ விட்டிருக்கு, அது விதைக்கல்லவோ விட்டிருக்கு, என்று எச்சரித்தபடியே அழுது கொண்டிருந்தாள்.

இதற்குள் சாவு வீட்டிற்கு எதிரிலே தாரை, தப்பட்டைகள் முழங்கின. சங்கும் ஊதிக் கொண்டே இருந்தது. சேமகண்டமும் வாசிக்கப்பட்டு அந்த வீடு அழுகுரலோசையுடன் சோகமயமாக இருந்தது.

கிராமத்து மக்களில் சிலர், 'செத்துப் போனது யாரப்பா?' என்று இழவு வீட்டின் திண்ணையிலே உட்கார்ந்து கொண்டிருந்தவர்களைக் கேட்ட போது, ''கவுண்டர் வீட்டு விருந்தாளியப்பா அவர், அவருக்கு ஆதரவு யாருமில்லை. ஒண்டிக்கட்டை கலியாணம் ஆகாத தனிக்கட்டை. தனது தம்பியைப் பார்க்க வந்த இடத்தில் திடீரென்று மாரடைப்பு வந்து விட்டது. போயிட்டாம்பா மனுஷன்'' என்று சோகமாகக் கூறி, செய்தியைப் பரப்பி விட்டார்கள்.

இழவு வீட்டுக்கு வந்தவர்கள் நெருப்பிலே விழுந்த பூப் போல வாடிக்கருகிக் காட்சி தந்தார்கள். அவ்வளவு நல்ல மனிதராம் அவர்!

அப்போது, வ.வே.சு.ஐயர் இந்த வீட்டுக்கு இழவு விசாரிப்பதற்காக வந்திருப்பதாக ஒற்றர்கள் மூலமாகச் செய்தியறிந்த பிரிட்டிஷ் போலீசார் அந்த வீட்டைத் திடீரென்று சுற்றிச் சூழ்ந்து கொண்டார்கள். இதைப் பார்த்த கிராம மக்கள் நம்ம ஊருக்கு வெள்ளைக்காரப் போலீசா? என்று திகைத்து விட்டார்கள்.

பிணம் உள்ள வீட்டுக்குள் போலீசார் சென்று விசாரித்தார்கள். மாரடைப்பால் சின்னக் கவுண்டர் தம்பி மாண்டுபோனார் என்பதைத் தெரிந்ததும் போலீசார், சாவு வீட்டிலே கலவரம் ஏற்படக் கூடாது என்ற பெருந்தன்மையோடு, அவரவர் பூட்ஸ்கள், தொப்பிகளைக் கழற்றிவிட்டு அந்த இடத்திலேயே மண்டியிட்டு ஜபம் செய்து விட்டு, வீதிக்கு வந்து, வீட்டுக்கு வருவோர் போவோரை அடையாளம் பார்த்து உற்று நோக்கிக் கொண்டே இருந்தார்கள்.

அவர்களுக்கு வ.வே.சு.ஐயரை அடையாளம் தெரியாது. அதனால், ஐயர் பாரிஸ்டர் பட்டப் படிப்புக்குச் செய்து கொண்டே விண்ணப்ப மனுவில் லண்டனில் எடுக்கப்பட்டு ஒட்டப்பட்டிருந்த போட்டோவைப் பெரிய அளவிலே எடுத்து, ஆளுக்கு ஒன்றாக அவர்களது கைகளிலே வைத்திருந்து, ஒவ்வொரு ஆள் முகத்தையும் உற்று நோக்கியபடியே இருந்தார்கள். எப்படியும் சாவு வீட்டுக்குள்ளே போனவர் வெளியே வந்துதானே ஆகவேண்டும் என்று சாவு வீட்டுத் தெரு வாசலிலும், திண்ணையிலும் அவர்கள் உட்கார்ந்து விட்டார்கள்.

இதற்கிடையே தாரை, தப்பட்டைகள் சங்கோசை, சேமகண்ட ஒலிகளும் எழுந்தன. கிராமத்து மக்களிலே சிலர் போதையோடு மரணக் கூத்தாட்டத்தை ஆடிக் கொண்டே இருந்தார்கள்.

பிரேதம் தூக்கி வரப்பட்டு வீதியிலே இருந்த பாடையிலே வைக்கப்பட்டது. பிணத்தின் நெற்றியிலே திருநீற்றுப் பட்டையும், பெரிய சந்தனப் பொட்டும் வைக்கப்பட்டிருந்தது. கொள்ளிச் சட்டிக்காரன் பிணத்தின் முன்னாலே நின்று கொண்டு அழுதான்!

இவை எல்லா வற்றையும் கண்ட கிறித்துவப் போலீஸார், நமது நாட்டில் மரணமடைந்து விட்டால் இப்படியெல்லாம் ஆடிப்பாடிச் சடங்குகள் செய்வதில்லையே என்று நினைத்து, தமிழ்ப் பிணம் சுடுகாடு போகும் கடைசிக் காட்சியைக் கண்டு ஆச்சரியப் பட்டார்கள். போலீசாரிலே ஒருவர் பிணம் புதைக்கும் இடுகாடு எங்கே என்று கேட்டார். அதற்குக் கிராமத்து மணியக்காரர். தமிழ் நாட்டில் சிலர் பிணத்தைப் புதைப்பார்கள்; பலர் எரித்து விடுவார்கள். இந்தப் பிணம் வயது மூத்த பிணம் எரிக்கப்படும். அதோ நெருப்புச் சட்டி; என்று கொள்ளி போடுபவன் கையிலே இருந்த நெருப்புச் சட்டியைக் காட்டினார்!

சவ ஊர்வலம் புறப்பட்டது! தாரை தப்பட்டைகள் வேகமாக, ஒலித்தன! சங்கும் சேமகண்டமும் வாசிக்கப்பட்டது. பண்டாரம் திருவாசகம் பாடியபடியே அவரவர்களிடம் காசு பெற்று, அவர்கள் பெயரைக் கூறி வாழ்த்திக் கொண்டே நகர்ந்தான்.

சவ வீட்டிலே எல்லாம் பெண்களாகவே இருந்ததால் உள்ளே சென்று விசாரிக்க அச்சப்பட்டு, போலீசாரும் பிண ஊர்வலம் பின்னாலே வேடிக்கைப் பார்த்துக் கொண்டே வந்தார்கள்!

நூறு பேர்களுக்கு மேல் கும்பலாக வந்த கூட்டத்தில், அரிச்சந்திரன் கல்லருகே பிணம் வந்த போது, பத்து பன்னிரண்டு பேரே இருந்தார்கள். அவர்கள் முகங்களை எல்லாம் திரும்பத் திரும்பப் பார்த்து விட்டு, ஐயரைக் காணாமையால், ஒற்றர்கள் தந்த செய்தி தவறு என்று எண்ணி, தங்களது ஜீப்பிலே ஏறிக் கொண்டு போலீசார் சென்று விட்டார்கள்.

சுடுகாடு வந்தடைந்தது சவம்! பாடையைவிட்டு இறக்கிச் சடங்குகள் நடந்து கொண்டிருந்தன. அப்போது, வேக வேகமாக வந்த ஒருவர், எல்லா போலீசாரும் ஜீப் வண்டியிலே ஏறிக் கொண்டு போய்விட்டார்கள் என்றார்.

கொள்ளிச் சட்டி ஏந்தி வந்தவன் சுற்றும் முற்றும் மீண்டும் பார்த்தான். பிறகு, பிணத்தின் காதருகே சென்று, ஏதோ ரகசியம் கூறுவது போலக் குனிந்தான். செத்துவிட்ட பிணம் போல பாடையிலே படுத்துக் கிடந்தவர் திடீரென எழுந்து நின்றார். பாடை தூக்கிகளும், பின்நடை, முன்நடை போட்டவர்களும், அடுக்கி வைக்கப்பட்டிருந்த விறகு வரட்டிப் படுக்கை மீது கொள்ளிச் சட்டி நெருப்பைக் கொட்டி, கற்பூரம் ஏற்றி நெருப்பை மூட்டி எரித்தார்கள்!

எரிந்தது; வெள்ளையர் ஆட்சி. சுடர் விட்ட சோதியாக வெளிச்சம் தந்தது இந்திய சுதந்திரம்! பாடை தூக்கிகளும், நெருப்புச் சட்டி ஏந்தியும், வ.வே.சு.ஐயரும் அந்த நெருப்புச் சோதியைப் பார்த்து விலா நோகச் சிரித்தார்கள்!

சின்னபாபு சமுத்திரம் ஊரருகே உள்ள சிற்றூரில் தனது நண்பரைக் கண்டு பேசிக் கொண்டிருந்தபோது, ஒற்றர்களால் துப்பறிந்து உண்மையைத் தெரிந்து கொண்ட பிரிட்டிஷ் போலீசாரிடம் இருந்து தப்பிக்க, அந்தப் போலீஸ் படையை ஏமாறவைக்க, வ.வே.சு.ஐயரும், அவரது ஆபத்துக்கு உதவிய நண்பரும் போட்ட வியூகம் இது.

ஆங்கிலேயர் ஆட்சியை வேரறுக்கும் சுதந்திர உணர்ச்சியுடைய ஊர்மக்களின் மன ஒற்றுமையும் ஐயருக்கு உதவியது. பிரிட்டிஷ் ஆட்சியை இந்தியாவிலே மட்டுமன்று, லண்டன் மாநகரிலேயும் பலதடவை ஏமாற வைத்த சுதந்திரப் போராளி வ.வே.சு.ஐயர். அத்தகைய ஒரு வீர, தீரரின் செயல்களை, வரலாற்றை, அவரது எண்ணங்களை அடுத்து வரும் அத்தியாயங்களிலே படிப்போம்.

# வ.வே.சு. ஐயரிடம் தோற்றது ஸ்காட்லாண்ட் யார்டு போலீஸ்!

சூரியன் மறையாத பிரிட்டிஷ் பேரரசில் இந்தியாவின் அரசப் பிரதிநிதியாக இருந்தவர் லார்டு கர்ஸான்! அவர் ஆங்கிலேய ஆட்சியின் ஆதிக்க வெறியர். அதிகார அகம்பாவத்தில், ஆணவ தந்திரத்தில் வல்லவராக விளங்கியவர்! அவர் ஆணவத்திற்குக் காரணம், சூரியன் உள்ளளவும், கடல் நீர் இருக்குமளவும் பிரிட்டிஷ் பேரரசே இந்தியாவை ஆட்சி செய்ய வேண்டும் என்ற எண்ணமாகும்.

கர்ஸான் பிரபு காலத்தில், இந்தியாவில் இந்திய தேசிய காங்கிரஸ் மகா சபையின் விடுதலைப் போராட்டம் தீவிர மடைந்து கொண்டிருந்தது. எப்படியும் போராட்டத்தை அழித்தே தீருவது என்ற முடிவிலே அவர் பணியாற்றிக் கொண்டிருந்தார்!

இந்தியாவுக்கு சுதந்திரம் தேவை என்று மிகத் தீவிரமாகப் போராட்டம் நடத்திய மாநிலங்களிலே ஒன்று தமிழ் நாடு, மற்றொன்று வங்காளமாகும்.

தமிழ் நாட்டிலே கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரம் பிள்ளை, சுப்பிரமணிய சிவா, தேசிய கவி சுப்பிரமணிய பாரதியார், திரு.வி.கலியாண சுந்தர முதலியார், சத்திய மூர்த்தி ஐயர், சேலம் விசயராகவாச் சாரியார், வ.வே.சு.ஐயர், கு. காமராஜ் போன்ற எண்ணற்றவர்கள் விடுதலைப் போராட்டத்திலே பங்கேற்று தங்களது உடல், பொருள், உயிர் அனைத்தையும் சுதந்திர தேவிக்காகப் பலிகொடுக்க உழைத்த மாவீரர்கள் ஆவர்.

வங்காள மாநிலத்திலே தோன்றிய விபின் சந்திர பாலர், சித்த ரஞ்சன் தாஸ், சுபாஷ் சந்திர போஸ், அரவிந்த கோஷ் போன்றவர்கள் அவரவர் தேசிய உணர்வுகளிலே புயல்போல உழைத்து சுதந்திர உணர்ச்சியை மக்களிடம் வேகமாகப் பரப்பி வந்தார்கள்!

வங்காள மாநிலத்தில் விடுதலைப் போராட்டம் கர்ஸான் பிரபு காலத்தில் கடும் புயலாக வீசிக் கொண்டிருந்ததைக் கண்ட அவர், வங்க சுதந்திர வீரர்களின் போராட்டச் செயல்களின் வேரை அறுத்தெறியத் திட்டமிட்டார்.

அன்றைய இந்திய அரசு நிர்வாகத்தில், வங்காளம் மிகப் பெரிய மாகாணமாக இருந்தது. அதை இரண்டாகப் பிரித்து விட்டால், வங்காள மக்களின் தேசிய உணர்ச்சியின் பலம் வலிமை யற்றதாகி விடும். அதனால், வங்காளிகளின் சுதந்திரப் போராட்டச் சக்தி குன்றி விடும் என்று எண்ணினார் கர்சன் பிரபு.

என்ன காரணத்தைக் கூறி வங்காள மாநிலத்தை இரண்டு துண்டாக்குவது என்று கர்ஸான் யோசித்தார்! நிர்வாக வசதிக்காக வங்கத்தை இரண்டாகப் பிரிப்பது என்ற திட்டத்தை மக்கள் முன்பு அவர் வைத்தார். 1905-ஆம் ஆண்டில் வங்காள மாநிலத்தை இரண்டாகப் பிரித்தார் கர்ஸான் பிரபு!

வங்காளத்தைப் பிரித்து விட்டால், விடுதலைப் போராட்ட வேகம் தணியும்; வங்காள மக்களின் பலம் குன்றும் என்ற கர்ஸான் பிரபுவின் எண்ணம். அவர் நினைத்தபடி வெற்றி பெறவில்லை. அதற்கு நேர்மாறாக, வங்காள மக்களின் சுதந்திர உணர்ச்சி முன்பு இருந்ததை விட மேலும் பன்மடங்கு வேகமாக வளர்ந்தது!

ஒற்றுமையாக இருந்த வங்காள மக்களைக் கர்சன் பிரபு பிரித்து வைத்துவிட்டானே என்ற மனக் கொதிப்பால், எல்லா மக்களும் ஒன்று கூடி ஆங்கிலேயர் ஆட்சியை மட்டுமன்று, தனிப்பட்ட முறையில் வைசிராய் கர்சானையும் கர்ண கடூரமாக எதிர்க்க

ஆரம்பித்து விட்டார்கள். அவர்களிடையே தேசிய உணர்வு ஒரு புதிய உத்வேகத்தோடு கொதித்தெழுந்தது. அன்று வரையில் இல்லாத எதிர்ப்பைக் கர்சான் நிர்வாகத்திடம் அவர்கள் காட்ட ஆரம்பித்துவிட்டார்கள். வைசிராயும், தனது அதிகாரத்தை வரம்பு மீறிப் பயன் படுத்தி மக்களைப் பழிவாங்கிய படியே ஆட்சியை நடத்தி வந்தார்.

இதைக் கண்ட வங்காள உழவர்கள், தொழிலாளர்கள், பள்ளி ஆசிரியர்கள், மாணவர்கள் எல்லாரும் ஒருமுகமாகப் போராட்டத்தில் ஈடுபட்டார்கள். தேசியக் கல்வியைப் பரப்புவதற்குரிய பள்ளிகளும், கல்லூரிகளும் அவர்களால் ஏற்படுத்தப்பட்டன. தெருக்கூத்துக்கள் மூலமாகவும், தேசப் பற்றூட்டிடும். பாடல்கள் நாடகங்கள் மூலமாகவும் மக்களிடையே சுதந்திர உணர்ச்சியை மூட்டினார்கள். இந்த நேரத்திலே இளைஞர்கள் என்ன செய்தார்கள் தெரியுமா?

வெள்ளையர் ஆட்சியை எப்படி வீழ்த்துவது என்று அவர்கள் திட்டம் போட்டார்கள். எந்தெந்த இங்கிலீஷ் காரன் கர்சானுக்கு கைக் கூலியோ; அல்லது யார்யார் கர்சானுக்குத் தூண்டு கோலாக இருந்து தேசியப் போராட்ட வீரர்களைத் துன்புறுத்தினார்களோ, அல்லது வைசிராய்க்கு ஏவலர்களாக இருந்தார்களோ அவர்களை எல்லாம் கொன்றொழிப்பது என்ற முடிவுக்கு வந்து அவர்கள் சதித் திட்டம் தீட்டினார்கள்! அவர்களை எங்கெங்கே கொல்வது, எப்படியெப்படிக் கொல்வது என்று திட்டம் வகுத்தார்கள். அப்போதுதான் சுயராச்சியம் கிடைக்கும் என்ற நம்பிக்கைக்கு அவர்கள் பலியானார்கள்! அதன் விளைவு என்ன?

வங்காள மாநிலம் பிரிக்கப்பட்டு விட்டாலும் கூட, எல்லாப் பகுதி சிற்றூர், பேரூர், நகரங்களில் இளைஞர்கள் இரகசியச் சங்கங்களை உருவாக்கி அதனையே சதிக் கூடமாகவும் மாற்றிக் கொண்டார்கள். ஆசிரமங்கள் பல ஆங்காங்கே அவர்களால் உருவாக்கப்பட்டு அங்கேயும் இதே சிந்தனை ரேகைகளே ஓடின!

அந்தச் சங்கங்கள் ஒவ்வொன்றிலும் எண்ணற்ற இளைஞர்கள் உறுப்பினரானார்கள். அவர்கள் உடற்பயிற்சி, குஸ்தி, மல்யுத்தம், வேல்கொம்புச் சண்டை ஒத்திகைகளை நாள்தோறும் நடத்தி னார்கள். இன்னும் தீவிரமாகச் சொல்வது என்றால், குத்துச் சண்டை, வாட்போர், குதிரையேற்றம், குறிபார்த்துக் குண்டுவீசுதல், துப்பாக்கி ஏந்திச் சுடுதல் போன்ற வீராவேசக் கலைகள் வேறு என்னென்ன உண்டோ அவற்றையெல்லாம் ஒத்திகை நடத்திப் பயிற்சி பெற்றார்கள்.

கல்கத்தா நகரிலே உள்ள காளிகோயிலுக்குள் சென்று, வாளால் தங்கள் மார்பைக் கிழித்து ரத்தம் எடுத்து, அதைக் கையிலே தேங்க வைத்து, 'தாயே! என் தாய் நாடான இந்தியாவை வெள்ளையர் களிடம் இருந்து விடுவித்திட எங்கள் உடலுக்கும், நெஞ்சுக்கும் உரம் தா! அதற்காக எமது இன்னுயிரையும் தரத் தயார்! இதோ காணிக்கையாக்குகின்றோம்' என்று காளிதேவி முன்பு அவரவர் குருதியைக் கொட்டி அர்ப்பணித்தார்கள்; சபதம் எடுத்துக் கொண்டார்கள்.

அந்த வாலிபர்கள் வெறும் சூளுரை ஏற்றுக் கொண்டதோடு மட்டும் நிற்க வில்லை. எப்போது? எங்கே? வாய்ப்புக் கிடைக்கும் என்று எதிர்பார்த்தார்கள்! இங்கிலீஷ்காரர்களைப் பழிக்குப் பழிவாங்கும் திட்டத்தை இந்தியாவிலே மட்டுமன்று, வேறு எந்த நாடானாலும் அங்கேயும் சென்று நீண்ட நாட்களானாலும் தங்கிப் பழிவாங்கவும் தயாராகி ஒவ்வொருவராக ஒவ்வொரு நாட்டுக்கும் சென்று கொண்டே இருந்தார்கள். அதே நேரத்தில், ஆங்கிலேயனைத் தனிப்பட்ட நிலையிலும், குடும்பத்தோடும் கொன்று குவித்து, இங்கிலீஷ் பிறவிகளின் கரு உருக்களை அழிப்பது என்ற கடுங்கோப வஞ்சத்துக்கு அந்த இளைஞர்கள் தோள்தட்டிப் புறப்பட்டுவிட்டார்கள்.

யார்யார் இங்கிலீஷ் காரனுக்கு வால் பிடித்து ஜால்ரா தட்டினானோ, அவனை யெல்லாம் கூட ஒழிப்பது என்ற முடிவுக்கு அந்த இளைஞர்கள் தள்ளப்பட்டார்கள்.

இலண்டன் மாநகர் நோக்கி ஒரு கும்பல் புறப்பட்டது. பழிவாங்கும் படலத்தை நிறைவேற்றுவதற்காக! துரோகிகள் யார்யார் என்று பட்டியலிட்டுக் கொண்டு அவரவர் முகவரி களுடன் அந்தக் கும்பல் லண்டன் சென்றது கப்பலில்!

எந்தக் கர்சான் வங்காள மாகாணத்தை இரண்டாகப் பிளந்தானோ, அவனையே இரண்டாகப் பிளக்க இந்திய இளைஞர் குழு இரண்டு மூன்றாகப் பிரிந்து பழிப்பணியிலே இறங்கியது! அந்தக் குழுக்களிலே ஒன்றுதான், வைசிராய் கர்சான் பிரபு ஒரு கூட்டத்தில் கலந்து கொள்ளச் சென்றபோது அவர்மீதே வெடி குண்டை வீசியது! தலை தப்பினால் போதும் என்று கர்சான் ஓடி ஒளிந்து கொண்டான்! அப்போதும் அவரை வாலிபர் பட்டாளம் விடவில்லை! அவர்கள் வெளியே காத்துக் கொண்டிருந்தபோது போலீஸ் பட்டாளம் குவிக்கப்பட்டு விட்டதால் கர்சான் உயிர்தப்பி ஓடினான்!

பயங்கரச் செயல்களில் இவ்வாறு ஈடுபட்ட வாலிபர்கள் மீது பிரிட்டிஷ் அரசு பயங்கரவாதிகள் என்ற பட்டத்தைச் சூட்டி அவர்களைப் பிடிக்க சட்டங்களை ஆயுதங்களாக்கி வைத்துக் கொண்டு காத்திருந்தது. அல்லும் பகலும் இந்தப் பயங்கர வாதிகள் எங்கேதங்களது உயிரைப் பழிவாங்கி விடுவார்களோ என்று பயந்தபடியே பல வெள்ளையர் குடும்பம் குடல் நடுங்கி விழித்தபடியே இருந்தது-அவரவர் வீடுகளில் இப்படிப்பட்ட அதிகாரிகளுக்கும், அவர்களது குடும்பங்களுக்கும் பாதுகாப்புக் கொடுப்பதே அப்போதைய அரசுக்குரிய வேலையாக இருந்தது.

வங்காள மாகாணத்தை இரண்டாகப் பிளந்து விட்டால், வங்காளிகளின் சுதந்திர தேசிய உணர்ச்சியை அடக்கி அழித்துவிட முடியும் என்று எண்ணிச் செயல்பட்ட கர்சான் ஆட்சியின் வெறிப்பணி, குளிக்கக் குளத்திலே இறங்கியவன் சேறாபிஷேகக் கோலத்தோடு வெளியே வந்த விகார கோர வடிவமாகத் திகழ்ந்து விட்டது. இது தான் வங்காளப் பிரிவினைக்குப் பிறகு இந்தியாவின்

நிலையாக இருந்தது. இந்திய வாலிபர்களின் சுதந்திரப் போராட்டச் செயல்கள் எல்லாம் பயங்கர வாதம் என்ற பெயரில் இங்கிலாந்து நாடு முழுவதும் பரவி விட்டன! பிரிட்டிஷ் அரசு தனது சொந்த இனத் தற்காப்புக்காக இந்தச் செயலைக் காட்டுத் தீயைப் போல பரவ இடம் கொடுத்து விட்டது.

வங்காளத்தில் மட்டுமா இந்தத் தீவிரவாத தேச பக்தி தோன்றியது? கர்சான் பிரபு எங்கே தோன்றி ஆடிப்பாடிக் கல்வி கற்று சுகபோக வாழ்வு கண்டு அரசு ஆட்சிப் பணியை ஏற்றானோ. அந்த மண் முழுவதும் பயங்கரவாதப் பீட பூமிபோலவே திகழ்ந்து வந்தது. லண்டன் மாநகரிலும் பயங்கர வாதம் படுவேகமாகவே பரவியது எனலாம்.

இந்தியாவிலே இருந்து பாரிஸ்டர் படிப்புப் படிக்க லண்டன் மாநகர் சென்றவர்களும், பல்வேறு விவகாரங்களுக்காக லண்டன் சென்றவர்களும், லண்டன் சென்றவுடன் பயங்கரவாதிகளாகவே மாறிவிட்டார்கள். வன்முறை ஒன்றைத் தவிர வேறு வழியே கிடையாது இந்தியா தனது சுதந்தரத்தைப் பெற்றிட என்பதை; இந்திய இளைஞர்கள் நம்பினார்கள். இவர்கள் எல்லாரும் லண்டனிலே உள்ள 'இந்தியா விடுதி' என்ற கட்டடத்திலே தங்கலானார்கள்.

இலண்டன் மாநகரிலே உள்ள "இந்தியா விடுதி" என்ற உணவு விடுதியில், இந்தியாவிலே இருந்து கல்வி கற்கவோ, வேறு பணிகள் காரணமாகவோ வருபவர்கள் எல்லாரும் தங்கி அவரவர் பணிகளைப் பார்ப்பார்கள். அதனால், அங்கு தங்குவோர் அனைவரும் ஒருவர்க்கு ஒருவர் அறிமுகமாகி, இந்திய விடுதலைப் போர் பற்றிய முழு விவரங்களை உணர்ந்து அதற்கேற்றவாறு நடந்து கொள்வார்கள். அந்த விடுதிக்குள் 'சுதந்திர இந்தியா' என்ற நிறுவனத்தை இந்திய வாலிபர்கள் துவக்கி நடத்தி வந்தார்கள்.

அந்த இந்தியா விடுதியிலேயும் சரி, 'சுதந்திர இந்தியா' நிறுவனத்திலும் சரி, இந்தியாவை வன்முறையில் எவ்வாறு

விடுவிக்கலாம் என்ற திட்டத்தைப் பற்றியே அவர்கள் சிந்தித்து செயல்படுத்துவார்கள். இந்த விடுதியிலே தங்கும் இந்தியர்கள் ஒன்றுகூடி அடிக்கடி கூட்டம் நடத்தி, இந்திய சுதந்திரம் பற்றி விவாதித்து முடிவு காண்பார்கள்.

இலண்டன் நகரிலே உள்ள ஸ்காட்லாண்ட் யார்டு என்ற இரகசியப் போலீஸ் நிறுவனம் உலகிலேயே மிகப் புகழ்பெற்ற போலீஸ் பிரிவாகும். அந்தப் பிரிவில் துப்பறியும் வல்லமை பெற்ற பெரும் நிபுணர்கள் இருக்கிறார்கள். இங்கிலாந்து நாட்டிலும் சரி, அல்லது உலகின் மிகப் பெரும் மா நகர்களிலே ஒன்றான லண்டன் நகரிலும் சரி, எது, எந்த மூலையிலே, எப்போது நடந்தாலும் சரி, அடுத்த பத்தாவது நிமிடத்திலேயே ஸ்காட்லாண்டு யார்டு போலீசுக்கு உடனே முழுவிவரமும் தெரிந்துவிடும். பிறகு அந்த விவரத்தை வைத்துக் கொண்டு மேலாலுள்ள நடவடிக்கைகளை அந்தப் போலீஸ் துறை கண்டு பிடித்து விடும். அவ்வளவு உலகப் புகழ் பெற்ற பாராட்டுதல்களைப் பெற்ற துறை ஸ்காட்லாண்டு யார்டு போலீஸ் துறை.

இந்நிலையில், இந்தியா விடுதியில் நடைபெறும் சம்பங்கள் எல்லாமே ஸ்காட்லாண்ட் யார்டு போலீஸ் துறைக்கு அவ்வப்போது தெரிந்து வந்தது. அதனால், அந்த ரகசியப் போலீஸ் துறை அந்த விடுதியில் நடைபெறும் எல்லா நிகழ்ச்சிகளையும் எச்சரிக்கையுடன் கவனித்து வந்தது. நம்மை ஸ்காட்லாண்ட் யார்டு போலீஸ் துறை ரகசிய மாகக் கவனிக்கின்றது என்பதை இந்திய இளைஞர்களும் சந்தேகமின்றித் தெரிந்து கொண்டார்கள்.

இந்திய இளைஞர்கள் அனைவரும் பாரிஸ்டர் சட்டப் படிப்பு படிக்க வந்தவர்கள் தானே! அதனால், தாங்கள் செய்யும் எந்தவிதச் செயலையும் எவரும் கண்டுபிடிக்க முடியாதபடி தடயங்களோ, அதற்கான ஆதார எழுத்து வடிவச் சான்றுகளோ ரகசியப் போலீசாரிடம் சிக்கிவிடாதபடி மிக எச்சரிக்கையுடன் விழிப்பாகச் செயல்பட்டு வந்தார்கள்.

மிகுந்த பாதுகாப்புடனும், கவனத்துடனும் எதையும் செய்யப் பழகிவிட்ட இந்திய வாலிபர்களை ரகசியப் போலீசாரால் ஒன்றும் செய்ய முடியவில்லை. இப்படியே இலண்டன் இரகசியப் போலீசாரும் இந்திய இளைஞர்களும் இருவரில் ஒருவர் எப்போது சிக்குவார்கள்; பழிதீர்த்துக் கொள்ளலாம் என்ற சந்தர்ப்பத்தை எதிர்பார்த்து இருந்தார்கள்.

இந்த நேரத்தில், இங்கிலீஷ்காரர்களை எல்லாம், பொதுவாக இங்கிலாந்து நாட்டு மக்களை எல்லாம், குறிப்பாக லண்டன் மாநகரத்து ஆங்கிலேயர்களுக்குகெல்லாம் ஏன் பிரிட்டிஷ் ஆட்சிக்கே அதிர்ச்சி தரும் சம்பவம் ஒன்று நடந்தது.

மதன்லால் திங்க்ரா என்ற இந்திய தீவிரவாத இளைஞன், லண்டன் மாநகரிலே இரண்டு மூன்று மாதங்களாகத் தங்கி யிருந்தான்! இந்திய சுதந்திரத்தை வன்முறைகளால் பெறமுடியும் என்ற குறிக்கோளை உடையவன் அவன். வங்கத்தை இரண்டாகப் பிளந்தானே கர்சான் பிரபு, அவனுக்குக் கைக்கூலியாக, எடுபிடியாக, ஆள் காட்டியாக, லார்டு கர்சானின் ஆணவக்குரலை இந்தியர் மேல் திணித்து அமுல் படுத்தும் அதிகாரி ஏவலாளராக இருந்த கர்ஸான் வைலி, லால்காக்கா என்ற இரண்டு வெள்ளைக் காரர்களை, அவர்கள் பணி ஓய்வு பெற்று லண்டன் திரும்பிய சூட்டோடு சூடாக மதன்லால் திங்க்ரா துப்பாக்கியால் சுட்டுக் கொன்று விட்டான்.

அந்த வெள்ளைக்கார அதிகாரிகள் இருவரும், இந்தியாவிலே கர்ஸான் ஆலோசகர்களாக இருந்து இந்திய மக்களுக்கு எண்ணிலாத தீமைகளைச் செய்தவர்கள். அவர்களை எப்படியும் சுட்டுக் கொல்வது என்ற குறிக்கோளுடன் மதன்லால் திங்க்ரா லண்டனிலே தங்கி இருந்தான். அந்த ஆங்கிலேயர்களைச் சுட்டுக் கொன்ற மதன்லால் திங்க்ராவை. லண்டன் போலீஸ் கைது செய்து சிறையிலே அடைத்தது.

வழக்கு லண்டன் நீதிமன்றத்தில் நடந்து கொண்டிருந்தது. மராட்டிய சிங்கம், பாரிஸ்டர் படிப்புப் படித்துத் தேர்வு பெற்றுப்

பட்டம் பெற இருந்த விநாயக ராவ் சாவர்கர் எனப்படும். வி.டி.சாவர்கரை பிரிட்டிஷ் அரசு திங்க்ரா வழக்குடன் இணைத்து அவரையும் கைது செய்து அப்போது சிறையிலே அடைந்திருந்தது.

சிறைக்கு அடிக்கடி சென்ற சாவர்கரைச் சந்தித்துப் பேசுகின்ற ஒருதாடிக்கார இளைஞனைப் போலீசார் கண்காணித்து வந்தார்கள். அந்த இளைஞர் மீது ஸ்காட்லாண்ட் யார்டு போலீசுக்கு சந்தேகம் ஏற்பட்டது. யார் இந்தத் தாடிக்கார வாலிபன்?

அந்த வாலிபரைக் கைது செய்யப் போலீஸ் திட்டமிட்டுக் கொண்டிருந்தது. ஆனால், அந்தத் தாடிக்காரரோ போலீஸ் செய்யப் போகும் செயலை முன் கூட்டியே தெரிந்து கொண்டதால் எச்சரிக்கையாக நடக்கலானார்! போலீஸ் தன்னைக் கைது செய்ய வர இருக்கிற நேரத்தையும், நாளையும் தெரிந்து கொண்ட தாடிக்கார இளைஞர். இலண்டன் நகரை விட்டு வெளியேறத் தயாரானார்!

பாதிராத்திரி வேளை! லண்டன் மாநகர மக்கள் உறக்கத்தில் ஆழ்ந்திருந்தார்கள். திடீரென ரகசியப் போலீசார் இந்தியா விடுதியிலே புகுந்து, முக்கிய பகுதிகளை எல்லாம் சோதனை செய்து வந்தனர். போலிசார் விடுதியை நாற்புறமும் சூழ்ந்து கொண்டார்கள்.

ஒரே ஓர் அதிகாரி மட்டும், மாறு வேடத்தில் உணவு விடுதியின் வாயிற்படி வழியாக உள்ளே நுழைந்து கொண்டிருந்தார். அந்த நேரத்தில் குடுமியும், தாடியும் வைத்துக் கொண்டும், திடகாத்திரமான உடற்கட்டுடனும், பார்ப்பதற்கு ஒரு பராக்கிரம சாலியைப் போல உள்ள மனிதர் ஒருவர், அந்த விடுதியிலே இருந்து வெளியே வந்து கொண்டிருந்தார். அவரது கையில் பெட்டி ஒன்று இருந்தது.

தாடிக்காரரிடம், மாற்றுடையில் வந்த போலீஸ் அதிகாரி ஒரு கவரை நீட்டினார்.

தாடிக்காரர் அசகாய சூரர், அக் கவரைத் தனது கையால் கூடத் தொடவில்லை. ஆனால் அதன் மீது எழுதப் பட்டிருந்த பெயரை

படித்தார். பிறகு, கவரைத் தம்மிடம் நீட்டிய போலீசைப் பார்த்து, ''நீங்கள் யாருக்கோ எழுதப்பட்டுள்ள கவரை என்னிடம் காட்டித், தருகிறீர்கள். உள்ளே சென்று விசாரித்துப் பாருங்கள்! நான் வருகிறேன்'' என்று கூறிக் கொண்டே மெதுவாக அவ்விடத்தை விட்டு வெளியே சென்றார்!

அந்தத் தாடிக்காரருடைய பேச்சில் அச்சமோ, பயமோ, திணறலோ, பதற்றமோ, பரபரப்போ, முகக்களை இழப்போ, அல்லது மாறுதலோ கொஞ்சமும் இல்லை. அவர் பேசும் போது தெளிவாகவும், நறுக்குத் தெறித்தாற் போலவும், அருமையான அழகான ஆங்கில மொழியிலே பேசியதைக் கண்ட அந்தப் போலீஸ் அதிகாரி மெய் மறந்து நின்றார்!

பின்னர் தாடிக்காரர் கையிலிருந்த பெட்டியின் மேல் பாகத்தில் வி.வி.எஸ்.என்று எழுதப் பட்டிருந்ததைக் காட்டி, கவர்மீது எழுதப்பட்டிருக்கும் பெயருக்கு உரியவர் இல்லை என்கிறீர்கள். உங்களுகடைய பெட்டி மீதும் இதே பெயர் சுருக்கமாக எழுதப்பட்டுள்ளதே, இதன் பொருள் என்ன? என்று எதிர்பாராத ஒரு கேள்வியைக் கேட்டு விட்டார்.

தாடிக்காரர், தடுமாறாமல், ''என் பெயர் வி. விக்ரம் சிங் அதையே சுருக்கி நான் வி.வி.எஸ். என்று எழுதியிருக்கிறேன். உங்களுக்கு மேலும் ஏதாவது சந்தேகமிருந்தால், என் பெட்டியைத் திறந்து பார்த்துக் கொள்ளுங்கள்.'' என்று கூறிக் கொண்டே தனது கையிலே இருந்த பெட்டியை மாறு வேடத்திலிருந்த போலீஸ் அதிகாரியிடம் கொடுத்தார்.

ஒரு போலீஸ்காரரின் கேள்விக்கு எந்த விதத் தடுமாற்றமும் இல்லாமல், பதில் டக்டக்கென்று நறுக்குத் தெறித்தாற் போலத் தயக்கமேதும் இல்லாமல் வந்ததால், தாம் தேடி வந்த வி.வி.எஸ். என்பவர் தாடிக்காரர் அல்லர் என்பதை முடிவு செய்து கொண்டு, அவரிடம் 'சாரி, என்று கூறிவிட்டு போகுமாறு விடை கொடுத்தார் அந்த அதிகாரி.

மாறு வேடப் போலீஸ் அதிகாரி விடுதிக்குள் போனார்! ஒவ்வொருவரின் முகத்தையும் கூர்ந்து நோக்கினார்! அனைவரின் வரலாற்றையும் பொறுமையோடு புலன்விசாரணை செய்தார்! அவர் யாரைத் தேடிவந்தாரோ அவரைக் கண்டு பிடிக்க முடியாமல் தோற்றார் - பாவம்?.

ஸ்காட்லாண்டு யார்டு போலீஸ் அதிகாரியை ஏமாறவைத்துத் தப்பிய அந்தத் தாடிக்காரர் பிரான்ஸ் நாட்டின் தலை நகரான பாரீஸ் நகருக்குப் போய்ச் சேர்ந்தார். அங்கே காமா அம்மையாரின் உதவியோடு தங்கி இருந்தார். இந்தச் செய்தி பல நாட்களுக்குப் பிறகு தான் லண்டன் நகர் ரகசியப் போலீசுக்குத் தெரிந்தது.

தம்மிடம் தந்திரமாகப் பேசி தப்பித்துச் சென்ற அந்தத் தாடிக்காரர்தான், போலீஸ் தேடிக்கொண்டிருந்த இந்திய இளைஞர் என்பதை அந்த ரகசியப் போலீஸ் அதிகாரி அறிந்தார். ஓர் இந்திய இளைஞன், தன்னை - அதாவது உலகப்புகழ் பெற்ற ஸ்காட்லாண்ட் யார்டு ரகசியப் போலீசையே ஏமாற வைத்து விட்டுத் தப்பிச் சென்று விட்டானே, என்று ஆச்சரியத்தில் ஆழ்ந்து போனார்.

பல்வேறு இடங்களிலே மாறுவேடங்களோடு வலம் வந்த அந்தத் தாடிக்காரரை, பிரிட்டிஷ் ரகசியப் போலீஸ் வல்லவர்களால் கண்டு பிடிக்கவே முடியவில்லை.

இந்தியாவுக்கு வந்து சேர்ந்த அந்தத் தாடிக்காரர், புதுச்சேரியிலே இருந்தபடியே, லண்டனிலுள்ள ஸ்காட்லாண்ட் யார்டு போலீஸ் அதிகாரிக்கு, தான் மிக ஜாக்கிரதையாக மீண்டும் இந்தியா வந்து சேர்ந்து விட்டதை தந்தி மூலம் அறிவித்தார்.

பிரிட்டன் ரகசியப் போலீஸ் படையை ஏமாறவைத்த அந்தத் தடிக்காரர் யார் தெரியுமா? அவர்தான் தீவிர தேசபக்தர் வ.வே.சுப்பிரமணிய ஐயர் எனப்படும் வ.வே.சு.ஐயராவார். அவருடைய தீரம் செறிந்த வீர வரலாற்றைத் தொடர்ந்து படிப்போம்.

# தீரம் செறிந்த திருச்சி நகர் தியாகி

திருச்சிராப் பள்ளி என்றழைக்கப்படும் திருச்சி மாநகர் வரலாற்றுப் பிரசித்தி பெற்ற ஒரு சிறப்பான நகரமாகும். இந் நகரைக் கற்றார் திரிசிரபுரம் என்றும் சுருக்கமாகத் திருச்சி நகர் என்றும் அழைப்பார்கள்!

காவிரி நதி இந் நகரில் பாய்ந்தோடுவதால், இந்த மாவட்டம் முழுவதுமே வளம் கொழிக்கும் பகுதிகளாகக் காட்சிதரும். உணவு தந்து உடலோம்பும் உழவர்களும் உணர்வு, தந்து உயிரோம்பும் மன்னர்கள் சிலரும் ஆண்ட பகுதி.

எல்லாவற்றுக்கும் மேலாக, பிறவா யாக்கைப் பெரியோன் எனப்படும் சிவசக்தி நாயகனான சிவபெருமான் திருக்கோயிலான திருவானைக்கா மற்றும் திருவரங்கத்திற்கு எதிர்க்கரையில், காவிரி நதி பாயும் தென்கரையில் இந்தத் திருச்சி மாநகர் அமைந்துள்ளது. இந்த அழகுவளம் கொழிக்கும் நகர் நடுவில் வானளாவி நிற்கும் தாயுமானார் சுவாமி திருக்கோயிலின் திருக்கோலமும், அதன் உச்சியில் பல்லவ மாமன்னது மகுடம் போல் பொலிவுதரும் உச்சிப்பிள்ளையார் கோயிலும், அங்கு வாழ் மக்களின் மதிவளத்தையும், மன நலத்தையும் எடுத்துக் காட்டுவனவாக அமைந்துள்ளன எனலாம்.

காவிரி நதியின் வடகரையில் திருவரங்கம் எனப்படும் ஸ்ரீரங்கம் கோவிலும், திருவானைக் கா என்ற சிவனார் திருக்கோயிலும் தெய்வமணம் வீசி பக்தர்கள் மனம் குளிர்விப்பதை இன்றும் பார்த்து ஆன்ம நேயம் பெறலாம். அது போலவே, வரலாற்றுச் சிறப்புடன்

விளங்கும் மேற்கூரையில்லா வெஃகாளி அம்மனது திருக் கோயிலின் அற்பு தங்களையும் கேட்டு இன்புறலாம்!

இவை போன்ற சிறப்புக்கள் பல பெற்ற திருச்சிராப் பள்ளி நகரின் ஒரு பகுதியாய் விளங்கும் சிற்றூர் வரகநேரி. இங்கே வேங்கடேச ஐயர், காமாட்சி அம்மையார் எனும் தம்பதியருக்கு 2.4.1881-ஆம் ஆண்டு மகனாகப் பிறந்தவர் சுப்பிரமணியம். வரகநேரி வேங்கடேச சுப்பிரமணியம் என்பவர்தான், பிற்காலத்தில் தமிழ் வரலாற்றிலே வ.வே.சு.ஐயர் என்று சுருக்கமாக மக்கள் இதயத்திலே இடம் பெற்றார்!

சுப்பிரமணியம் பிறந்தது பத்தொன்பதாம் நூற்றாண்டில் இப்போது நாம் வாழ்வதோ இருபத்தொன்றாம் நூற்றாண்டு. இந்த நூற்றாண்டிலே வாழும் படித்தவர்கள். உலக நாகரீக வளர்ச்சியை நன்கு புரிந்து கொண்டவர்கள், நமது நாட்டை அடிமைப்படுத்தி, இந்திய மக்களைக் கொடுமையாக, ஆட்சி செய்தவனை 1947-ஆம் ஆண்டு நாட்டை விட்டே விரட்டியடித்து, சுதந்திரம் பெற்ற பிறகும்கூட, இன்றைய மக்கள் இங்கலீஷ் மோகவெறி பிடித்து அலைகிறார்கள் என்றால், ஆட்டுத்தோலுக்கு இடம் கேட்டு வியாபாரம் செய்ய வந்த இங்கிலீஷ்காரன் இந்தியாவை ஆட்சி செய்து கொண்டிருந்த போது இங்கிலீஷ் வெறி எப்படி இருந்திருக்கும் என்று சற்று எண்ணிப்பாருங்கள்.

ஆங்கிலேயன் ஆட்சியை விட்டு ஓடிப்போய், 54 ஆண்டுகள் ஆனபிறகும் கூட, நம்முடைய பிள்ளைகள் இன்றைக்கும் இங்கிலீஷ் கான்வெண்ட் பள்ளிகளிலே படிப்பதையே ஒரு கர்மமாய் கருதி நடந்து வருகிறார்கள். அவர்களது செல்வங்கள், பெற்றோர்களை மம்மி, டாடி என்று அழைப்பதிலே பேரானந்தப் பட்டு, அதற்காக ஏராளமான பணங்களைச் செலவழிக்கின்றார்கள். சுதேசி பள்ளிகளிலே அவர்களது குழந்தைகளைப் படிக்க வைக்க

மனமில்லாமல், பெருமைக்காக, போலி கௌரவத்திற்காக, பகட்டு படாடோபத் திற்காக, தாய் மொழிக்குத் துரோகம் செய்து விதேசிப் பள்ளிகளுக்குப் பணத்தைக் கொட்டிப் பாழ்பட்டு வருகிறார்கள் என்றால், 19-ம் நூற்றாண்டில் ஆங்கிலேயன் ஆட்சியிலே ஆங்கில இன்பம் எப்படிக் கரையுடைந்த கடலாக இருந்திருக்கும் என்பதை எண்ணிப்பார்த்தாலே ஆங்கில வெறியின் கோர உண்மைகளைப் புரிந்து கொள்ள முடியும் அல்லவா?

வ.வே.சுப்பிரமணிய ஐயரின் தந்தையான வேங்கடேச ஐயர் ஓர் ஆங்கில மோகியாக இருந்தார். எனவே, தனது மகனுக்கும் ஆங்கிலம் கற்பிக்க விரும்பினார்.

அன்றைக்கு இந்திய மக்களிடம் பற்று இருந்தது; ஆனால், மெக்காலே பிரபு திணித்த வயிற்றுப் பிழைப்புக்கான இங்கிலீஷ் குமாஸ்தா கல்வி முறை என்ற பேய் அவர்களை நினைத்தபடி ஆட்டிப் படைத்துக் கொண்டு இருந்தது. சோறுதான் பிழைப்பு என்று அவர்கள் எண்ணினார்களே தவிர, மானம் அதைவிடப் பெரியது என்ற நினைப்பே அவர்கள் நெஞ்சில் இடம் பெறவில்லை.

ஆங்கிலேயரையும், அவர்கள் ஆட்சியையும் நமது இந்திய மக்கள் வெறுத்ததும் உண்மைதான். ஆனால், சோற்றுக்காக மக்கள் ஆங்கிலேயர்களிடம் பய பக்தியுடனும், அடக்க ஒடுக்கத்துடனும் ஆமைபோல வாழ்ந்து வந்தார்கள் என்பதும் உண்மைதான்!

இப்போது கான்வெண்டில் படிக்கும் தங்களது பிள்ளைகளிடம் அக்கறை காட்டும் இன்றைய பெற்றோர்களைப் போல, அப்போதும் பெற்றோர்கள் இருக்கத்தான் செய்தார்கள்.

ஒருவேளை அப்படி இங்கிலீஷ் படித்து விட்டால், இங்கிலீஷ் கான்வெண்டிலே படிக்கும் பிள்ளைகட்கு அரசு பணிகளிலே இரட்டைச் சம்பளமா கிடைக்கிறது? இல்லையே, சாதாரண ஒரு

பள்ளிப்படிப்பைப் படித்தவன் என்ன ஊதியம் பெறுகிறானோ, அதைத்தானே காண்வெண்டானும் பெறுகிறான்? ஏன் இதைச் சிந்திக்க மறுக்கிறார்கள்? அவ்வளவு அந்நிய மொழி மோகம்! அதனாலே அது அவர்களது சிந்தனையை முடக்கி விட்டது போலும்!

தாய்மொழி தமிழுக்குத் துரோகம் செய்யும் ஒரு கூட்டம், 19-ம் நூற்றாண்டிலேயும் இருந்தது! அதனால்தான் அப்போதைய வயிறு கள் ஆங்கிலக் கல்வியைக் கற்க மோதின! அந்தச் சூழ்நிலையிலே தான் சுப்பிரமணியனும் ஆங்கிலக் கல்வி கற்க வேண்டும் என்று அவரது தந்தையும் பேராசைப்பட்டார்!

ஆரம்பப் பள்ளிக் கல்வியிலிருந்தே தனது மகன் சிறந்து விளங்க வேண்டும் என்று தந்தை எண்ணினார். அதனால், தனது வீட்டிலேயே ஆங்கிலம் கற்பிக்க மகனுக்கு வேண்டிய ஏற்பாடுகளை எல்லாம் அவர் செய்தார்! ஓர் ஆங்கில ஆசிரியர் வேங்கடேச ஐயர் வீட்டுக்கு வருவார்! சுப்பிரமணியத்துக்கு இங்கிலீஷ் போதிப்பார். சிறுவரான சுப்பிரமணியன் படிப்பில் சிறந்து விளங்கினார். தந்தையார் ஆசைக்கு ஏற்றவாறு மகன் இங்கிலீஷ் மொழியிலே ஒப்புயர்வற்ற மணிபோல மதிப்புப் பெற்றார் உடனே ஐயர் தனது மகனைத் திருச்சியிலே உள்ள ஆங்கில மிஷனரிப் பள்ளியிலே, ஐரோப்பிய முறைப்படி கல்வி கற்க அனுப்பினார்.

வீட்டிலேயே சுப்பிரமணியன் ஆங்கில மொழிக் கல்வி கற்றதால், மிஷனரி கல்வி அவருக்குச் சுலபமாக இருந்தது. அதனால், எல்லாப் பாடங்களிலும் சிறந்த மாணவராக அவரால் கற்க முடிந்தது. வகுப்பிலும் நற்பெயரோடு நல்ல ஒழுக்க சீலமோடு கல்வி கற்றிடும் மாணவராகத் திகழ முடிந்தது.

ஆங்கிலேயர்கள் தமது தாய்மொழியான இங்கிலீஷுக்கு அடுத்தபடியாக லத்தீன் மொழிக்கு நல்ல மதிப்பளித்தார்கள்,

அதனால் மிஷினரி பள்ளிகளில் லத்தீன் இரண்டாவது பாட மொழியாகக் கற்பிக்கப்பட்டு வந்தது. சுப்பிரமணியனும் லத்தீன் மொழியிலே நன்கு தேர்ச்சி பெற்றார்.

ஆனால் இதில் என்ன ஒரு விதி விலக்குத் தெரியுமா? ஆங்கிலத்திலேயும், லத்தீன் மொழியிலேயும் நல்ல புலமை பெற்ற சுப்பிரமணியம், இன்றைய தாய்மொழித் துரோகக் கூட்டத்தைப் போல, தனது தாய் மொழிக்குத் துரோகம் செய்யாமல், தமிழையும் நன்றாகக் கற்றுப் புலமையறிவு பெற்றார். இதற்குச் சான்றாக அவர் எழுதிய நூல்களும், கட்டுரைகளும், கவிதைகளும், வரலாற்று ஆய்வு நூல்களையும் படித்தாலே புரியும்.

அக்காலத்திலே பல மொழிகளையும் படித்துப் புலமை பெற வேண்டும் என்ற எண்ணம் கல்வியாளர்கள் இடையே இருந்து வந்தது. அதற்குரிய காரணம் என்னவென்றால், இக்காலத்தில் உள்ளது போல அக் காலத்தில் அறிவிய ^, கணிதம், தொழில் நுட்பம், மருத்துவம், வணிகம் போன்ற ாடங்கள் வளர்ச்சி பெறவில்லை. அக் காரணத்தால் மொழிகள், வரலாறு, புவியியல், தத்துவம், இலக்கியம் போன்ற பாடப்பிரிவுகளை மட்டுமே அக்கால மாணவர்கள் கற்க வேண்டிய அவசிய நிலை இருந்தது. அதனால், மாணவர்களில் பலர் பல மொழிகளை சிரமம் பாராமல் படித்து அதன் சிறப்புக்களை உணர்ந்தார்கள்.

எதை அக்கால மாணவர்கள் விருப்பப்பாடமாக எடுத்துப் படித்துவந்தார்களோ, அவற்றுக்காக மொழிகள் சிலவற்றையும் அத்துடன் சேர்த்தே கற்று வந்தார்கள். அவ்வாறு படிப்பதை ஒரு பெருமையாகவும் அவர்கள் மதித்தார்கள்.

அந்தக் கல்வி நிலைக் கேற்ப, சுப்பிரமணியனும் கற்றார். அத்துடன், சமஸ்கிருதம், இந்துஸ்தானி, ஆங்கிலம், லத்தீன், தமிழ் ஆகிய மொழிகளையும் அவர் கற்றுப் புலமையடைந்தார்

இத்துடன் மட்டும் அவர் நிறுத்தவில்லை. பிற்காலத்தில் உருது, பிரெஞ்சு ஆகியமொழிகளையும் படித்தார். இதனால் அவர் எந்தெந்த மொழிகளை விரும்பிக் கற்றாரோ அந்தந்த மொழிகளில் பேசவும், எழுதவும், அதைக் கேட்டு மற்றவர்கள் பாராட்டும் படியான பன்மொழிப் புலமை அறிவும் பெற்றார்.

ஆரம்பக் கல்வியைப் படித்து முடித்தவுடன், சுப்பிரமணியன் உயர்நிலைப் பள்ளியிலே சேர்ந்தார். அங்கேயும் அவர் சிறந்தே விளங்கினார். படிப்பு, பண்பு, அடக்கம் ஆகிய வற்றில் எல்லாரும் பாராட்டும் படியான வல்லமை பெற்றார். அதற்குப் பிறகு அவர் எழுதிய மெட்ரிக் தேர்வில் சென்னை மாகாணத்திலேயே அவர் ஐந்தாவது மாணவரானார்.

தந்தை வேங்கடேச ஐயர் தனது மகன் சுப்பிரமணியனைச் சிறந்த ஒரு வழக்குரைஞராகப் படிக்க வைக்க விரும்பினார்! ஆனால், அதற்குக் குறைந்த அளவு ஏதாவது ஒரு பட்டம் பெற்றிருக்க வேண்டும். இந்த வழக்கம் இன்று இருப்பது போலவே அன்றும் இருந்தது. அதனால், தனது மகனை ஒரு பட்டதாரியாக உருவாக்க என்ன செய்யலாம் என்று அவரது தந்தையார் யோசனை செய்தார். பிறகு, எஃப்.ஏ.வகுப்பில் மகனைக் கல்லூரியில் சேர்த்தார்.

இன்றைக்குள்ள கல்லூரி மாணவர்களைப் போலல்லாமல், தீய பழக்க வழக்கங்களுக்குப் பலியாகி, வாழ்க்கையைக் கெடுத்துக் கொள்ளாமல், தனது பெயருக்கு ஏற்றவாறு மாணவ மணியாகவே திகழ்ந்து வந்தார்! தமது தந்தையின் ஆசைக்குத் தக்கபடி கல்வி யிலே கருத்தூன்றிப் படித்தார். வகுப்பிலே முதல் மாணவராகத் தொடர்ந்தார்.

இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு வந்தபல்கலைக் கழக எஃப்.ஏ தேர்வில் சுப்பிரமணியன் முதல் வகுப்பின் மாணவராகத் தேர்வு பெற்றார். இந்தச் செய்தியை வேங்கடேச ஐயரும், காமாட்சி

அம்மையாரும் கேள்விப்பட்டு சொல்லொணா மகிழ்வு அடைந்தது மட்டுமன்று, எதற்காக நாம் பாடுபட்டோமோ அந்தக் கஷ்டத்திற்குக் கடவுள் கைமேல் பலன் தந்து விட்டார் என்று பேரானந்தப் பட்டார்கள்.

அக் காலத்து பழக்க வழக்கத்தின்படி, படித்துக் கொண்டிருக்கும் காலத்திலேயே அவருக்குக் கலியாணம் செய்து விடுவது என்று பெற்றோர் முடிவெடுத்தார்கள். பெற்றோர் மனதுக்கு ஏற்றவாறு நடந்து கொள்ளும் பண்பு கொண்ட அவர், அவர்களது முடிவுக் கேற்றவாறு திருமணம் செய்து கொள்ள ஒப்புதல் தந்தார். சுப்பிரமணியனுக்கும் பாக்யலட்சுமி என்ற மங்கைக்கும் திருமணம் நடந்தேறியது.

திருமணமாகி விட்டது. இனிமேல் குடும்பக் காரியங்களைக் கவனிப்பதும், மனைவி மனதுக்கு விரோதமாக நடந்து கொள்ளாமல் இருப்பதும்தான் வாழ்க்கை என்று சுப்பிரமணியம் எண்ணாமல், பி.ஏ.வகுப்பில் சேர்ந்து படித்து வந்தார். திருமணத்துக்கு முன்னால் எவ்வாறு கல்வியினை அல்லும் பகலும் அரும்பாடு பட்டுப் படித்து வந்தாரோ, அதனைப்போலவே திருமணத்துக்குப் பின்பும் அயராமல், தளர்ந்து விடாமல் கல்வியிலே மிக ஆழமாகக் கவனம் செலுத்திப் படித்து வந்தார். ஆனால், எதிர்பாராமல் வந்த நோயால் உடல் பாதிக்கப்பட்டார்.

நோயினால் ஓராண்டு அவதிப்பட்டார். பிறகு, பெற்றோர்களது உதவியாலும், மருத்துவச் சிகிச்சையினாலும் நோயிலே இருந்து மீண்டார். மறுபடியும் கல்லூரியிலே பி.ஏ.வகுப்பிலேயே சேர்ந்து படித்தார். விடாமுயற்சியோடும், மனைவியின் ஒத்துழைப்போடும் 1899-ஆம் ஆண்டில் நடந்த பி.ஏ.தேர்வில் கலந்து கொண்டு பி.ஏ.பட்டம் பெற்றார். இதனைக் கண்டு அவரது பெற்றோரும், மனைவியும் மட்டற்ற மகிழ்ச்சி கொண்டார்கள்.

தந்தை வேங்கடேச ஐயர், தமது மகனை எப்படியாவது வழக்குரைஞராக்கி விட வேண்டும். என்ற உறுதியோட்டிருந்தார். அதனால், தனது மகன் ஏராளமாகச் சம்பாதிப்பார்! படிப்புக்காகப் பெற்றிருந்த கடனைத் தீர்த்து விடலாம். நமது குடும்ப வாழ்க்கையும் முன்னேறும் என்று நம்பியபடியே சிந்தித்தார்!

மகன் வழக்குரைஞராவதானால், அவன் சென்னை சென்று தங்கிச் சட்டக்கல்லூரியில் சட்டத் துறை பி.எல்.கல்வியைப் பயிலவேண்டும். அதுவும் ஓராண்டல்ல; இரண்டாண்டு காலம் சென்னையிலேயே தங்க வேண்டும். என்ன செய்வது என்று சிந்தித்துக் குழப்பமடைந்தார்.

என்ன ஆனாலும் சரி, எவ்வளவு செலவானாலும் சரி, எப்படியும் சுப்பிரமணியத்தைச் சட்டக் கல்லூரியில் சேர்த்து விட சிலருடைய உதவிகளை நாடினார். அவ்வுதவிகள் அவருக்குக் கிடைத்துவிட்டது. அதனால், தனது மகனைச் சென்னைக்கு அழைத்து வந்து சட்டக் கல்லூரியில் சேர்த்து விட்டார்.

சட்டத் துறையின் நுட்பங்கள், சிந்தனைக்கு வேலை கொடுக்கும் சம்பவ நடப்புக்கள், சட்டங்களின் மூலம் செய்யக் கூடிய பணிகள், ஆகிய அனைத்தும் அவருக்கு மிகவும் பிடித்துவிட்டது. அதனால் அவர், ஆர்வத்துடன் தொடர்ந்து படித்தார். அதே நேரத்தில் தனது தந்தையாருக்கு மேலும் வேதனைகளைக் கொடுக்க மனமில்லாமல், தனது குடும்பநிலையினை நினைத்து, மிகவும் சிக்கனமாகவே சென்னையில் தங்கி மிகக் கடுமையாக, இரவு-பகல் என்று பாராமல் உழைத்துப்படித்தார்.

'உழைப்பின் வாரா உறுதிகள் உளவோ? என்ற சங்க காலத்துச் சான்றோர் எண்ணப்படி, உண்மையோடும், உறுதியோடும், உணர்ச்சியோடும், படித்து இரண்டாண்டு கால சட்டப்படிப்பை முடித்து, தேர்விலே வெற்றி பெற்று வ.வே.சுப்பிரமணியன் பி.ஏ.பி.எல் என்று பட்டத்தைப் பெற்று வழக்கறிஞர் ஆனார்.

தனது மகன் வழக்குரைஞரான சம்பவங்களை மனைவியிடமும், மருமகளிடமும் கூறிக் கூறி வேங்கடேச ஐயர் பெருமிதமடைந்தார்! திருச்சி மாவட்ட நீதி மன்றத்தில் சுப்பிரமணியன் வழக்கறிஞர் ஆனார். அவர் தன்னிடம் வரும் வழக்குகள் விவரங்களை நன்றாகப் படிப்பார்! வெற்றி பெறுமா என்பதை எண்ணிப் பார்த்தே அந்த வழக்கை நடத்துவார்!

இவ்வாறு நான்கு ஆண்டுகள் திருச்சி நகர நீதி மன்றத்தில் சுப்பிரமணியம் தொழில் நடத்தி வந்தும் அவரது குடும்பத்துக்குப் போதிய வருமானமில்லை. மீண்டும் அவரைக் குடும்பக் கவலை பற்றிக் கொண்டது. தந்தையும் தனயனும் மனம் வருந்திக் கொண்டிருந்தார்கள்.

எவ்வாறு தமது வருமானத்தைப் பெருக்குவது என்று ஆழ்ந்து சிந்தித்துக் கொண்டிருந்தார்கள் சுப்பிரமணியமும், அவரது தந்தையுமான வேங்கடேச ஐயரும்! அப்போதுதான் யாரும் எதிர்பாராத ஒன்று நடந்தது!

# வ.வே.சு. ஐயர் பாரிஸ்டராக இரங்கூன், லண்டன் பயணம்!

வேங்கடேச ஐயர் தனது மகன் சுப்பிரமணியத்தை ஆங்கிலக் கான்வெண்டில் படிக்க வைத்து, வழக்குரைஞராக்கியும் கூட, அவருக்குக் குடும்பத்தை நடத்துமளவுக்குப் போதிய வருமானம் வரவில்லை. அதனால், தனது சட்டத்துறைச் செயலை எவ்வாறு விருத்தி செய்வது என்பதிலேயே சிந்தனையைச் செலுத்தி வந்தார். மேற் கொண்டு என்ன செய்தால் தனது தொழில் முன்னேறும் என்ற முயற்சிகளிலே அவர் ஈடுபட்டிருந்தார்.

அந்த நேரத்தில் சுப்பிரமணியனின், இலலத்தரசி பாக்கிய லட்சுமிக்கு பர்மாவில் ஒரு பெரியப்பா இருந்தார்! அவர் அங்கே உண்டியல் கடை ஒன்றை நடத்திக் கொண்டிருந்தார்! அவருக்கு மகன் ஒருவர்! பெயர் பசுபதி! மிகவும் வசதியான குடும்பமும் கூட! பணம், சொத்து ஏராளமாக இருந்தது பசுபதிக்கு.

பசுபதி நல்ல பணம் உடையவர் மட்டுமல்லர்; நல்ல மனம் படைத்த குணவான்! பரோபகாரி! யாரானாலும் சரி, வித்தியாசம் ஏதும் பாராமல் ஆபத்துக் காலத்தில் உதவி செய்வதில் தாராள மனம் படைத்த மனித நேய முள்ளவர்! பசுபதி தனது சிற்றப்பாவின் குடும்பத்தின் மீது சிறுவயலிருந்தே அன்பு பூண்டவராக இருப்பவர்! தங்கை பாக்யலட்சுமி மீதும் அளவிலா பற்றுடையவர் பசுபதி!

பர்மா நாட்டின் தலைநகரான ரங்கூனில் இருந்து தனது சொந்த ஊரான திருச்சிராப்பள்ளி நகருக்கு அந்த பசுபதி வந்தார். வந்தவரை வேங்கடேச ஐயரும் காமாட்சி அம்மையாரும், சுப்பிரமணியனும், அன்போடு வரவேற்று உபசரித்தனர்! பசுபதிக்குப் பிறந்த ஊர்

அல்லவா வரகநேரி? அதனால், தங்கை, மைத்துனர் உபசரிப்பி லேயே சில நாட்கள் தங்கி மகிழ்ந்திருந்தார்.

இவ்வாறு அவர் தனது தங்கை வீட்டில் தங்கியிருந்தபோது, சுப்பிரமணியனுடைய வழக்குரைஞர் தொழில் நிலையைத் தாமே நேரில் பார்த்தார்! இவ்வளவு திறமையுள்ள தனது மைத்துனர் முன்னேற நாம் ஏதாவது செய்தால் என்ன என்று சிந்தித்தவாறே இருந்தார்! ஒன்றும் அவருக்குப் புலப்படவில்லை.

மைத்துனர் சுப்பிரமணியத்தையும், தங்கை பாக்யலட்சுமியை யும் ரங்கூன் நகருக்குத் தன்னுடன் அழைத்துக் கொண்டு போய் வழக்குரைஞர் தொழிலையே நடத்தச் செய்யலாம் என்று தீர்மானித்து தனது சிற்றப்பா, சித்தியிடமும் தங்கையிடமும், மைத்துனரிடமும் விவரித்துக் கூறினார்.

பசுபதியின் திட்டம், தங்கைக்கும், மைத்துனருக்கும் பிடித்திருந்தது. என்றாலும், தனது தகப்பனாரும் தாயாரும் என்ன சொல்வார்களோ என்று சுப்பிரமணியம் மௌனமாக நின்றார்! ஆனால், சிற்றப்பாவுக்கோ, சித்திக்கோ இந்தத் திட்டம் திருப்தியைக் கொடுக்கவில்லை. காரணம், வயதான காலத்தில் பிள்ளையையும் மருமகளையும் பிரிந்திருக்க மனம் இல்லை. அதனாலே, அவர்களும் மௌனமாக இருந்தார்கள்.

பசுபதியே தனது சிற்றப்பாவைக் கேட்டார். அதற்கு வேங்கடேச ஐயர், "மைத்துனன் தயவில் மகன் வாழ்வதை விரும்பவில்லை. மகனும், மகளும் தங்களுடன்தான் இருக்கவேண்டும். அதே நேரத்தில் நாங்களும் அங்கே வந்து தங்க முடியாது என்ற திட்டத்தில், தனது அண்ணன் மகளிடம் வேங்கடேச ஐயர் இந்தப் பிரச்சினையை பிறகு பார்த்துக் கொள்ளலாம்" என்று சமாதானப் பதில் கூறினார்!

சுப்பிரமணியத்துக்கும், பாக்கியலட்சுமிக்கும் பசுபதி யோசனை மிகவும் பிடித்திருந்தது. வழக்குரைஞர் தொழிலில் திருச்சியில்தான்

வெற்றி பெற முடிய வில்லை, ரங்கூன் நகரிலாவது வெற்றி பெற மாட்டோமா? என்ற ஏக்கம் சுப்பிரமணியத்திற்கு இருந்தது. அதனால், தன் பெற்றோர்களிடம் அவர் தன்நிலை, தனது தொழில் நிலை விளக்கங்களைக் கூறி, கரைப்பார் கரைத்தால் கல்லும் கரையும் என்பது போல, தனது பெற்றோரின் சம்மதத்தைப் பெற்றுக் கொண்டார்.

பசுபதியும், பாக்கிய லட்சுமியும், சுப்பிரமணியமும் ரங்கூன் நகருக்குப் பயணமானார்கள். ரங்கூன் நகரும் இந்தியாவைப் போல அப்போது பிரிட்டன் சாம்ராச்சியத்திலே இணைந்திருந்தது. அதனால், அவர்களுக்குப் பயணவசதிகளும் சுலபமாகவே இருந்தது.

இந்த ரங்கூன் பயணம்தான், சுப்பிரமணியன் வாழ்வில் ஓர் எதிர்பாராத திருப்பமாக அமைந்து விட்டது எனலாம்.

பசுபதி வாய்ச்சொல் வீரர் அல்லர். செயல்வீரர்; வசதிகள் யாவும் உள்ளவா; ரங்கூன் நகரில் செல்வாக்கும் பெற்றவர்; சொன்னதைச் செய்பவர்; செய்வதைச் சொல்பவர்; பணம் குணத்தைமாற்றாது என்பதின் சான்றாளர்; அவர்கள் மீது அளவற்ற அன்புள்ளம் கொண்ட பண்பாளர்!

இரங்கூன் சென்றதும் தங்கை பாக்கியலட்சுமிக்கும் மைத்துனர் சுப்பிரமணியத்திற்கும் எல்லா வசதிகளையும் செய்து. தனக்கு வேண்டிய பாரிஸ்டர் நண்பர் ஒருவரிடம் பசுபதி அழைத்துச் சென்று அறிமுகம் செய்து வைத்தார். அவர் ரங்கூன் உயர் நீதி மன்றத்திலே பார்-அட்-லா வழக்குரைஞராகத் தொழில் நடத்தி வந்தார். அந்த ஆங்கிலேய பாரிஸ்டரிடம், தனது மைத்துனனது கல்வித் தகுதி, திறமைகளை எடுத்துரைத்து தனது மைத்துனரை உதவியாளாராக அமர்த்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொண்டார்.

சுப்பிரமணியத்திடம் பேசிக் கொண்டிருந்தபோதே, அவரது அறிவாற்றலை நன்கு புரிந்து கூர்மையான, நுட்பத் திறனாளரான

சுப்பிரமணியத்தைத் தனக்கு உதவியாளராக நியமித்துக் கொண்டார் பாரிஸ்டர்!

என்னென்ன நெளிவு சுளிவுகள் வழக்குரைஞர் தொழிலுக் குண்டோ, அவற்றை எல்லாம் சுப்பிரமணியம் நுட்பத்துடன் புரிந்து கொள்ளத் தக்க உதவிகளைச் செய்து தந்தார்.

பாரிஸ்டரின் உதவிகளுக்கு எல்லாம் நன்றி விசுவாசத்துடன் நடந்து கொண்ட சுப்பிரமணியம், உருது மொழியையும் கற்றுத் தேர்ந்தார்.

எப்போதும், பிரித்தாளும் சூழ்ச்சியை செய்து தங்களது சுயநல நோக்கத்தைச் சாதித்துக் கொள்பவர்கள் என்பதுதான் ஆங்கிலேயர் களின் ராஜதந்திர வரலாறாகும். இந்திய வரலாறும், உலக சரித்திரமும், இங்கிலாந்து நாட்டின் உள்வரலாறுகளையும் ஊன்றிப் படிப்பவர்கள் இந்த உண்மையை நன்கு உணர்வார்கள்!

ஆங்கிலேயர்கள் தந்திர சாலிகள் என்று பெயர் பெற்றவர் களாவர். அவர்கள் உலகில் பலநாடுகளை அடிமைப்படுத்தி ஆட்சி புரிந்தவர்கள். அதனால்தான்,, மாபெரும் ராஜ தந்திரியான வின்ஸ்டண்ட் சர்ச்சில், 'பிரிட்டிஷ் சாம்ராச்சியத்தில் சூரியனே மறையாது, என்று ஆணவத்துடன், பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் முழக்கமிட்டார்! இந்தக் கோலாகல ராஜ வாழ்வு அவர்களுக்கு எப்படி வந்தது? எடுத்துக் காட்டுக்கு ஒன்றைப் பார்ப்போம்!

இங்கிலீஷ் காரர்கள் ஆட்சி புரிந்த அக் காலத்தில் வழக்கறிஞர்களுக்குள் இரண்டு பிரிவுகளை உருவாக்கி விட்டார்கள். அதாவது, அடிமைப்பட்டிருந்த நாடுகளைச் சேர்ந்த மக்கள், சட்டக் கல்வி பெற்று வழக்கறிஞர்கள் ஆவதற்கு அந்தந்த நாடுகளில் சட்டக் கல்லூரிகளை இங்கிலீஷ் காரர்கள் உருவாக்கி இருந்தார்கள். அக் கல்லூரிகளில் சட்டம் படித்துப் பட்டம் பெற்று வழக்குரைஞர் பணியாற்றுபவர்கள் உயர் நீதி மன்றங்களில் நீதிக்காக வாதாட முடியாது, வழக்குரைஞர் தொழிலும் செய்ய

முடியாது. உயர் நீதி மன்றங்களில் வழக்குரைஞர் தொழில் நடத்த வேண்டுமானால் லண்டனுக்குச் சென்று பார்-அட்-லா பட்டம் பெற்று பாரிஸ்டராக வேண்டும் என்ற இந்த நிலை சுதந்திரத்துக்கு முன்பு வரையிலும் இருந்தது.

அதனால்தான், பெரும்பான்மையான இந்திய வழக்குரைஞர் கள் கீழ் நீதி மன்றங்களிலேயே வக்கீல் தொழிலை நடத்த வேண்டிய நிலை இருந்தது. இந்தியாவைப் போலவே பர்மாவும் அன்றைக்கு பிரிட்டிஷ் ஆட்சியின் கீழே இருந்தது. அங்கும் அதே நிலைமைதான். பார்-அட்-லா படித்தவர்களே உயர்நீதி மன்றங்களில் வழக்குரைஞர் தொழிலை நடத்தி வந்தார்கள். மற்றவர்கள் கீழ் நீதி மன்றங்களில் மட்டுமே தொழில் நடத்தி வந்தார்கள்.

இந்தப் பிரித்தாளும் பிரிட்டனின் சூழ்ச்சிக்கேற்ப, சுப்பிரமணியன் சுமார் ஆறு மாதங்கள் ரங்கூன் நகரிலே வழக்குரைஞர் தொழிலை நடத்தினார். பிறகு, லண்டனுக்குச் சென்று பாரிஸ்டர் பட்டம் பெற விரும்பி, தனது எண்ணத்தை அவர் மைத்துனரிடம் கூறினார்.

மைத்துனரும் சுப்பிரமணியம் ஆசையிலே நியாயம் இருப்பதை உணர்ந்தார். பாரிஸ்டரானால் தனது தங்கை குடும்பத்துக்கு நல்ல வருவாய் கிடைக்கும் என்பதால், சுப்பிரமணியத்தை லண்டனுக்கு அனுப்புவது என்ற முடிவுக்கு அவர் வந்தார்.

ரங்கூன் நகரிலே உண்டியல் கடை ஒன்றைப் பசுபதி நடத்திப் பெரும் பணக்காரனாக வாழ்பவர். அவர் நினைத்தால் பாரிஸ்டர் பட்டம் பெறுவதற்கான எல்லாப் பணவசதிகளையும் செய்யலாம்! மாதந்தோறும் ஆகும் செலவினங்களையும் அவர் வழங்கலாம்! ஆனால், அவ்வாறு செய்யாமல் லண்டனிலே ஓர் உண்டியல் தொழில் நடத்தும் கடையை வைத்துக் கொடுத்து, அதனால் வரும்

லாபத்தை சுப்பிரமணியன் தனது செலவுகளுக்குப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்பது பசுபதியின் திட்டமாகும்.

இந்தத் திட்டத்தை தங்கை புருஷனிடம் பசுபதி கூறியதும், சுப்பிரமணியமும் இதுதான் மிகச் சிறந்தவழி என்று மைத்துனர் கருத்தை ஏற்றுக் கொண்டார். பசுபதி முடிவின்படி லண்டனில் உண்டியல் கடை துவங்க எல்லா ஏற்பாடுகளையும் அவர் செய்து முடித்துவிட்டார்.

வராகநேரி வேங்கடேச ஐயருடைய மகனான சுப்பிரமணியம் ஐயர் அதாவது வ.வே.சு.ஐயர் பாரிஸ்டர் பட்டம் பெற்றிட லண்டன் மா நகருக்குப் புறப்பட்டார். அவர் தனது அருமை மனைவி பாக்கிய லட்சுமியையும், அன்பு மகள் பட்டம்மாவையும் மைத்துனர் பசுபதி ஐயரின் பொறுப்பில் ரங்கூன் நகரிலே விட்டு விட்டு லண்டன் சென்றார்.

# ஊழிற் பெருவலி யாஉள

யார் எங்கே சென்றால் என்ன? அவனுக்கு முன்னே அங்கே சென்று காத்திருந்து, அவன் வருகையை எதிர்நோக்கிக் காத்திருப்ப தற்குப் பெயர்தான் ஊழ்!

அதனால் திருவள்ளுவர் பெருமான் ஊழிற் பெருவலி யாவுள? என்ற கேள்வியைக் கேட்டு அதற்குப் பதிலாக, மற்று ஒன்று சூழினும் தான்முந்துறும் என்றார். அவ்வாறு காத்திருப்பதுதான் அவனது ஊழ்! எனவே, அது வலிமை வாய்ந்தது.

அந்த ஊழ் மன்னாதிமன்னர்களையும், மாவீரர்களையும், அறிவுலக வித்தகர்களையும் அவர்களது சாதனை ஆற்றல் களையும் இருந்த இடம் தெரியாமல் தவிடு பொடியாக்கி மறைந்து போகும்படி செய்துள்ளதை நாம் வரலாற்றிலும், புராண இதிகாசங்களிலும், சமுதாயச் சம்பவங்களிலும் படித்திருக் கின்றோம்! ஊழ் அத்தகைய பெருவலிமை பெற்றதாகும்.

அந்த ஊழ், நமது வ.வே.சு.ஐயரது வாழ்விலும் விளையாடத் துவங்கியதன் காரணம்தான், அவரது ரங்கூன் வாழ்க்கையும், லண்டன் பயணமும், பாரிஸ்டர் பட்டம் பெற நினைத்த எண்ணமும் ஆகும்.

வ.வே.சு.ஐயர், தீரமுள்ளவர்தான், ஈரமுள்ள குணங்களைக் கொண்ட குடும்பஸ்தர்தான்; பிறருக்கு மனத்தாலும் எவ்வித தீமைகளையும் நினைக்காதவர்தான். ரங்கூன் புறப்படும் வரை யாருக்கும் எந்தத் தீங்கும் நெஞ்சிலே நினைக்காமல், தானுண்டு தனது கல்வி வளர்ச்சியுண்டு, குடும்பம் உண்டு, குடும்ப ஒழுக்கமுண்டு என்றளவில் வாழ்ந்த ஓர் ஒழுக்க சீலர்தான்!

அத்தகைய ஓர் அறவாணனைக் குமுறும் எரிமலையாக்கி, கொந்தளிக்கும் ஊழிக் கடலாக்கி, அவரை நாடு நாடாகச் சுற்றிடும் நாடோடியாக்கி, அயல் நாட்டு வீதிகளிலே ஆபத்துமேல் ஆபத்துக்களை உருவாக்கி அலைய வைத்து, அவமான வாழ்க்கையை அனுபவிக்க வைத்து வேடிக்கை பார்த்து விளையாடி விட்டது அவருடைய ஊழ்!

பாரிஸ்டர் பட்டம் பெற்று வருவாயைப் பெருக்கி தனது குடும்பத்தை வாழவைக்க நினைத்து லண்டன் சென்ற வ.வே.சு.ஐயர், அதை மறந்து, இந்திய சுதந்திர உணர்ச்சியை அவரது நெஞ்சிலே நெருப்பாக்கி, அவரைப் புரட்சி வீரராக்கி விட்டது அவரது ஊழ்!

பாரிஸ்டர் பட்டம் பெறச் சென்ற வ.வே.சு. ஐயர், இந்திய சுதந்திரப் போர் வீரரானார்! அந்தப் போராட்டத்தை நடத்தும் தளபதிகளிலே ஒருவரானார்! இந்தியச் சுதந்திரப் போர்த் தளபதி களிலே ஒருவரானார் என்றாலும், அந்த உணர்ச்சியாவது அவரை, அவரது வாழ்விலே வளமாக உயர்த்தியதா என்றால் அதுவுமில்லை. இறுதியாக, ஆற்றோடு ஓடும் நீரிலே மூழ்கிப் பரிதாபமாகச் சாகும் மரண அவல நிலையைத்தான் அளித்தது அவரது ஊழ். அந்த வேதனையான வரலாற்றை இனிக் காண்போம்!

இலண்டனுக்குப் பாரிஸ்டர் பட்டம் பெறச் சென்ற வ.வே.சு.ஐயர், தனது மைத்துனர் பசுபதி உருவாக்கிக் கொடுத்த உண்டியல் கடைத் தொழிலை ஏற்றார். பிறகு, புகழ்பெற்ற ஆபிரகாம் லிங்கன் சட்டக் கல்லூரியிலே சேர்ந்து. பார்-அட்-லா கல்வியைக் கற்கலானார்.

வ.வே.சு.ஐயர், லண்டனுக்குச் செல்வதற்கு இரண்டாண்டுகளுக்கு முன்புதான், இந்தியாவிலே அரசப்பிரதி நிதியாக இருந்த லார்டு கர்சான் என்ற ஆங்கிலேயே ஆட்சி வெறியர், வங்காளமாநிலத்தை இரண்டு துண்டாகப் பிரித்தார். அதை இந்தியாவே எதிர்த்தது. வங்காள வாலிபர்கள் அதனால் பயங்கர வாதிகளாக

மாறிவிட்டார்கள். வெள்ளையர்கள் இந்தியாவிலே இருந்தாலும் சரி, லண்டனிலே இருந்தாலும் சரி, அவர்களது இனத்தின் வேரை அறுத்தெறியப் பலாத்கார முறைகளைப் பயன்படுத்தி, யார்யார் வங்கப் பிரிவினைக்கு காரணகர்தர்களாக இருந்தார்களோ, அவர்களை எல்லாம் ஒவ்வொருவராகச் சுட்டுப் பிணமாக்கிக் கொண்டிருந்தார்கள்.

இந்தப் பயங்கரவாத சுதந்திரப் போர் உணர்வுகளுக்குத் தளபதிபோல் விளங்கினார். மராட்டிய மாவீரரான விநாயக ராவ் சாவர்கர். அவர் மராட்டியத்திலே உள்ள நாசிக் மாவட்டத்தைச் சேர்ந்த பகூர் என்ற சிற்றூரிலே பிறந்தவர். இளம்பிராயத்திலேயே அவர் தேசப்பற்று மிக்க வீர இளைஞராகத் திகழ்ந்தார். பள்ளிப் பருவத்திலேயே நாட்டுப்பற்றைக் கவிதைக்களாக்கி, ஊரிலே உள்ள வாலிபர்களை எல்லாம் ஒன்று திரட்டி சுதந்திர உணர்வுப் பாடல்களைப் பாடிப் பஜனை செய்து கொண்டு ஊர்வலம் வருமளவுக்கு நாட்டுப் பற்றாளராக நடமாடியவர். அவரது வீர சுதந்திர உணர்ச்சிகளை லோகமான்ய பாலகங்காதர திலகரே பார்த்து, அவரும் ஆவேசத்துடன் சாவர்கர் கூட்டத்திலே கலந்து கொண்டு வீர முழக்கமிட்டார்!

திலகரை பிரிட்டிஷ் அரசு நாடு கடத்தி தண்டனை கொடுத்ததைப் பத்திரிக்கையிலே படித்த சாவர்கர், வெள்ளையரை இந்தியாவிலே இருந்து ஓட ஓட விரட்டிட வன்முறைதான், பலாத்காரம் தான் சரியான வழி என்ற தவறான கருத்தை ஏற்றுக் கொண்டார்.

மராட்டிய மாவீரன் சிவாஜியைக் குருவாக ஏற்றுக் கொண்ட சாவர்கர், தனது குல தெயவமான பவானிகோயிலுக்குச் சென்று, 'என் தாய் நாட்டை, இந்தியாவை வெள்ளையர் ஆட்சியிலே இருந்து விடுவிப்பேன். அதற்காக, எனது உடல், பொருள், ஆவி அனைத்தையும் பலிகொடுப்பேன்! இந்தியாவைப் பிரிட்டிஷா ரிடம் இருந்து மீட்டிட, அதற்காக எந்த வழியையும் ஏற்றுக் கொண்டு போராடுவேன். இந்தியாவின் முன்னேற்றத்துக்காவே உழைத்துச் சாவேன்'' என்று தனது குல தெய்வம் முன்பு சத்தியம்

செய்து சபதம் மேற்கொண்டார் அந்தச் சூளுரைக்கு ஏற்றபடி தனது சொந்த மாநிலத்திலே, அவரையொத்த வாலிபர்களைத் திரட்டி 'நண்பர்கள் சங்கம்' என்ற ஓர் அமைப்பைத் துவக்கினார்.

இந்தச் சங்கத்திலே உறுப்பினர்களானவர்களிடம், அவர் நாட்டுப் பற்றை உருவாக்கினார். அதற்காக எவ்விதத் தியாகத்தையும் செய்யத் தயார் என்ற உறுதிப்பாட்டை அவர்களது நெஞ்சிலே ஊன்றினார். அமைதியான பாதையிலேயே சுதந்திரப் போரை நடத்துவோம். மக்கள் இடையே அவ்வகையில் விழிப்புணர்வுகளை வித்திடாவிட்டால், பலாத்கார முறைதான் வழி என்ற முடிவேற் பட்டால் அதையும் செய்யத் தயாராசி, இந்தியாவை விடுவிப்போம்' என்று, அவர் அச்சங்க உறுப்பினர்களிடையே சுதந்திர ஆண்மையை வளர்த்தார்! இதுதான் நண்பர்கள் ரகசியச் சங்கத்தின் இலட்சியம் என்பதை உருவாக்கியவர் மாவீரர் சாவர்கர்.

சாவர்கர் ஈடு இணையற்ற நாவன்மை படைத்த பேச்சாளர்! அவர் ஆற்றும் வீர உரை எரிமலையைப் போன்ற ஓர் ஆவேசத்தை மக்களிடையே ஊட்ட வல்லது. அதனால் அவர், யாரையும் எவரையும் எளிதில் தன் பக்கம் இழுக்கும் வல்லமை பெற்றிருந்தார். இளைஞர்களும், தேசபக்த ஆர்வலர்களும், பொதுமக்களும் அவரது வீர உரைகேட்டு அதற்கேற்ப நடக்கும் ஒரு மயக்க உணர்வையும் பெற்றிருந்தார்கள்.

மெட்ரிக்குலேஷன் கல்வியிலே வெற்றிபெற்ற சாவர்கர் பூனாவிலே உள்ள பெர்கியூஷன் கல்லூரியிலே சேர்ந்து படித்தார். அங்கேயும் கல்லூரி மாணவர்களைத் திரட்டி நாட்டுப்பற்றை உணர்ச்சியோடு அவர்கள் நெஞ்சிலே பதித்தார். அத்துடன் சாவர்கரது நாவன்மை மிக்க பேச்சும் மாணவர்களை அவர் பக்கம் இழுக்கப் பயன்பட்டது.

சாவர்கர் சிறந்த நாவலர் என்பதால், ஆங்கில ஏகாதிபத்தியம் இந்திய மக்களுக்குச் செய்து வரும் நிர்வாகக் கொடுமைகளை

அவர் அவ்வப்போது பம்பாய், பொது மக்கள் இடையே நடைபெறும் கூட்டங்களிலும் கலந்து கொண்டு பேசுவார். அவரது பேச்சுக்கள் பத்திரிக்கைகளிலே அடிக்கடி வெளிவரும். அதைப் பொதுமக்கள் மட்டும் படிக்கவில்லை. பிரிட்டிஷ் ஆட்சியும்தான் கூர்ந்து படித்தது!

ஆட்சியின் இந்த வெறிநிலையை உணர்ந்த சாவர்கர், பம்பாயிலே சட்டம் படிப்பதை மறுத்து, லண்டன் சென்று பாரிஸ்டர் படிப்பு படிக்கலாம் என்று கருதினார்! அதே நேரத்தில் லண்டன் மாநகரிலே உள்ள இந்திய இளைஞர்களிடமும் நாட்டுப் பற்றுணர்ச்சியை உருவாக்கி அவர்களையும் சுதந்திரப் புரட்சியிலே ஈடுபடுத்தினால், இந்தியாவை வெள்ளையரிடம் இருந்து விடுவிக்கலாம் என்ற முடிவுக்கு சாவர்கர் வந்தார்.

பாரிஸ்டர் படிக்க லண்டன் செல்ல முடிவெடுத்த சாவர்கருக்குப் போதிய பண உதவி இல்லை. அதனால், வழி என்ன என்று அவர் சிந்தனை செய்து கொண்டிருந்த போது, ஆங்கிலப் பத்திரிகை ஒன்றிலே. லண்டனிலே உள்ள ஒரு தொழிலதிபர். இந்தியாவிலே இருந்து லண்டன் வந்து பாரிஸ்டர் பட்டப் படிப்பு படிக்கும் இந்திய மாணவர்களுக்கு உபகாரச் சம்பளம் வழங்கத் தயார், என்று விளம்பரம் செய்திருந்ததைப் பார்த்தார். உடனே விண்ணப்பம் செய்தார்.

இலண்டன் சென்ற சாவர்கர், அந்த நகரிலே இருந்த இந்தியா விடுதியிலே தங்கினார். பாரிஸ்டர் பட்டப் படிப்புக்காகச் சட்டக் கல்லூரியிலே சேர்ந்தார்; படித்துக் கொண்டிருக்கும் போதே அங்கே உள்ள இந்திய வாலிபர்கள் இடையே நட்புக் கொண்டார்! தனது நாவன்மையின் பேச்சுத் திறத்தாலே அந்த இளைஞர்கள் இடையே இந்தியத் தேசப்பற்றை ஊட்டினார்! அவர்கள் அனைவரும் சாவர்கரின் நாட்டுணர்ச்சிக்குரிய சிந்தனையை ஏற்று அவரைத் தலைவராக ஏற்றுக் கொண்டு அவர்வழிப்படி நடக்க முற்பட்டார்கள்.

இலண்டன் நகரிலே சாவர்கரின் அபிநவ பாரத் சங்கத்தின் கிளை உருவானது. அங்கே இருந்த நண்பர்கள் அந்தச் சங்கத்தின் உறுப்பினரானார்கள். அதனால், அவர்கள் புதியதோர் நாட்டுணர்ச்சி கொண்டு எழுச்சியுடன் செயல்பட்டார்கள். அந்தக்கிளைச் சங்கத்தில் கூடும் நண்பர்கள் இடையே, இந்தியாவிலே இருக்கும் வெள்ளையர்களை எப்படி அதற்றலாம், அதற்கான வழிகள் எவை என்பன போன்ற வாதப் பிரதிவாதங்கள் நடத்தப்பட்டன.

'அபிநவ பாரத்' சங்கத்திற்குரிய உண்மையான பெயர் 'சுதந்திர இந்தியச் சங்கம்' என்பதாகும். லண்டனில் உள்ள எல்லாத் தரப்பினருக்கும் சுதந்திர இந்தியச் சங்கம் என்ற ஒன்று இருப்பதுதான் தெரியும். அச் சங்கத்துள்ளே நடமாடும் ரகசிய வன்முறைகளை அமல்படுத்துவது அபிநவபாரத் சங்கம்தான்.

சாவர்கர் பம்பாய் நகரிலே எப்படிச் செயல்பட்டார் என்பது பிரிட்டிஷ் அரசுக்கும், இந்திய விடுதியில் ஓரிருவருக்கும், பத்திரிக்கை சிலவற்றுக்கும் நன்கு தெரியும். அதனால், லண்டன் அரசு சாவர்கர் மீது எச்சரிக்கையுடன் செய. பட்டது. சாவர்கர் இந்திய விடுதியில் என்று தங்க ஆரம்பித்தாரோ, . அன்று முதல் அந்த விடுதி உற்சாகமாகவும் உணர்ச்சி வடிவமாகவும காட்சியளித்தது. இதனை நன்குணர்ந்த பிரிட்டிஷ் ரகசியப் போலீஸ் அந்த விடுதியைக் கண்காணித்து வந்தது. பத்திரிக்கைகள் சிலவும், பாரிஸ்டர் படிக்க வந்த சாவர்கள் யார் என்பதை அடையாளம் காட்டி எழுதின. சாவர்கர் இவற்றைப் பற்றியெல்லாம் கவலைப் படாமல், தன்னுடைய கடமையிலேயே கண்ணுங் கருத்துமாக இருந்து செயல்பட்டு வந்தார்.

முதல் சுதந்திரப் போர் என்று இந்திய வரலாற்றுப் பேராசிரியர் களால் குறிப்பிடப்படும் வரலாற்று நிகழ்ச்சியை, சிப்பாய் கலகம் என்று கூறி அதை ஒரு புரட்சியல்ல என்று அடையாளம் காட்டியது பிரிட்டிஷ் அரசு. இந்த முதல் சுதந்திரப்போர், அதாவது சிப்பாய் கலகம் 1857-ஆம் ஆண்டு நடை பெற்றது. இந்தச் சம்பவம் நடந்து

50 ஆண்டுகள் முடிந்து விட்டதால், 1907-ஆம் ஆண்டு ஐம்பதாவது ஆண்டு நிறைவு விழா லண்டனிலே உள்ள 'இந்தியா விடுதி'யில் கோலாகலமாகக் கொண்டாடப் பட்டது. இந்தச் சம்பவத்தின் அடிப்படை உணர்ச்சியைப் புரிந்து கொண்ட லண்டன் ஆசியப் போலீஸ், அன்று முதல் 'இந்தியா விடுதி' சம்பவங்களைக் கூர்ந்து கவனித்து வந்தது.

சாவர்கரின் இவ்வளவு விவரங்களையும், எப்படிப்பட்ட கால கட்டத்தில் வ.வே.சு. ஐயர் பாரிஸ்டர் பட்டப் படிப்புப் படிக்க லண்டன் வந்தார் என்பதையும், லண்டன் வருவதற்கு முன்பு தீவிரவாதியாகவோ, வன்முறைவாதியாகவோ இருக்கவில்லை; என்பதையும் வாசகர்கள் புரிந்து கொள்வதற்காகவே குறிப்பிட்டோம்.

எனவே, இப்படிப்பட்ட காலகட்டத்திலே, சாவர்கரின் தீவிரவாத சுதந்திர உணர்ச்சிகள் ஆல்மர விழுதுகளைப் போல வேரூன்றிய நேரத்திலே தான், வ.வே.சு.ஐயர் பாரிஸ்டர் படிப்புக்காக லண்டன் வந்து சேர்ந்தார். சட்டக் கல்லூரி உணவு முறைகள் ஐயருக்குப் பிடிக்கவில்லை. அதனாலும், இந்தியா விடுதியில் இந்திய முறையில் உணவு வகைகள் கிடைக்கும் என்ற எண்ணத்தாலும், அவர் இந்தியா விடுதியிலே தங்குவதற்காக வந்தார்!

கரைப்பார் கரைத்தால் கல்லும் கரையும் அல்லவா? வ.வே.சு.ஐயர் இந்தியா விடுதியிலே என்று காலடி வைத்தாரோ, அன்று முதல் ஐயரின் போக்கிலே ஒரு புது மாறுதல் உருவானது.

சாவர்கரின் நாவன்மைக்கு ஐயர் உணர்ச்சி அடிமையானது; அதாவது தேசபக்தராக அவரை மாற்றிவிட்டது. ஏன் லண்டன் வந்தோம் என்பதை அவர் அடியோடு மறந்தார்! லண்டனுக்கு அவர் வருவதற்கு முன்பு, தனது குடும்ப நிலை என்ன, என்பதைச் சிந்திக்க மறந்து அவர் தீவிர தேசபக்தரானார்! இதுதான் அவரது ஊழ்வினையோ!

சாவர்கரைப் போல ஐயரும் இந்தியாவை வெள்ளையரிடமிருந்து விடுவிக்க வேண்டும் என்று சிந்தித்தார். ஆனால் ஒன்று. இந்தச் சிந்தனைகளுக்கு இடையே சட்டக் கல்லூரிப் படிப்பை மட்டும் அவர் மறக்கவில்லை. தொடர்ந்து படித்துக் கொண்டே வந்தார். ஆனால், படித்த நேரம்போக, மீதிநேரமெல்லாம் நாட்டு விடுதலை பற்றிய சிந்தனையிலேயே மூழ்கிக் கிடந்தார்!

இலண்டனிலே இரகசியமாக நடைபெற்று வந்த அபிநவ பாரத் சங்கத்திலே ஐயர் உறுப்பினரானார். புரட்சிகரமான திட்டங்கள் இவர் சிந்தனையிலே சுரந்தன. இந்தச் சிந்தனைக் குழப்பங்களுக்கு இடையே தனது மைத்துனர் பசுபதி வைத்துக் கொடுத்த உண்டியல் கடையை மூடலானார்-பாவம்!! உண்டியல் கடையை மட்டுமா மறந்தார்! ரங்கூன் நகரிலே உள்ள தனது அருமை மனைவியையும் மகளையும் கூட அடியோடு மறந்தே போனார்! மனைவி மக்களை மட்டுமா மறந்தார்? லண்டன் வருவதற்கு யார் காரணக்கர்த்தாவாக இருந்தாரோ, அந்த மைத்துனர் பசுபதியையும் ஐயர் மறந்தார்!

வ.வே.சு.ஐயர் இப்போது சுதந்திரப் பைத்தியமானார்! வரம்புக்கு மீறிய ஓர் உணர்வில் எதைச் செய்யலாம், செய்யக்கூடாது என்பதை மறப்பது இயல்புதானே! அதனால், ஐயர் மனதில் எப்போது பார்த்தாலும், அடிமைத் தளையை அகற்றிப் பாரததேவியை வெள்ளையர்களிடம் இருந்து எப்போது விடுதலை செய்வோம் என்ற எண்ணத் துடிப்பும், தீவிரமும் அதிகமாகிக் கொண்டே இருந்தன.

சாவர்கர் என்ற மராட்டிய சிங்கத்துக்கு தமிழகத்து வீரவேங்கை யான வ.வே.சு.ஐயர், வலதுகையாகச் செயல்பட்டார். ஆங்கில ஏகாதிபத்தியத்தின் ஆணிவேரை அறுத்தெறியும் சுதந்திரப் போர்ப்படைத் தளபதிகளிலே ஒருவராக வ.வே.சு.ஐயர் திகழ்ந்தார்.

# யார் இந்தக் கீர்த்திகர்? சகுனியா அல்லது விபீஷணனா?

இலண்டனில் உள்ள 'இந்தியா விடுதியில் ஒரே நேரத்தில் இருபது பேர்கள் தான் தங்கலாம்! ஆனால், அங்கே ஒரே சமயத்தில் ஏழுபேருக்கு மேல் தங்குவது இல்லை. என்ன காரணங்கள் அதற்கு?

இந்தியப் புரட்சி இளைஞர்கள் கல்வி கற்க வந்துள்ளோம் என்ற பெயரிலே அங்கே வந்து தங்குவதால், அடிக்கடி அங்கு ரகசியப் போலீஸ் கண்காணிப்பு இருந்து கொண்டே இருந்தது. அதனால் இந்தியர்கள் அச்சப்பட்டு அங்கே தங்குவதில்லை.

இந்தியா விடுதியிலே தங்கி இருப்பவர்களுக்குப் போதிய பணியாளர்கள் இல்லை. அதனாலே அங்கே தங்கி இருப்பவர்களே எல்லா வேலைகளையும் செய்து கொண்டாக வேண்டும் என்பதால் இந்தியர்கள் அங்கே தங்காமல் வெவ்வேறு விடுதிகளுக்குப் போய் தங்கிவிடுவார்கள்.

இந்தியா விடுதியிலே சுவையான, விதவிதமான உணவு வகைகள் இல்லை. விருப்பத்துக்கேற்றபடி உணவுண்ண முடிய வில்லை. இக்காரணங்களாலும் பலர் வெவ்வேறு உணவு விடுதிகளுக்குச் சென்று தங்கி விடுகின்றார்கள்.

எனவே, யார் வசதிக் குறைவுகளைப் பற்றிக் கவலைப்படா தவர்களோ, யார் சுவையான உணவு வகைகளைப் பற்றி அக்கறைப் படாதவர்களோ, யார், வேலைகளைச் செய்திட வேலைக்காரர்கள் இல்லையே என்று வருத்தப்படாதவர்களோ, யார் லண்டன் ரகசியப் போலீஸ் கண்காணிப்புகளைப் பொருட்

படுத்த மாட்டார்களோ, அவர்கள் தான் இந்தியா விடுதியிலே தங்குவார்கள்.

அவர்களுள் குறிப்பிடத் தக்கவர்கள் வ.வே.சு.ஐயர், விநாயகராவ் சாவர்கர், டாக்டர் டி.எஸ்.எஸ். ராஜன் ஆகியோர் ஆவர். இவர்களுள் சாவர்கர் மராட்டியர், மற்ற இருவர்களும் திருச்சி மாநகரைச் சேர்ந்த தமிழர்களாவர்! வ.வே.சு. ஐயர் எதிலும் முனைப்பாகவும் சுறுசுறுப்பாகவும் இருப்பவர்! மராட்டியர் எல்லாவற்றுக்கும் விளை நிலமாக விளங்குபவர் என்றால் மிகையன்று!

துப்பாக்கி சுடுதல், வெடிகுண்டு வீசுதல், துப்பறிதல், துணிகரமாக எச்செயலிலும் ஈடுபட்டுச் செய்தல் போன்ற செயல்களைச் செய்வதற்குப் பயிற்சி பெற்றால் தானே ஒரு புரட்சி இயக்கத்தை நடத்த முடியும்? வாய்கிழியப் புரட்சி புரட்சி என்று கூறிவிட்டால் போதுமா? ஆனால் மேற்கண்ட செயல்களிலே பயிற்சி பெற்ற வர்களே இந்தியா விடுதியிலே தங்கியிருந்த இளைஞர்கள்.

அவர்களுள் மிகவும் குறிப்பிடத் தக்கவர் வ.வே.சு.ஐயர்! துப்பாக்கி சுடும் பயிற்சியிலே நிபுணராவதற்காக ஐயர், பாரீஸ் நகரமே சென்று வந்தார். அத்தோடு நின்றாரா அவர்? பாரீஸ் நகரிலே இருந்து ஏராளமான துப்பாக்கிகளை வாங்கி, பம்பாயிலே உள்ள அபிநவபாரத் சங்கத்திற்கு அனுப்பினார்!

இங்கிலாந்திலும், இந்தியாவிலும் புரட்சியை உருவாக்கு வதற்காக வ.வே.சு.ஐயரும், அவரது நண்பர்களும் பல ரகசியத் திட்டங்களைப் போட்டு வந்தார்கள். அவற்றை கைப்பற்றிட பிரிட்டிஷ் ரகசியப் போலீசார் எவ்வளவோ முயன்று பார்த்தும் முடியவில்லை.

இந்த மாதிரியே ஏமாற்றங்கள் சிலவற்றைச் சந்தித்த லண்டன் போலீஸ். இந்தியா விடுதிக்குள்ளேயே எட்டப்பன், சகுனியின்

வேலைகளைச் செய்திட ஒற்றர்களை நியமித்தது. ஐயரையும் மற்ற இந்திய இளைஞர்களையும் கையோடு பிடிப்பதற்காக முடிவு செய்தது. அதற்கான சந்தர்ப்பத்தையும் எதிர் நோக்கிக் காத்திருந்தது.

சாவர்கர், வ.வே.சு போன்றோர் சாதாரணமானவர் அல்லர்! போலீஸ் விவரங்களை நன்றாகப் புரிந்தவர்கள். சிறந்த சிந்தனை யாளர்கள்; எதையும் ஆழமாக உணர்ந்து பார்த்துச் செயல்படக் கூடிய அறிவாளிகள். குறிப்பாகக் கூறுவதானால் லண்டன் ரகசியப் போலீஸ்காரர்களை விட எல்லாவற்றுள்ளும் கைதேர்ந்தவர்கள்! ரகசியப் போலீஸ் வல்லாளர்களையே திணறடிக்கும் திறமை சாலிகள் ஆவர்.

அது போலவே, லண்டன் ரகசியப் போலீசும் சாதாரணமானது அன்று! உலகப் புகழ் பெற்றது. போலீஸ் புலிகளுக்குள்ளேயே மிக சக்தியும், வல்லமையும், மதி நுட்பமும் உள்ளது ஸ்காட் லாண்டு யார்டு ரகசியப் போலீஸ்துறை! எனவே, இந்திய இளைஞர் களுக்கும் இரகசியப் போலீசுக்கும் இடையே ஒரு துப்பறியும் போரே நிகழ்ந்து கொண்டிருந்தது.

மராட்டியர் ஒருவர் இந்தியா விடுதிக்கு வந்தார். சாவர்கரைச் சந்தித்து சரளமான மராட்டிய மொழியிலே அவரோடு பேசினார். அவர் மராட்டிய மாநிலத்துப் பிரபுக்கள் பரம்பரை என்றும், பல் வைத்தியம் சம்பந்தமாகப் படிக்க லண்டன் வந்திருப்பதாகவும் அவரிடம் கூறினார். இந்தியா விடுதியில் தங்கிப் படிக்க விரும்புவதாகவும் குறிப்பிட்டார். எவர்க்கும் எதற்கும் மயங்காத சாவர்கர், இந்த மராட்டியப் பல்வைத்தியப் படிப்புக்கு வந்தவரிடம் அவரது பேச்சு வன்மை, மொழிவளமையைக் கண்டு மயங்கினார். அதனால், இந்தியா விடுதியில் தங்கிப் படிக்க அவரை அனுமதித்தார். அவர் பெயர் கீர்த்திகர். அவர் விடுதியிலே தங்கிய தோடு சாவர்கர் சங்கத்திற்கு ஒரு பவுனும், உணவுக்குரிய பணமும் கொடுத்தார்.

தினமும் காலையில் எழுந்து பல்மருத்துவமனைக்குக் கீர்த்திகர் செல்வார். மாலையில் தான் விடுதிக்கு வந்து சேருவார். இவ்வாறு சில நாட்கள் சென்றன. பிறகு, கீர்த்திகருடைய போக்கில் ஒரு மாற்றம் ஏற்பட்டது. வழக்கமாகக் காலையில் எழுந்து மருத்துவமனைக்குப் போவதை நிறுத்திவிட்டார். பொழுது வந்தவுடன் எழுபவர், விடிந்து நெடுநேரமாகியும் கூட எழாமல் தூங்கியபடியே இருந்தார். பிறகு உணவு உண்டபின்பும் விடுதியிலேயே தங்கினார். விடுதியிலே வேலை செய்யும் வேலைக்காரியை அழைத்துக் கொண்டு நாடகம், சினிமா, இசைக் கச்சேரி போன்ற கேளிக்கை விழாக்களிலே கலந்து கொண்டு ஆடிப்பாடி இரவு நெடு நேரம் கழித்து விடுதிக்கு வருவார். அதாவது விடுதியின் கட்டுப்பாடுகளை மீறி நடந்து வந்தார்.

கீர்த்திகருடைய புதுமாதிரியான செயல்களைக் கண்டு சாவர்கரும், வ.வே.சு.ஐயரும் மற்ற விடுதியினர்களும் கடும் கோபமடைந்தார்கள். முதலில், கீர்த்திகருடைய எல்லா நடத்தைகளுக்கும் உதவியாக இருந்த விடுதிவேலைக் காரியைப் பணியை விட்டு நீக்கினார்கள்.

ஆனால், அவர் இதைப் பற்றிக் கவலையேதும் படாமல் அதே தெருவில் வேறு வீடு ஒன்றை வாடகைக்கு எடுத்து அதே வேலைக் காரியை மீண்டும் வேலைக்கு அமர்த்திக் கொண்டு அவளுடன் இரவு நேரங்களில் சுற்றி அலைந்துவிட்டு, இந்தியா விடுதிக்கு நெடுநேரம் கழித்து வந்து தங்குவார்.

இவ்விதமாகக் கட்டுமீறிய செயல்களைச் செய்துவரும் கீர்த்திகர் மீது விடுதியிலுள்ள அனைவருக்கும் சந்தேகம் வலுத்தது. உடனே கீர்த்திகர் படிப்பதாகக் கூறிய பல்மருத்துவமனைக்குச் சென்று டாக்டர் ராஜன் விசாரித்தார். பல்மருத்துவ மனையை விட்டு கீர்த்திகர் நின்று விட்டதாகத் தகவல் கிடைத்தது. அதற்குப் பிறகு அவர்மீது சந்தேகம் மேலும் அதிகமானது.

ஒரு நாள் வேலைக் காரியை அழைத்துக் கொண்டு கீர்த்திகர் வழக்கம் போல சுற்றச் சென்றுவிட்டார். அவர் மீண்டும் விடுதிக்குத் திரும்பிட நேரமாகும் என்பதால் ஐயரும், மற்றவர்களும் கீர்த்திகருடைய அறையை வேறொரு திறவுகோல் கொண்டு திறந்தார்கள். உள்ளே இருந்த எல்லாச் சமான்களையும் சோதனை செய்தார்கள்.

கீர்த்திகர் லண்டன் போலீசாருக்கு அனுப்புவதற்காக எழுதிய கடிதங்கள் அவர்களிடம் கிடைத்தன. இதன் மூலமாக, அவர் லண்டன் போலீசாருக்கு ஓர் ஆள் காட்டியாக வேலை செய்கிறார் என்ற விவரம் தெரிந்தது. இவ்வளவு மோசமான ஒரு விபீஷணனா வரட்டும் அந்தச் சகுனி, உடனிருந்தே கொல்லும் அவனது துரோகத்தைத் தட்டிக் கேட்டு விரட்டியடிப்போம் என்று ஐயர், கீர்த்திகருடைய அறையைப் பூட்டிவிட்டார். தனது அறைக்குச் சென்று துப்பாக்கியை எடுத்தார். அதிலே சில ரவைகளைப் போட்டுத் திணித்துக் கொண்டு, கீர்த்திகர் எப்போது வருவார் என்று எதிர்நோக்கி இருந்தார்.

வழக்கம் போல கீர்த்திகர் அன்றிரவு நெடுநேரம் சென்று அறைக்கு வந்தார். உள்ளே போனார். அவர் பின்னாலேயே ஐயரும் சென்றார். ஐயரைப் பார்த்ததும் கீர்த்திகர் திடுக்கிட்டார். 'லண்டன் நகருக்கு வந்து நண்பனைப் போலப் பழகிக் கொண்டு வெள்ளையர்களுக்கு உளவு வேலை செய்வது துரோகம், சகுனித்தனம், கேவலம் என்று ஐயர் கோபமாகக் கொந்தளித்தார்.

கடுமையான சொற்களைக் கொட்டும் ஐயரது கோபத்தைப் பார்த்துக் கீர்த்திகர் பயந்தார். ஒருவாறு சமாளித்துக் கொண்ட கீர்த்திகர், உளவுவேலை செய்வது அயோக்கியத்தனம், பச்சைத் துரோகம், என்று ஐயர் கோபத்துக்குப் பின்பாட்டுப் பாடினார்.

நாணயமானவர் போலப் பேசும் கீர்த்திகரது யோக்யதையைப் பார்த்து ஐயர் மேலும் கோபம் கொண்டு, திடீரென்று அறைக் கதவை ஓசை யேற்படும்படி அடைத்துத் தாழ் போட்டார்!

அவ்வளவுதான்! கீர்த்திகன் ஆடிப்போனான்! நடுங்கினான்! உடலெல்லாம் உதறல்! என்ன நடக்குமோ என்று வியர்த்துப் போனான் அவன். நெஞ்சே அவனைச் சுட்டெரித்துக் கொண்டு இருந்தது.

தாழ்போட்ட வேகத்தோடு ஐயர் கீர்த்திகர் பக்கம் நோக்கி, 'உளவு பார்ப்பது உமக்குப் பிடிக்காது, இல்லையா? அப்படியானால், அந்தக் கீழ்த்தரமான விபீஷண வேலையை இங்கே செய்து கொண்டிருக்கும் இனத் துரோகியார்? இதோ, இந்த ரகசியக் கடிதங்களைப் போலீசுக்கு எழுதிய யோக்யன் யார்?'' என்று முகத்தில் கோபம் கொப்பளிக்க அறையின் சோதனையிலே கிடைத்த கடிதங்களை எடுத்து வீசினார்!

தன்மேல் வீசப்பட்ட கடிதங்களைக் கண்ட கீர்த்திகன் நடுங்கித் திணறினான். குப் என்று அவனது உடல் வியர்த்தது! பேச முடியாமல் ஊமையாக நின்று கொண்டிருந்தான் அவன்!

'இதோ பார்!, உண்மையைச் சொல்லிவிடு, இல்லை யென்றால் சுட்டுக் கொன்று விடுவேன், என்று சொல்லிக் கொண்டே இடுப்பிலே செருகியிருந்த துப்பாக்கியை எடுத்து அவன் மார்புக்கு நேரே நீட்டினார் ஐயர்!

கீர்த்திகன் இருகையாலும் ஐயரை நோக்கிக் கும்பிட்டான்! 'என்னைச் சுட்டு விடாதீர்கள், என்னைச் சுட்டு விடாதீர்கள்' என்று கதறினான்! ஐயருடைய காலிலே மரம் ஒன்று சாய்ந்தது போல விழுந்து விட்டான் அவன்.

ஐயர், எடுத்த துப்பாக்கியை மீண்டும் செருகிக் கொண்டு, 'எழுந்திரு! அங்கே போய், உட்காரு! என்றார்! கீர்த்திகனும் எழுந்து அமர்ந்தான்-உடல் நடு நடுங்கியபடியே! பிறகு, அவன் பேசும் போது.

''நான் ரகசியப் போலீசாருக்கு கையாளாக இருந்து இங்குள்ள தகவல்களைச் சேகரித்து அனுப்பியது உண்மைதான். இனிமேல்

இந்த ஆள்காட்டி வேலையைச் செய்ய மாட்டேன். என்னைச் சுடாமல் விட்டு விடுங்கள். நான் ஓடி விடுகிறேன். இனி இந்த விடுதிப் பக்கமே திரும்ப மாட்டேன்' என்று அழுது கொண்டே கூறினான் கீர்த்திகன்.

ஐயர், கலகலவென்று சிரித்தார். 'கீர்த்திகா, உன்னை அவ்வளவு சுலபமாக அனுப்பி விடுவோமா? நான் சொல்வது போல் செய்தால் உன்னை ஒன்றும் செய்யாமல் விட்டு விடுகிறோம். நீயும் இந்தியாவுக்குத் திரும்பும் வரை இந்த விடுதியிலேயே தங்கலாம். என்ன சொல்கிறாய்? என்று கேட்டார் ஐயர்!

சரி என்று சம்மதம் தெரிவித்தான் கீர்த்திகன். 'இதோபார், இனியும் நீ உளவாளியாகவே இரு. ஆனால் ஒன்று. நாங்கள் சொல்கிறபடி அறிக்கையைத் தயார் செய்து போலீசாரிடம் கொடுத்து வர வேண்டும். போலீசார் என்ன சொல்கிறார்களோ அதைக் கேட்டு எங்களிடம் கூறவேண்டும். அது மட்டுமன்று, இனிமேல் மாதம் இரண்டு பவுன்தரவேண்டும். என்றார் ஐயர்.

ஏற்றுக் கொண்டான் கீர்த்திகன் ஐயரது நிபந்தனைகளை! வ.வே.சு.ஐயர் சொன்னபடியே தவறாமல் செய்து வந்தான். பாவம், ஸ்காட்லாண்ட் யார்டு போலீசார்! ஏமாந்து கொண்டே வந்தார்கள் வழக்கம் போல ஐயர் உட்பட அனைவரும் ரகசிய சங்கப் பணி களைச் செய்து வந்தார்கள்.

# இலண்டனில் தீபாவளி விழா! காந்தியடிகள் சமையல்காரர்!

இங்கிலாந்து நாட்டிலே இருந்த இந்தியர்கள், சாவர்கர் எழுதிய கட்டுரைகளைப் படித்து இந்திய நாட்டின் சுதந்திரப் பற்றிலே புதியதோர் புத்துணர்ச்சியைப் பெற்றார்கள். ஆனால், சுதந்திரத்தின் விரோதிகளான இங்கிலீகாரர்கள் இந்திய இளைஞர்கள் மீது எரிச்சலும், பகையும் கொண்டார்கள்.

இதனால், மாவீரர் சாவர்கர் எழுதிய நூல்கள் சில பிரிட்டிஷ் அரசால் தடை செய்யப்பட்டன. ஏன் தடை செய்தீர்கள் என்று இந்தியர்கள் அரசினரைக் கேட்டபோது, ஆங்கில அரசுக்கு எதிராக எவ்விதச் சுதந்திரக் கருத்துக்களையும் எழுதக்கூடாது! என்றார்கள். ஆனால், சாவர்கரும், ஐயரும், மற்ற இந்திய வாலிபர்களும், பிரிட்டிஷ் அரசை ஏமாற வைத்து விட்டு, தடை செய்யப்பட்ட நூல்களை உலக நாடுகளின் விற்பனைக்கு அனுப்பினார்கள்.

தடை செய்யப்பட்ட அந்த நூல்களைப் படித்த இந்தியர்கள் புதிய உணர்வு பெற்றார்கள். எப்படியும் இந்திய தேசத்தை ஆங்கிலேயர்களிடமிருந்து விடுவிக்க வேண்டும் என்று உறுதி பூண்டார்கள்.

சாவர்கரது நூல்கள், இங்கிலீஷ்காரர்களை இந்தியாவிலே இருந்து விரட்ட வேண்டும் என்ற உணர்ச்சிகளை மக்களிடம் பல்வேறு வகையில் தூண்டிவிட்டது என்றால், வ.வே.சு. ஐயர் அந்த மக்களது உணர்ச்சிகளையும் மீறி ஒருபடி மேலே சென்று, பிரெஞ்சு நாட்டின் தலைநகரான பாரிசுக்குச் சென்று துப்பாக்கிகளை வாங்கி, இந்தியாவிலே இருந்த அபிநவபாரத் உறுப்பினர்களுக்கு ரகசியமாக அனுப்பி வைத்தார்.

அந்தத் துப்பாக்கிகள் எல்லாம் பம்பாயிலே இருந்து பல்வேறு இடங்களுக்கு அனுப்பப்பட்டது. புரட்சி எந்த உருவத்திலாவது உருவாகாதா? வெள்ளைக்காரன் வெளியேற மாட்டானா? என்ற நோக்கம் ஐயரிடம் வேரூன்றிவிட்டது.

பலாத்காரத்தின் மூலமாகத் தான் இந்தியா சுதந்திரம் பெறமுடியும் என்ற கருத்து ஐயரின் உயிர் மூச்சாக இருந்தது. ஆனால், இந்த ஐயரின் உணர்ச்சியும் சாவர்கரின் எழுச்சியும் அண்ணல் காந்தியடிகளது அகிம்சைத் தத்துவப் போக்கை மாற்ற முடியாமல் தோற்றுப் போயின. அவ்வாறிருந்தும் கூட, காந்தி பெருமானிடம் அவர்களுக்கு இருந்த மதிப்பும் மரியாதையும் கடுகள்வும் குன்றவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

வ.வே.சு.ஐயரும், சாவர்கரும் பாரிஸ்டர் படிப்புக்காக லண்டனில் தங்கியிருந்தபோது, இந்தியா சுதந்திரத்தை வன்முறையால்தான் பெறமுடியும் என்பதற்காகப் போராடித் தொல்லைகளை ஏற்றுக் கொண்டிருந்த போது, காந்தியண்ணல் தென்னாப்ரிக்க இந்தியர்களது உரிமைகளுக்காக அதே வெள்ளை ஆட்சியை எதிர்த்துத் தென் ஆப்ரிக்காவிலே தலைமையேற்றுப் போராடிக் கொண்டிருந்தார்.

தென்னாப்ரிக்காவிலே வெள்ளையர் ஆட்சி இந்தியர்களுக்குக் கொடுத்துவரும் வரம்பு மீறிய செயல்களை லண்டனிலே உள்ள பிரிட்டிஷ் ஆட்சியின் பெரிய அதிகாரிகளைப் பார்த்துக் கூறி அதற்கோர் வழிகாணவேண்டும் என்பதற்காக அண்ணல் காந்தி லண்டன் நகர் வந்திருந்தார். அப்போது, ஐயர் அவர் தங்கியிருந்த முகவரியைத் தெரிந்து கொண்டு காந்தி பெருமானைச் சந்தித்தார்!

இந்தச் சந்திப்புக்கு முன்பு இருவரும் சந்தித்ததில்லை. அதனால், ஐயர் தன்னை யார் என்று அறிமுகப்படுத்திக் கொண்டார். காந்திபெருமன் அவரை மகிழ்ச்சியுடன் வரவேற்றார். இருவரும் இந்திய சுதந்திரத்தைப் பற்றி நெடுநேரம் உரையாடினார்கள். இந்தியா சுதந்திரம் பெறுவதற்கான ஒரே வழி பலாத்காரம் தான் என்ற தனது உணர்வைக் காந்தியடிகளிடம் வற்புறுத்தி, வலியுறுத்தி ஐயர் பேசினார்!

ஆனால், காந்தியண்ணல் ஐயர் கருத்துக்களை தக்க காரணங்களுடன் மறுத்து அகிம்சை ஒன்றுதான் சுதந்திர வழி என்று கூறினார்! வாதப் பிரதி வாதங்கள் வளர்ந்து கொண்டே போவதை அறிந்த இருவரும் அவரவர் வழிகளே சிறந்தவை என்று முடிவு கட்டிக் கொண்டார்கள். ஆனால், இருவர் நோக்கமும் இந்தியா சுதந்திரம் பெற வேண்டும் என்பதுதான். இதில் வழிகள்தான் வெவ்வேறாகும் என்பதை உணர்ந்தனர்.

காந்தியடிகள் லண்டனில் இருக்கும்வரை ஐயர் அவரைத் தேடி அடிக்கடி சென்று தனது நட்பை வளர்த்துக் கொண்டார். சுதந்திர வேட்கையை அவர் காந்தியிடம் கூறி வழி கண்டு வந்தார்.

இந்த நேரத்தில் ஐயருக்கு ஓர் ஆசை எழுந்தது. லண்டனிலே வாழ்கின்ற சுமார் ஆயிரத்துக்கும் மேலான இந்தியர்களை ஒன்று கூட்டி ஏதாவது ஒரு விருந்து வைத்து மகிழவேண்டும் என்பதே அந்த ஆசை!

அதற்காகத் தீபாவளித் திருவிழாவைப் பயன்படுத்த விரும்பினார். இக் கருத்தை ஐயர் சாவர்கரிடமும், டி.எஸ்.எஸ். ராஜன் போன்றவர்களிடமும் கூறியபோது, எல்லோரும் அதை வரவேற்றார்கள். அதற்கான எல்லா ஏற்பாடுகளையும் எல்லாரும் செய்து வந்தார்கள்.

இந்த விழாவிற்குரிய சிறப்பு விருந்தினராக யாரை அழைக்கலாம் என்று இந்திய வாலிபர்களைக் கூட்டி ஐயர் கருத்தறிந்தார். எல்லோரும் ஒரு மனதாக, தென்னாப்ரிக்காவிலுள்ள இந்தியர்களது உரிமைகளுக்காக, தனியொரு மனிதனாக நின்று போராடி வரும் காந்தியடிகள் சிறப்பு விருந்தினராக அழைக்கத் தகுதியுடையவர் என்ற முடிவுக்கு வந்து அவரையே அழைக்கத் தீர்மானித்தார்கள்.

ஐயர், காந்தியடிகளிடம் சென்றார். தங்களது தீபாவளி விழாத் திட்டத்தைக் கூறினார். காந்தியடிகள் அவ்விழாவின் சிறப்பு விருந்தினராக வந்து கலந்து கொள்ள வேண்டும் என்று பணிவன்புடன் அவரைக் கேட்டுக் கொண்டார்!

''காந்தியடிகள் தனது மூன்று நிபந்தனைகளை ஏற்றுக் கொண்டால் விழாவில் கலந்து கொள்வதாகக் கூறினார்! ஒன்று விருந்து விழாவை எந்த உணவு விடுதியிலும் நடத்தக் கூடாது. இரண்டு ஏதாவது ஓரிடத்தில் எளிமையாகவே நடத்த வேண்டும். மூன்று இந்திய முறை உணவே விருந்தில் பரிமாறப்பட வேண்டும். எக் காரணத்தைக் கொண்டும் புலால் உணவோ மதுபான வகைகளோ விருந்தில் இடம் பெறக் கூடாது'' என்பதே காந்தியடிகள் விதித்த நிபந்தனைகளாகும். இந்த மூன்றையும் ஐயர் நிறைவான மனத்தோடு ஏற்றுக் கொண்டார். விழா விருந்துக்குரிய நாளையும் அடிகள் குறித்து ஐயரிடம் கொடுத்ததை அவரும் ஏற்றுக்கொண்டார்.

பெற்றுக் கொண்ட நாளையும், அடிகள் அறிவித்த நிபந்தனைகளையும் நண்பர்கள் கூட்டத்தில் ஐயர் குறிப்பிட்டு அவர்களுடைய எண்ணங்களையும் அறிந்தபோது, எல்லாரும் காந்தியாருடைய கருத்துக்களை முழுமனதோடு அப்படியே ஏற்றுக் கொண்டார்கள்.

விருந்து நடை பெறுவதற்கான ஓரிடத்தை உறுதி செய்து, எல்லா விருந்தினர்களுக்கும் அழைப்புகள் அனுப்பப்பட்டன. அதற்கான மற்ற வேலைகளும் நடந்து கொண்டிருந்தன. இந்திய உணவு முறைகளைத் தயாரிப்பதற்கான உணவுச் சாமான்களை ஐயருட்பட சிலர் கடைகளிலே வாங்கி வந்தார்கள். பாத்திரங்கள் தேடித்தேடி வாங்கி வரப்பட்டன.

விருந்து நாளன்று ஐயர் வெளியே சென்றிருந்தார். இந்திய வாலிபர்கள் அனைவரும் சமையல் வேலையில் ஈடுபட்டுச் செய்து கொண்டிருந்தார்கள். அந்த இடத்திற்கு நடுத்தர வயதுடைய ஓர் இந்தியர் வந்தார். இந்தியர் உடையிலே இருந்த அவர் சமையல் செய்து கொண்டிருந்தவர்களுக்கு உதவிட முன் வந்தார்.

இந்திய உடையிலே வந்தவரைப் பார்த்த இந்திய வாலிபர்கள், 'ஐயோ பாவம், ஏதோ ஏழை இந்தியர் போலிருக்கு! சரி இவரும் நம்முடன் சமையல் வேலைக்கு உதவட்டும்; விருந்து உண்டு

விட்டுப் போகட்டும்' என்று நினைத்து, அவரைப் பாத்திரங்களைத் துலக்குமாறும், தண்ணீர் சுமந்து வருமாறும், காய்கறிகளை அரியும் படியும் வேலைகளைக் கொடுத்தார்கள்! அவரும் எல்லா வேலைகளையும் சுறுசுறுப்புடன் ஓய்வின்றிச் செய்தார்.

விருந்து வேலையாக வெளியே சென்றிருந்த வ.வே.சு. ஐயர் சமையல் நடக்கும் இடத்திலே எப்படி வேலை நடக்கின்றது. என்பதைப் பார்க்க வந்தார்! அப்போது தமது வாலிப நண்பர்களுடன் போட்டிப் போட்டு சமையற் பணிகளைச் செய்து கொண்டிருக்கும் ஏழை இந்தியர் உடையிலே உள்ளவரைக் கண்டார்! மீண்டும் கூர்ந்து பார்த்தார்!

தனது நண்பர்களிடம் ஒரே கூச்சல் போட்டார்! எல்லாரும் திரு திரு வென்று ஐயரைத் திரும்பிப் பார்த்த போது, "நண்பர்களே, நீங்கள் செய்தது. நியாயம்தானா? சிறப்பு விருந்தினரை இவ்வாறு வேலை செய்யச் சொல்லலாமா? அழகா இது? ஐயோ, இவர் தான் நண்பர்களே காந்தியடிகள்! என்று காந்தியண்ணலைச் சுட்டிக் காட்டிப் பதறிக் கதறினார்!

இதைக் கேட்ட இந்திய வாலிபர்கள் திடுக்கிட்டார்கள்! உடனே, காந்தியடிகளிடம் வ.வே.சு.ஐயரும், சாவர்கரும், ராஜனும் உட்பட அனைவரும் மன்னிப்புக் கேட்டுக் கொண்டார்கள் தெரியாமல் நடந்துவிட்ட தவறு என்று குரல் தழதழக்கக் கேட்டுக் கொண்டார்கள்.

அப்போது அடிகள் ஐயரையும், மற்ற நண்பர்களையும் பார்த்து, 'நானல்லவா உங்கள் அனைவரிடமும் மன்னிப்புக் கேட்க வேண்டும்! இந்திய முறை உணவு வழங்குமாறு உங்களுக்குத் தொல்லையை அல்லவா உருவாக்கிவிட்டேன். அது எவ்வளவு பெரிய கஷ்டமான வேலை? அந்தக் கஷ்டமான பணியை உங்கள் மீது சுமத்திச் சிரமப்படுத்திவிட்ட என்னை நீங்கள்தான் மன்னிக்க வேண்டும் என்றார். இவ்வாறு கூறிய அடிகள், தொடர்ந்து சமையல் வேலைகளைச் செய்தார்! ஐயரும், மற்றவர்களும் எவ்வளவோ சொல்லியும் அடிகளார் கேட்கவில்லை. தொடர்ந்து

செய்தபடியே இருந்தார். உணவு பரிமாறும் வரை செய்தார்! எல்லாருடனும் அமர்ந்து உணவுண்டார்! காந்தியடிகளுடைய எளிமையும், இனிமையான பேச்சும், வ.வே.சு.ஐயரை மட்டுமன்று, விருந்துண்ண வருகை தந்த எல்லா லண்டன் வாழ் இந்தியர் களையும் கவர்ந்தன!

விருந்துண்ட பின்பு வந்திருந்த இந்தியர்கள் முன்பு காந்தியடிகள் விருந்துரையான தனது நன்றியுரையைப் பேசும்போது, ''எனக்கும் சாவர்கருக்கும், ஐயருக்கும் கொள்கை ஒன்றுதான். இந்திய நாடு பரிபூரண சுதந்திரம் பெறவேண்டும். இந்தியாவை ஆளும் பிரிட்டிஷ் ஆட்சி இந்தியாவை விட்டு வெளியேறிட வேண்டும். இதுதான் எங்களுடைய உயிர்க் கொள்கை.

ஆனால், அந்தச் சுதந்திரத்தைப் பெறுவது எப்படி? இந்தியாவை விடுவிப்பது எப்படி? இந்த வழியில்தான் எனக்கும் அவர்களுக்கும் கருத்து வேறுபாடு. இருந்தாலும் இருவருடைய லட்சியம் ஒன்றே. லண்டனிலே உள்ள இந்தியர்கள் அமைதியான முறையிலே போராட்டம் நடத்தி இந்தியாவின் விடுதலைக்கு வழி காண வேண்டும் என்றார்!

விருந்தில் கலந்து கொண்ட அடிகளுக்கு நன்றி தெரிவித்து சாவர்கர் அழகான வீரவுரை ஒன்றை முழக்கமிட்டார்! பிறகு, காந்தியண்ணல் விடை பெற்றுச் சென்றார்!

விருந்திலே சாவர்கர் உரையைக் கேட்ட ஐயர், காந்தியடிகள் சாவர்கருடைய இதுபோன்ற இரண்டு பேச்சுக்களைக் கேட்பாரானால், சுதந்திரத்துக்கு பலாத்காரம் தான் சிறந்த வழி என்பதை ஒப்புக் கொள்வார் என்றார். பலாத்கார முறையில் ஐயர் அவ்வளவு நம்பிக்கை உடையவராக இருந்தார்.

# சுதந்திரத்திற்காக பட்டத்தைக் கைவிட்டார்!

இலண்டன் நகரம் சென்ற ஐயர் அங்கே உள்ள லிங்கன் சட்டக் கல்லூரியிலே சேர்ந்து படித்தார். அதற்கான தேர்வும் வந்தது. அதை எழுதிய ஐயர் வெற்றியும் பெற்று பாரிஸ்டரானார், ஆனால், அவரால் அந்தப் பாரிஸ்டர் பட்டத்தைப் பெற முடியவில்லை ஏன்?

பாரிஸ்டர் பட்டம் பெறுவோர் யாராக இருந்தாலும், அவர் பிரிட்டிஷ் அரசுக்குரிய ராஜவிசுவாசப் பிரமாணம் அதாவது உறுதிமொழியை எடுத்துக் கொள்ள வேண்டும். அதற்குப் பிறகு தான் பாரிஸ்டர் என்ற அந்த அடையாளப் பட்டமே வழங்கப்படும்.

ஆனால், வ.வே.சு.ஐயர் ஆங்கிலேயர் அரச நப் பரம விரோதி! பிரிட்டிஷ் மன்னரைத் தமது அரசராக ஏற்றுக் கொள்ள மறுப்பவர் மட்டுமன்று, வெள்ளையரின் பிரிட்டிஷ் ஆட்சியின் ஆணிவேரை இந்தியாவிலே அறுத்தெறிய அரும்பாடுபட்டு வருபவர்.

அத்தகைய அரசியல் பகையைத் தனது மனதிலே ஆழப் பதித்துக் கொண்டவர்; எப்படிப் பிரிட்டிஷ் அரசுக்கு ராஜ விசுவாசமாக நடப்பேன் என்று சொல்லுவார்? அதனால் வெள்ளையரிடம் விசுவாசமாக நடக்க முடியாது என்று அவர் பிரமாணம் எடுக்க மறுத்து விட்டார். பாரிஸ்டர் என்ற வயிற்றுப் பிழைப்புக்குரிய பட்டத்தை விட, எனது நாட்டின் சுதந்திர மானம் தான் பெரியது என்று மதித்தார். அதனால், பட்டம் பெறுவதை விட எனது தாய் நாடே பெரியது என்று ஐயர் தீர்மானம் செய்தார். அதனால், பாரிஸ்டர் தேர்வில் அவர் வெற்றி பெற்றுவிட்ட பிறகும் கூட, அதற்குரிய பாரிஸ்டர் என்ற பட்டத்தைப் பெறும்

எண்ணத்தையே கைவிட்டு விட்டார். அதற்குப் பதிலாக தேசத் தொண்டில் ஈடுபட்டார்.

பிரிட்டிஷ் ஆட்சிக்கு அரச விசுவாச உறுதி மொழி எடுத்துக் கொள்ள மறுத்துவிட்டார் ஐயர்; என்பதைக் கேள்விப்பட்ட லண்டன் நகர் ரகசியப் போலீஸ் துறை அவர்மீது சந்தேகப்பட ஆரம்பித்து விட்டது. சந்தேகம் மட்டுமன்று, ஐயருக்குத் தொடர்ந்து தீராத துன்பங்களைக் கொடுக்கத் துவங்கியது. அதனால் ஐயர் போகுமிடங்களிலே எல்லாம் போலீஸ் நிழல் பின் தொடர்ந்தது. ஆனால், ஐயர் இதையெல்லாம் பெருட்படுத்தவில்லை.

வழக்கம் போல சாவர்கரின் அபிநவபாரத் சங்கத் தோடு தொடர்பு வைத்துக் கொண்டு, வ.வே.சு.ஐயர், அவர்களது பணிக்குரிய ஆதரவுகளையும், ஒத்துழைப்புக்களையும் கொடுத்துக் கொண்டிருந்தார். லண்டன் நகரிலே இருந்து கொண்டு இந்தியாவில் இருந்த பத்திரிகைகளுக்கும், குறிப்பாகத் தமிழ் நாட்டுப் பத்திரிகைகளுக்கும் கட்டுரை, கதை, கவிதைகளை எழுதி அதன்மூலம் சுதந்திரக் கருத்துக்களுக்கு உணர்ச்சி உருக் கொடுத்து வந்தார் ஐயர்! அவரது கருத்துக்களைப் படித்தவர்கள் நாட்டுப் பற்றுடையவர்கள் ஆனார்கள். மற்ற நாடுகளில் பிரிட்டிஷாரை எதிர்த்துப் போராடி, சுதந்திரம் பெற்ற வரலாறு களையும் அறிந்தார்கள். அதனால், தமிழ் மக்கள் இடையே சுதந்திர விழிப்புணர்ச்சியையும், மக்களிடையே ஒரு மன எழுச்சியையும் அவரது எழுத்துக்கள் உருவாக்கின. இதை யெல்லாம் கூர்ந்து நோக்கி வந்த பிரிட்டிஷ் அரசு ஐயர் மீது கோபாவேசம் கொண்டது.

இந்தியாவிலே அரசப் பிரதிநிதியாக இருந்த கர்சான் பிரபு பற்றிய வெறித்தனச் செயல்களை இதற்கு முன் படித்தீர்கள். இந்தியாவில் அவர் வைசியராயாக இருந்தபோது; அவருக்கு ஆலோசகர்களாக கர்சன் வைலி, லால் காக்கா என்ற இரண்டு வெள்ளையர்கள் இருந்தார்கள்.

அவர்கள் இருவரும் லண்டனில் இருந்த போது, மதன்லால் திங்க்ரா என்ற ஒரு தேச பக்தன் அவர்களை ஒரு பார்க்கிலே சுட்டுக் கொன்றார். அதனால், திங்க்ராவைக் கைது செய்து சிறையிலே அடைத்தது பிரிட்டிஷ் அரசு அவன் மீது கொலைக் குற்றம் சுமத்தப்பட்டு, லண்டனிலே வழக்கும் நடை பெற்று வந்தது.

மதன் திங்க்ராவுக்கும்-சுடப்பட்ட வெள்ளையர்களுக்கும் தனிப்பட்ட முறையில் எந்தவிதமான விரோதமோ, முன் பகையோ இல்லை. இந்தியாவிலே அவர்கள் இருவரும் கர்சான் பிரபுக்கு துர் ஆலோசகர்களாக இருந்து கொண்டு இந்திய மக்களைக் கொடுமைப்படுத்தினார்கள். திங்க்ரா கர்சன் பிரபுவையே சுட்டுக் கொல்லத் திட்டமிட்டார். கர்சான் திங்க்ராவிடம் சிக்காமல் மறைந்து கொண்டான். அதனால், அவனது கைக் கூலிகளாகச் செயல்பட்ட அந்த இரண்டு பேரும் கொலையாகிவிட்டார்கள். மொத்தத்தில் இந்தக் கொலை அரசியல் காரணங்களுக்காகச் செய்யப்பட்ட கொலையாகும்.

இக் கொலைகள் அரசியல் கொலைகள் என்று வெளியே சொன்னால் மற்ற நாடுகள் எல்லாம் சிரிக்குமே, அதுவும் லண்டனுக்கு வந்து இந்தியன் கொலை செய்துள்ளானே என்ற அவமானம் வந்து விடுமே என்று நினைத்த பிரிட்டிஷ் அரசு, இந்தக் கொலைக்கு வேறு காரணத்தைக் கூறி, வழக்கையும் நீதிமன்றத்தில் நடத்தி வந்தது.

அந்த நேரத்தில் லண்டனில் சுரேந்திரநாத் பானர்ஜி, பவநகரி, பிபின் சந்திர பால்காபர்டே போன்ற இந்தியத் தலைவர்கள் இருந்தார்கள். அவர்கள் திங்க்ராவின் கொலை வெறியைப் பலமாகக் கண்டித்தார்கள். பலாத்காரத்தை அவர்கள் எதிர்ப்ப தாகவும் அறிக்கை விட்டார்கள்.

கண்டனக் கூட்டம் நடத்தி, லண்டன் நகரிலே பகிரங்கமாகத் திங்க்ராவைக் கண்டித்து வாய்கு வந்தவாறு ஏசினார்கள். அக் கூட்டத்திற்கு ஆங்கிலேயர் கள், தங்களது குடும்பப் பெண்களுடன்

திரண்டு வந்திருந்தார்கள். அதே நேரத்தில், லண்டனுக்குப் பாரிஸ்டர் படிப்புப் படிக்கவந்த சாவர்கர், வ.வே.சு.ஐயர், அவர்களது நண்பர்கள் கூட்டத்தினர், டாக்டர் ராஜன் திருமலாச்சாரியார் போன்ற தேச பக்த வாலிபர்களும் திரண்டு வந்திருந்தார்கள்.

மதன்லால் திங்க்ராவைக் கண்டித்துக் கண்டனக் கூட்டத்தை நடத்தியவர்கள் பேசிய பேச்சின் காரசார சொற்களைக் கேட்டு, குடும்பத்தோடு அக் கூட்டத்துக்கு வந்த வெள்ளையர்கள் எல்லாம் மிகவும் மகிழ்ந்தார்கள். இறுதியாக, திங்க்ரா கொலை வெறிச் செயலைக் கண்டித்துக் கண்டனத் தீர்மானம் ஒன்று ஒருமனதாக நிறைவேறியது என்ற ஒரு குரல் மேடையிலே கேட்டது.

உடனே, ஓர் எதிர்ப்புக் குரல் இடிபோல கூட்டத்தின் மத்தியிலே எழுந்தது! கூட்டம் குழம்பியது. யார் இந்தத் தீர்மானத்தை எதிர்த்துக் குரல் எழுப்பியது என்று எல்லாரும் குரல் வந்த பக்கமே திரும்பினார்கள்!

"நிறைவேற்றப்பட்ட தாக நீங்கள் கூறிய அந்தத் தீர்மானம், ஒருமனதாக நிறைவேறவில்லை. அதை நான் பலமாக எதிர்க்கிறேன்" என்றார் சாவர்கர்!

கூட்டத்தில் பரபரப்போடு எழுந்த சிலர், 'அவனை அடக்கி உட்கார வை! யாரவன்?' என்று கத்தினர். தலைவர் சுரேந்திர நாத் பானர்ஜி, 'அவனைப் பிடித்து உட்காரவை, என்றார்! சாவர்கரை அமரவைக்கச் செய்த முயற்சிகள் வீணாயிற்று; உட்கார வைக்க முடியவில்லை-தலைவராலும்!

அந்த நேரத்தில் மேடையிலே உட்கார்ந்திருந்த பவநகரி, சாவர்கருக்கு அருகிருந்த பால்மர் என்ற கலப்பின வெள்ளை யனுக்குக் கண் ஜாடை காட்டினார்.

எழுந்தான் அந்த நீக்ரோ-வெள்ளைக் கலப்பினன்! விட்டான் ஒரு குத்து சாவர்கர் முகத்தில்! மூக்குக் கண்ணாடி நொறுங்கியது!

நொறுங்கிய கண்ணாடிச் சில்லுகள் அவர் முகத்தைக் கிழித்தன! அதனால் ரத்தம் சிந்தியபடியே இருந்தது!

அஞ்சினாரா சாவர்கர்? அதுதான் இல்லை. அந்த இடத்தை விட்டு அசையவுமில்லை. மலை போல நிலை குலையாமல் நின்றார். இழந்தாரா அவர் நிதானத்தையாவது? அதுவுமில்லை! நின்று கொண்டே தனது எதிர்ப்புக் குரலை இடிபோல் முழக்க மிட்டார்! அதுவும் அமைதியாகவே எதிர்த்தார்!

பால்மர் கலப்பினன் விட்டகுத்தைக் கண்ட வ.வே.சு. ஐயர் கொதித்தார்! இடுப்பிலே செருகி வைத்திருந்த துப்பாக்கியை உருவினார்! கலப்பினனைச் சுட குறிவைத்தார்! ஐயர் எப்போதும் அவசர உணர்ச்சி வயப்படுபவர் என்பது தெரிந்தவர் சாவர்கர்! அதனால் சாவர்கர் ஐயரின் துப்பாக்கிக் குறியைத் தடுத்துவிட்டார்!

திருமலாச்சாரி என்பவர் சாவர்கள் மீது அளவிலா அன்பு வைத்திருப்பவர். கலப்பினன் சாவர்கரைத் தாக்கியதைக் கண்ட ஆச்சாரியாரும், ஐயரைப் போலவே கொதித்து எழுந்தார். அவர், தான் வைத்திருந்த குறுந்தடியால் அந்தக் கலப்பின பால்மரின் தலையில் ஓங்கி, பலம் கொண்டவரை தாக்கினார்! விழுந்தான்! சுருண்டான்!

இந்த காட்சியைக் கண்ட கூட்டம், பரப்பரப்பான ஆரவாரத்தால் குழம்பியது. சாவாகரும், அவரது நண்பர்களும் வெடி குண்டு களை வீசினாலும் வீசுவார்கள். என்ற பீதியால், கூட்டத்திலே இருந்த ஆண்களும் பெண்களும் ஒருவரை ஒருவர் முண்டியடித்து விழுந்து எழுந்து கூட்டத்தை விட்டு வெளியே ஓடினார்கள்.

போலீஸ் சாவர்கரைப் பிடித்துச் சென்றது; தீர விசாரித்தது; குற்றமேதும் சாவர்கர் மீது இல்லையெனத் தெரிந்து விடுதலை செய்து விட்டது.

மறுநாள் சாவர்கர், பத்திரிக்கையிலே, நடந்த விவரத்தை எழுதியபோது; ''வழக்கு நீதி மன்றத்தில் இருக்கும் போது, அது

பற்றிப் பேசுவதும், குற்றவாளி என்று நிரூபிக்கப்படுவதற்கு முன்பே குற்றவாளி என்பதும், கண்டனம் தெரிவிப்பதும் தவறு. அதற்குத்தான் நான் அந்தத் தீர்மானத்தைப் பகிரங்கமாக எதிர்த்தேன்'' என்று குறிப்பிட்டார். எல்லாரும் இது உண்மைதானே என்று ஏற்றுக் கொண்டு அவரைப் பாராட்டினார்கள்.

இந்தச் சம்பவத்திற்குப் பின்பு, இந்தியா விடுதி மீது பிரிட்டின் அரசின் கண் காணிப்பு அதிகமானது. சாவர்கரையும், அவரது நண்பர்களையும் குற்றவாளிகள் என்று நீதி மன்றத்தில் நிறுத்திக் கடுமையான தண்டனைகளைப் பெற்றுத் தர வேண்டும் என்று அரசு பகீரத முயற்சி செய்து வந்தது. அதற்கான நடவடிக்கைகள் முயல் வேகத்தில் நடந்தன.

வ.வே.சு.ஐயரும், மற்ற நண்பர்களும் சாவர்கர் இனி லண்டனில் இருந்தால் எல்லோருக்குமே ஆபத்துதான் என்று அறிந்து சாவர்கரை பிரெஞ்சு நாட்டின் தலைநகரான பாரீஸ் நகருக்கு அனுப்பி வைத்தார்கள் மற்றவர்கள். அபிநவபாரத் சங்கப் பணிகளை ரகசியமாகச் செய்து வந்தார்கள்.

இந்தியாவிலுள்ள நாசிக் நகரத்தில் ஜாக்சன் துரை என்ற வெள்ளைக்கார அதிகாரி அப்போது சுட்டுக் கொல்லப்பட்டார். அவர் சுடப்பட்ட துப்பாக்கியை அனுப்பியவர் சாவர்கர் தான் என்றும், அவர் லண்டனில் இருந்தால் கைது செய்து எச்சரிக்கை யுடன் இந்தியாவுக்கு அனுப்ப வேண்டும் என்றும், இந்திய அரசு ஓர் ரகசியக் குறிப்பை லண்டனுக்கு அனுப்பி வைத்தது. இந்தச் செய்தி யாருக்கும் தெரியாமல் ரகசியமாகவே வைக்கப் பட்டிருந்தது.

ஆனால், இந்த ரகசியம் மூன்று மாதங்களாகப் பாரீசில் இருந்து வரும் சாவர்கருக்குத் தெரியாது. எல்லா நண்பர்களும் லண்டனிலே இருக்கும் போது நாம் மட்டும் இங்கே இருப்பது எந்த வகையில் நியாயம் என்று எண்ணிய சாவர்கர், லண்டனுக்குப் போக ஆயத்தமானார்.

சாவர்கரிடம் சில செய்திகளைக் கலந்து யோசிக்க வேண்டும் என்று வ.வே.சு.ஐயரும், மற்ற நண்பர்களும் விரும்பியதால், உடனே லண்டனுக்குப் புறப்பட்டு வருமாறு சாவர்கருக்கு தந்தி அனுப்பினார் வ.வே.சு.ஐயர்.

தந்தியைப் படித்த பின்பு சாவர்கருக்கு லண்டன் போகும் எண்ணம் வலுத்தது. உடனே புறப்பட்டார். லண்டன் நகர் மண்ணிலே சாவர்கர் காலடிபட்டதும், போலீஸ் அவரைக் கைது செய்தது. அவ்வளவு எச்சரிக்கையோடு லண்டன் போலீஸ் பாரீஸ் நகரிலும் சாவர்கரைப் பின் தொடர்ந்து துப்புத் துலக்கியபடியே இருந்துள்ளது. சாவர்கரைக் கைது செய்தது ஏன் என்ற காரணத்தைச் சுதந்திர இந்தியச் சங்கத்தினர் போலீசிடம் கேட்டபோது, ஜாக்சன் கொலைவழக்கு சம்பந்தமாகவே அவர்கைது செய்யப்பட்டார் என்று போலீஸ் ஆணவத்துடன் பதிலளித்தது.

அந்த சமயத்தில்தான், வ.வே.சு.ஐயர் சிறைக்கு அடிக்கடி சென்று சாவர்கரைப் பார்த்து விட்டு வருவார். இவ்வாறு அடிக்கடி சிறைக்குச் சென்று பார்த்து வரும் இந்த வாலிபன் யார்? என்ற சந்தேகம் லண்டன் போலீசுக்கு அதுமுதல் தான் ஏற்பட்டது.

ஜாக்சன் கொலை வழக்குச் சம்பந்தமாக சாவர்கரை விசாரிக்க எப்படியும் இந்தியாவுக்கு அனுப்பத்தான் வேண்டும்; அப்போது அவரை எப்படியாவது தப்பிக்க வைத்து மீண்டும் பாரீசுக்குக் கொண்டு போய் விடலாம் என்ற ரகசியத் திட்டத்தை வ.வே.சு.ஐயர் சாவர்கரைப் பார்க்கப் போகும் போது சொன்னார்.

இவ்வாறு அடிக்கடி வந்து போகும் போதுதான், 'யார் இந்தத் தாடிக் காரன்?' என்ற சந்தேகம் லண்டன் போலீசுக்கே வந்தது. அது முதல், அந்தத் தாடிக்காரன் நடமாட்டத்தைப் போலீஸ் பின் தொடர்ந்து கண்காணித்து வந்தது. தாடிக்காரனையும் கைது செய்து சிறையில் தள்ள வேண்டும் என்ற முடிவுக்கு அரசு வந்தது. ஐயரைக் கைது செய்யுமாறு போலீசுக்கு அரசாணை வந்தது.

அந்தப் பிடியாணையின் படி லண்டன் போலீஸார் இந்தியா விடுதிக்குச் சென்றனர். அதற்கு முன்பே அதனைத் தனது ஒற்றர் மூலம் அறிந்து கொண்ட வ.வே.சு.ஐயர், ஒரு சூட்கேஸ் பெட்டியைக் கையில் பிடித்துக் கொண்டு விடுதியை விட்டு வெளியே வந்த போது, ரகசியப் போலீஸ் அதிகாரி, விடுதியின் நாற்பக்கமும் போலீஸார்களைக் காவலுக்காக நிறுத்தி வைத்து விட்டு, வெளியே வந்த வ.வே.சு.ஐயரைத் தடுத்து நிறுத்தி வைத்துப் பேசி விவரங்களை அறிந்தார்.

போலீஸ் அதிகாரி தாம் கொண்டு வந்திருந்த உறையை ஐயரிடம் காட்டி, அந்தக் கவர் உமக்குத்தானா என்று கேட்டார்? அதற்கு ஐயர், அந்தக் கவர் தனக்கு அல்ல என்று சற்றும் தயக்கமற்றுக் கூறினார். அதிகாரி, ஐயர் பெட்டி மேலே வி.வி.எஸ். என்று எழுதியுள்ளதைச் சுட்டிக் காட்டி, இந்தக் கவர்மீது எழுதப்பட்டிருக்கும் முழுப் பெயரின் சுருக்கமோ இந்த வி.வி.எஸ். எழுத்துக்கள் என்று கேட்டார்.

சற்றும் எதிர்பாராத இக் கேள்வி அதிகாரியிடமிருந்து வந்ததைக் கண்ட ஐயர், கொஞ்சமும் தயங்காமல், திணறாமல், முகரேகைகள் ஏதும் சுருங்காமல், எனது பெயர் வி. விக்ரம் சிங். அதையே சுருக்கி நான் பெட்டியின் மேலே வி.வி.எஸ். என்று எழுதி இருக்கிறேன்'' என்று கூறிவிட்டு, விடை பெற்று விரரென்று விரைந்து சென்றார் அப்போது லண்டன் நகரை விட்டு வெளியேறியவர் தான் அதற்குப் பிறகு அவர் சாகும் வரை லண்டன் மண்ணை மிதிக்கவே இல்லை.

போலீஸ் எனறால சாதாரணப் போலசலல; ஸகாட லாணடு யார்டு ரகசியப் போலீஸ்! உலகப் புகழ்பெற்ற திறமையுள்ள, தந்திர முள்ள போலீஸ்! அந்தப் போலீஸ் அதிகாரியை ஏமாறவைத்து விட்டுப் புறப்பட்ட வ.வே.சு.ஐயர் எப்படிப்பட்ட திறமையாளராக, தந்திரவாதியாக இருக்க வேண்டும் என்று எண்ணும்போது நமக்கு உடல், உணர்ச்சிப் புல்லரிப்பால் சிலிர்த் தெழுகின்றது.

அதற்குப் பிறகு வ.வே.சு.ஐயர் நேராகப் பாரீஸ்நகர் சென்றார்! அங்கே காமா அம்மையாரைச் சந்தித்தார். இருவரும் கலந்து பேசியே சாவர்கரைத் தப்ப வைக்கும் திட்டத்தைப் போட்டார்கள். இந்திய தேச பக்தர்களுக்கு இந்தியாவில் அடைக்கலம் தந்தது பிரெஞ்சு நாட்டின் ஆட்சியிலே இருந்த புதுச்சேரி நகரமாகும். அதுபோல லண்டனிலே தங்கியிருந்த தேச பக்தர்களுக்கு பிரெஞ்சு நாட்டின் தலைநகரமான பாரீஸ்நகர் அடைக்கலம் கொடுத்த நகரமாகும்.

பாரீசும் புதுச்சேரியும் இந்திய தேசியச் சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கு வீடுபேறு போலப் பயன்பட்டது. அந்த நகரங்கள் இல்லையென்றால் எண்ணற்ற சுதந்திரப் போர்வீரர்களை, பிரிட்டிஷ் ஆட்சி அந்தமான் தீவுக்கு அனுப்பி சாகடித்து மண்டோக்கி இருக்கும். எனவே, இந்திய சுதந்திரப் போர் வீரர்கள், குறிப்பாகத் தமிழ்நாட்டுத் தேசிய வாதிகள் புதுச்சேரியை ஒரு போதும் மறக்க முடியாது. அதற்காக நாம், பிரெஞ்சுப் பேரரசுக்கு எப்போதும் வரலாற்று நன்றியைக் கூறாமல் இருக்க முடியாது.

சாவர்கர் சிறைப்பட்ட பிறகு, பிரிட்டிஷ் அரசு இந்திய தேசிய வீரர்களின் பாசறை போல விளங்கிய, லண்டன் இந்தியா விடுதியைக் கலைக்கும் முயற்சியில் தீவிரம் காட்டியது. சாவர்க் கரைப் பின்பற்றிய தேசபக்தர்களுக்கெல்லாம் தொல்லைகளைக் கொடுப்பதிலும் அக்கறை காட்டியது. எப்படியும் லண்டன் விடுதியிலே உள்ள இந்திய வாலிபர்களின், தீவிர வாதிகளின் பணிகளை அழித்தொழிக்க வேண்டும் என்று பிரிட்டிஷ் அரசு திட்ட மிட்டுத் தீவிரமாகச் செயல்பட்டு வந்ததால், அங்கே இருந்த தேச பக்தர்கள் லண்டன் நகரைக் கைவிட்டு, பிரெஞ்சு நாட்டின் பாரீஸ் நகருக்குச் சென்று குடியேறினார்கள்.

இவ்வாறு குடியேறியவர்களில் குறிப்பிடத்தக்கவர் காமா அம்மையார்! இவர் ஒரு பார்சி பெண். புகழ்பெற்ற பெரும் பணக்காரர் ஒருவரைத் திருமணம் செய்து கொண்டவர்! பாரீஸ் நகரில் குடியேறுவதற்கு முன்பு அம்மையார் லண்டனிலே

இருந்ததால், அங்கு இந்திய தேசிய வாதிகளது வரலாற்றையும் உணர்வையும் நன்கு மதித்தவர். அதனால், இந்தியா சுதந்திரம் அடைவதில் அவர் பெருமைப்பட்டுக் கொண்டு, ஓர் இலட்சிய ஆர்வலராக இருந்தார். இந்திய சுதந்திரத்திற்காக யார்யார் அரும்பாடு பட்டாலும், அவர்களுக்குரிய பொருளாதாரத் தட்டுப்பாடுகளைப் போக்கி உதவும் கருணை உள்ளம், சுதந்திர மனம் அவருக்கு இருந்தது. அதனால், இந்தியப் புரட்சி வாதிகளுக்குக்குரிய பணஉதவிகளைத் தவறாது, மறுக்காது அவர் உதவிபுரிந்து வந்தார். பாரீஸ் சென்று அதையே புகலிடமாகக் கொண்ட வ.வே.சு.ஐயர், சாவர்கர் போன்றவர்களுக்குரிய பொருள் வசதிகளை அந்த அம்மையாரே செய்து வந்தார்.

அத்தகைய காமா அம்மையாருடன் கலந்து பேசிய பிறகுதான், சாவர்கரை பிரிட்டிஷ்காரர்களின் கப்பல் காவலிலே இருந்து காப்பாற்றிடும் திட்டத்தை வ.வே.சு.ஐயர் தீட்டினார். சாவர்கரை கட்டாயமாக இந்தியாவுக்குக் கொண்டு சென்றுதான் அந்தக் கொலை வழக்கை விசாரிக்க முடியும். அவரைக் கப்பலில் தான் இந்தியாவுக்கு அழைத்துச் செல்ல வேண்டும். லண்டனிலே இருந்து இந்தியா செல்லும் கப்பல் பிரெஞ்சுத் துறைமுகமான மார்சேல்ஸ் வழியாகத்தான் போயாக வேண்டும். அதனால், எந்தக் கப்பலில், என்றைக்குச் சாவர்க்கரை இந்தியாவுக்கு பிரிட்டிஷ் போலீசார் அழைத்தச் செல்வார்கள் என்பதை அறிந்து கொண்டு அவரைத் தப்பிக்குமாறு ஏற்பாடுகளைச் செய்தாக வேண்டும் என்பதே வ.வே.சு.ஐயரும், காமா அம்மையாரும் கலந்து போட்ட திட்டமாகும். இதற்குரிய வழிகள் என்ன என்பதைக் காமா அம்மையாரும் வ.வே.சு.ஐயரும் மற்ற பிரான்ஸ் நண்பர்களும் கலந்து பேசினார்கள்.

இலண்டனிலே இருந்து வரும் கப்பல் மார்சேல்ஸ் துறை முகத்திற்கு இரவில் வரும். அன்றிரவு அங்கே தங்கும். விடியற்காலை துறைமுகத்தை விட்டுப் புறப்படும். துறை முகத்தை விட்டுப் புறப்பட்டுக் கப்பல் சிறிது தூரம் சென்ற பின்பு, சாவர்கர்

கப்பலிலே இருந்து குதித்துக் கரையை நோக்கி நீந்தி வர வேண்டும். அங்கே ஐயரும், காமா அம்மையாரும் மற்றும் சில பிரான்ஸ். நண்பர்களும் கார் ஒன்றை நிறுத்தி வைத்துக் கொண்டு காத்திருக்க வேண்டும். கப்பலில் நீந்திக் கரை சேரும் சாவர்கரைக் காரில் ஏற்றிக் கொண்டு பாரீஸ் நகருக்குப் போய் விட வேண்டும். இதுதான் வ.வே.சு.ஐயரும் காமா அம்மையாரும் போட்ட திட்டமாகும்.

சாவர்கருக்கும் இத்திட்டம் ரகசியமாக அறிவிக்கப்பட்டது. அவரும் அந்தத் திட்டத்திற்குச் சம்மதம் தெரிவித்து ஐயருக்குச் செய்தி அனுப்பி விட்டார். இந்த ரகசியம் வேறு யாருக்கும் தெரியாது. என்று புறப்படப்போகிறார் சாவர்கர் என்ற நாளை எல்லாரும் எதிர்பார்த்திருந்தார்கள். அந்த நாள் வந்தது. கப்பலில் சாவர்கருக்குப் பலத்த போலீஸ் பாதுகாப்பும் போடப்பட்டிருந்தது. குறிப்பிட்ட திட்டத்தின்படி கப்பல் மார்சேல்ஸ் துறைமுகத்தை வந்தடைந்து; விடியற்காலை புறப்பட்டது.

போலீசாரிடம் அனுமதி பெற்று சாவர்கர் காலை மலஜலம் கழிக்கக் கழிப்பறைக்குச் சென்றார். போலீசார் துப்பாக்கி யுடன் கதவுக்கு வெளியே காத்திருந்தார்கள். அங்கிருந்து கண்ணாடிக் கதவு வழியாகச் சாவர்கர் செயலைப் பார்த்துக் கொண்டே நின்றார்கள்.

கழிப்பறைக்குள் சென்ற சாவர்கர் தனது உடைகளைக் கழற்றி கண்ணாடிக் கதவின் மேல் போட்டு மூடினார்! அதனால்; அவர் உள்ளே என்ன செய்கிறார் என்பது தெரியாது! கண்ணாடியை மறைத்தவுடனே ஜன்னல் வழியாகக் கடலில் குதித்தார். நீரிலே அவர் விழுந்த ஓசையைக் கேட்ட போலீசார் இரண்டுபேர் சாவர்கரைப் பிடிக்கக் கடலிலே குதித்து நீந்தி விரட்டினார்கள்!

கப்பல் நின்றது! சாவர்கர் வெகுவேகமாக மூச்சு வாங்க வாங்கக் கடற்கரையை அடைந்தார். வ.வே.சு.ஐயரும், காமாட்சி அம்மையாரும் அவர்களது நண்பர்களுடன் காரை வைத்துக் காத்துக் கொண்டிருந்த இடத்தை நோக்கி அவர் ஓடினார். பிரிட்டிஷ் போலீசாரும் கடலின் கரை ஏறி விரட்டிக் கொண்டே சாவர்கர் பின்னால் ஓடி வந்தார்கள்.

அப்போது ஒரு பிரெஞ்சுப் போலீஸ்காரன் ஓடிவந்து சாவர்கரைத் தடுத்து நிறுத்தினான்! அதற்குள் பிரிட்டிஷ் போலீசார் ஓடி வந்து பிரெஞ்சுப் போலீசாருடன் ஏதோ பேசி, ஒரு பவுன் தங்க நாணயத்தை அவனுக்குக் கொடுக்கவே, அவனும் பிரிட்டிஷ் போலீசாரிடம் சாவர்கரை ஒப்படைத்து விட்டான்.

வ.வே.சு.ஐயர் பிரெஞ்சுப் போலீஸ் காரனைக் கண்டித்து, 'இது பிரெஞ்சு நாட்டு எல்லை அல்லவா? இங்கே ஓடி வந்தவரை நீ பிடித்து எப்படி பிரிட்டிஷ் போலீசிடம் ஒப்படைக்கலாம்?' என்று பலமாகக் கண்டித்தார் ஆனால்! அதனால், பயனேதும் இல்லை!

பிரிட்டிஷ் போலீஸ் காரர்கள் சாவர்கரைப் பரபரவென்று இழுத்துக் கொண்டே போனார்கள். நமக்கு அரசியல் குருவாக இருந்த பல்துறை ஞானியான சாவர்கரை நம்மால் காப்பாற்ற முடியவில்லையே! பரபரவென்று அவரை இழுத்துக் கொண்டும், தள்ளிக் கொண்டும் போனார்களே! என்று மனம் நொந்து வருந்தி வேதனையடைந்தார் ஐயர்!

கப்பலில் இந்தியா கொண்டு வரப்பட்ட சாவர்கரை நீதி மன்றத்தில் விசாரணை செய்தார்கள். அவருக்கு ஐம்பதாண்டு காலம் ஆயுள் தண்டனை வழங்கப்பட்டது. அவரை அந்தமானுக்கு அனுப்பியது பிரிட்டிஷ் அரசு! அங்கே சாவர்கர் அனுபவிக்க முடியாத துன்பங்களை எல்லாம் அனுபவித்தார்! அதே நேரத்தில் சிறைக் கைதிகளின் மனத்திலே இடம் பெற்று அவர்களைச் சீர்திருத்தி ஒழுகக் சீலராக மேம்படுத்தினார் சாவர்கர்! அவர்பட்ட சித்தரவதைகளுக்கு எல்லாம் ஒரு சிறப்பு கிடைத்தது! அது அவருடைய வரலாற்றிலே படிக்கக் கூடிய சிறப்புச் சம்பவங்களாகும்.

# பல மாறுவேடங்களில் ஐயர் இந்தியா திரும்பினார்!

பிரெஞ்சு நாட்டின் தலைநகரமான பாரீஸ் நகரில் தனது அரசியல் குருவான சாவர்கரைப் பிரிட்டிஷ் போலீஸ் படையிடம் இருந்து காப்பாற்ற முடியாமல் போய் விட்டதே என்று கவலையும், கண்ணீரும் ததும்பும் சோகத்துடன் வ.வே.சு.ஐயர் பாரீஸ் நகரத்தின் சாலையிலே தனி மனிதனாக நின்று தவித்தார்! எவ்வளவோ ஆறுதல்களைக் காமா அம்மையார் அவருக்குக் கூறிய பிறகும்கூட, ஐயர் ஒரே துயர மயமாகி பாரிஸ் வீதிகளிலே அலைந்து திரிந்து கொண்டே இருந்தார்!

மறுபடியும் நாம் எங்கே போவது என்ற கவலை அவரைத் துன்புறுத்தியது. மீண்டும் லண்டன் போகலாமா என்றால் அங்கே பிரிட்டிஷ் போலீஸ் படையின் தொல்லைகளையும் துன்பங்களையும் ஏற்றாக வேண்டுமே என்பதால்; அங்கே போக அவருக்கு மனம் இடம் கொடுக்கவில்லை. அதனால், காமா அம்மையார் வீட்டில் இருக்கலாமா என்றால் அங்கும் அவருககுப் பாரமாக இருக்க வேண்டும் என்ற குழப்பங்களிலே சிக்கி என்ன செய்வது என்று சிந்தித்தார்.

இறுதியாக அவர், இந்தியாவுக்கே மீண்டும் திரும்பி விடலாம் என்ற முடிவுக்கு வந்தார். பார்சிக்காரர் போல ஐயர் மாறுவேடம் போட்டுக் கொண்டு, காமா அம்மையாரிடம் தேவையான பொருள் வசதிகளைப் பெற்றுக் கொண்டு, இத்தாலி நாட்டின் தலைநகரமான ரோம் நகருக்கு வந்து சேர்ந்தார்.

ரோம் நகரைச் சுற்றிப் பார்த்து விட்டு, பிறகு ஒரு முஸ்லீம் பெருமகனைப் போல வேடமணிந்து கொண்டு, மக்கா மாநகர் வந்தார். சில நாட்கள் அவர் முஸ்லீம் உடைகளோடு மக்கா நகரிலே அலைந்து திரிந்த பின்பு, அதே முஸல்மான் வேடத்தோடு கப்பல் ஏறி இந்தியாவிலே உள்ள பம்பாய் நகர் வந்தார்.

எந்த நாட்டின் சுதந்திரத்துக்காக வன்முறை வீரனாக ஒவ்வொரு நாட்டிலும் போராடி வந்தாரோ அந்த சுதந்திரப் போர் வீரப் பெருமகன், பம்பாய் வீதிகளிலே தனது சுய உருவத்தோடு, இந்தியக் குடிமகனாக நடமாட முடியாமல், தலை மறைவாகவே பல நாட்கள் திரிந்து கொண்டிருந்தார்! எபடிப்பட்ட ஒரு சோக வாழ்விது என்று எண்ணிப் பார்ப்போர் எவராக இருந்தாலும், அவர்கள் நிச்சயமாகக் கண்ணீர் சிந்தியே தீருவர்! ஆனால், லட்சியத் திருமகன் வ.வே.சு.ஐயர் இந்தக் கவலைகள் ஏதும் இல்லாமல் ஒரு விடுதலை வீரனாகவே விளங்கினார்.

பம்பாய் பெரு நகரிலும் அவர் ஓர் இஸ்லாமியப் பெருமகனாக வாழ முடியவில்லை. ஏனென்றால், எங்கே தனது வேடம் அடையாளம் காணப்பட்டுவிடுமோ என்ற அச்சம் அவருக்கு இருந்தது. அதனால், அவர் ஒரு முஸ்லீம் பக்கிரி வேடத்திலேயே இலங்கை நாட்டின் தலைநகரமான கொழும்பு மாநகருக்கு வந்தார். அங்கேயும் அவர் கழிப்பறைக்குப் போகும் போதும் கூட, முஸல்மான் வேடத்தோடுதான் செல்லவேண்டி இருந்தது. இந்த நிலைமை அவருக்குள்ளே ஒருவித வெறுப்பையும், விரக்தியையும் உருவாக்கியது. இதனால், அவருக்கு வன்முறை மீது சலிப்பு ஏற்பட்டு விட்டது. இந்தக் காரணத்தால் அவர் மனம் மெதுவாக-மெதுவாக மென்முறை என்ற ஊஞ்சலிலே ஆட ஆரம்பித்தது

வ.வே.சு.ஐயரின் உள்ளத்திலே நீறுபூத்த நெருப்புப் போல சுதந்திர வன்முறை உணர்ச்சி கனன்று கொண்டிருந்ததே தவிர,

நெருப்பு மீது படர்ந்த சாம்பலைப் போல உதிர்ந்து சிதறிக் கொண்டே இருந்தன. ஆனாலும், தான் சுற்றியலைந்த நாடுகளிலே பட்ட அனுபவத் துன்பங்கள், சோக இடையூறுகள், இடையறாது ஏற்பட்ட இன்னல்கள் சோதனைகள் எதுவும் அவரது நாட்டுப் பற்றையோ, விடுதலை உணர்ச்சிகளையோ எள்மூக்களவும் மாற்றவில்லை: இது வன்றோ ஓர் இலட்சிய வீரத் திருமகனின் வித்தக இயல்பு என்பதையே வ.சே.சு.ஐயர் நிரூபித்தபடி வாழ்ந்தார்.

கொழும்பு மாநகரிலே இருந்து தமிழ் நாட்டின் ஒரு பகுதியான, பிரெஞ்சு ஆட்சியிலே உள்ள புதுச்சேரி நகருக்கு வந்து சேர்ந்து நீண்ட நாட்களுக்குப் பிறகு தமிழ் பேசும் மக்களைப் பார்த்த மகிழ்ச்சியிலே ஐயர் பெரு மூச்சை விட்டார். தனது வேட உடைகளை எல்லாம் களைந்தார்! தமிழ் உடைகளை அணிந்த தமிழ்ப் பெருமகனாக, அச்சம் ஏதுமற்றுப் பழைய வ.வே.சு.ஐயராக மாறினார்!

ஐயர், புதுச் சேரி நகர் வந்து சேர்ததும் அவர் செய்த வீரச் செயல் என்ன தெரியுமா? லண்டன் மாநகரிலே உள்ள உலகப் புகழ்பெற்ற ஸ்காட்லாண்ட் யார்டு என்ற ரகசியப் போலீஸ் துறையின் பெரிய அதிகாரிக்கு ஒரு தந்தி கொடுத்தார். அந்தத் தந்தியில் அவர்' "நான் பிரெஞ்சு ஆட்சியிலே உள்ள புதுச்சேரி நகருக்கு மிக ஜாக்கிரதையுடன் வந்து சேர்ந்து விட்டேன்." என்று குறிப்பிட்டிருந்தார்.

தந்தியிலே இருந்த இந்த வாசகங்களைக் கண்ட ஸ்காட்லாண்ட் யார்டு போலீசும், பிரிட்டிஷ் அரசும் வ.வே.சு.ஐயர் மீது கடுங் கோபம் கொண்டன. ஏனென்றால், ஏறக்குறைய ஆறு மாதங்களாக போலீசையும், ஆட்சியையும் ஏமாற்றி விட்டு மிகச் சுலபமாக இந்தியா போய் சேர்ந்து விட்டானே என்று அதிர்ச்சி அடைந்தன லண்டன் போலீசும், பிரிட்டன் ஆட்சியும்!

புதுச் சேரிக்கு வ.வே.சு.ஐயர் வந்த போது, தமிழ் நாட்டில் பிரிட்டிஷ் ஆட்சியின் கொடுமைகள், அடக்கு முறை வெறிச்சட்ட ஆர்ப்பாட்டங்கள், மிகக் கோரமாகப் பேய்த் தாண்டவம் ஆடிக் கொண்டிருந்தமையால், தேசியக் கவி சுப்பிரமணிய பாரதியார், வங்கம் தந்த ஞானத்தங்கம் அரவிந்த கோஷ், சு.நெல்லையப்பர் போன்ற பல தேச பக்தர்கள் தமிழ் நாட்டை விட்டுப் புதுச்சேரிக்கு வந்து தங்கி; சுதந்திர தேவிக்குரிய பணிகளைக் கூடிச் செய்து கொண்டிருந்தார்கள்.

அவர்களைக் கண்டதும் வ.வே.சு.ஐயருக்கு புதியதோர் சுதந்திர எழுச்சி வேகம் ஏற்பட்டு, நட்புக் கொண்டு, தேசப் பணிகளைச் செய்யலானார்! இவர்கள் எல்லாரும் புதுச்சேரி நகரிலே இருந்து செய்யும் சுதந்திரப் போர்ப் பணிகள், தமிழ்நாட்டிலே உள்ள விடுதலைப் போர் வீரர்களுக்கு சர்க்கரைப் பந்தலிலே தேன் மாரி பெய்தது போல இருந்தது.

இந்திய சுதந்திரத்துக்கும், வெள்ளையர் ஆட்சியின் ஆணவத்தை வேரறுப்பதற்கும் பணிபுரியும் தமிழ் நாட்டு இளைஞர்கள் புதுச்சேரி நகர் வந்து, வ.வே.சு.ஐயரிடம் துப்பாக்கி ஏந்திச் சுடும் பயிற்சியைப் பெற்றுச் சென்று கொண்டிருந்தார்கள்.

தேசியக் கவி சுப்பிரமணிய பாரதியாரும், வெள்ளையர் ஆட்சியை அகற்றிட, வ.வே.சு.ஐயரிடம் துப்பாக்கி சுடும் பயிற்சியைப் பெற்றார் என்று கூறப்படுகின்றது.

இங்கிலாந்து நாட்டிலே இருந்து தப்பித்து வந்துவிட்ட வ.வே.சு.ஐயர் மீது, ஏற்கனவே கோபமும், ஆத்திரமும் அளவுக்கு மீறிப் பெற்றிருந்த பிரிட்டிஷ் ஆட்சி, எப்படியாவது வ.வே.சு. ஐயரை புதுச்சேரியிலே இருந்து பிடித்து விட வேண்டுமென்ற நோக்கத்திலே இருந்தது.

பிரெஞ்சு ஆட்சியின் பிடியிலே புதுச்சேரி நகர் இருந்ததால், பிரிட்டிஷ் ஆட்சியும், போலீசும் தமிழ் நாட்டுத்தேசபக்தர்களைக்

கைது செய்ய முடியவில்லை. அதனால், எப்போது இந்திய சுதந்திரப் போராளிகளைக் கைது செய்யலாம், எப்படிக் கைது செய்யலாம் என்று பிரிட்டிஷ் ஆட்சி திட்டமிட்ட படியே இருந்தது. ஆனால், அந்த முயற்சி கடைசி வரை ஈடேறவில்லை.

இந்த நேரத்தில் தான், வ.வே.சு. ஐயர், புதுவை நகருக்கு வரும் தமிழ் நாட்டின் இந்திய விடுதலை வேட்கை கொண்ட இளைஞர்களுக்குத், துப்பாக்கி சுடும் பயிற்சியைக் கற்றுக் கொடுத்து அனுப்பி வருகிறார் என்ற செய்தி, பிரிட்டிஷ் ஆட்சிக்கு எட்டியது.

எரியும் நெருப்புக்கு எண்ணெய் ஊற்றியது போல அப்போது ஒரு நிகழ்ச்சி நடந்து, பெரும் பரபரப்பைத் தமிழ் நாட்டிலும், பிரிட்டிஷ் ஆட்சியிலும் ஏற்படுத்தியது.

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியராக ஆஷ் என்ற வெள்ளைக்காரர் பணியாற்றி வந்தார்! செங்கோட்டை நகரைச் சேர்ந்த வாஞ்சி நாதன் என்ற ஒரு வன்முறைச் சுதந்திரப் போராளி, ஆஷ்துரையை மணியாச்சி என்ற நகரில் ரயில் வண்டியிலே அவன் பயணம் செய்தபோது துப்பாக்கியால் சுட்டுக் கொன்றார்! அதற்குப்பிறகு, வாஞ்சிநாதனும் தன்னைத் தானே சுட்டுக் கொண்டு செத்தார் என்ற செய்தி; தமிழ்நாட்டில் ஒரு பரப்பரப்பு உணர்ச்சியை மூட்டி விட்டது. பிரிட்டிஷ் ஆட்சிக்கும் ஒரு குலை நடுக்கத்தை உருவாக்கியது.

ஆஷ் துரை என்ற கலெக்டரைச் சுட்டுக் கொன்ற வாஞ்சி நாதன் என்பவர், புதுவை நகருக்கு வந்து, மூன்று மாதங்கள் தங்கி, வ.வே.சு. ஐயரிடம் துப்பாக்கி சுடும் பயிற்சியைப் பெற்றவர் என்று செய்தி பரவியது.

நீதி மன்றத்தில் இந்தக் கொலை வழக்கு நடந்த போது, 'வாஞ்சி நாதன் துப்பாக்கி சுடும் பயிற்சியை யாரிடம் பெற்றார்?' என்று நீதிபதி கேட்டார். அதற்கு, வ.வே.சு.ஐயரிடம் தான் அவர் சுடும்

பயிற்சியைப் பெற்றார் என்று பதில் கூறப்பட்டது. இந்தக் காரணத்தால்தான் வ.வே.சு. ஐயரை ஆஷ்துரை கொலை வழக்கில் சம்பந்தப்படுத்தி; அவரையும் கைது செய்திட பிரிட்டிஷ் ஆட்சி திட்டமிட்டிருந்தது.

இக் காரணத்தை முன்வைத்து, புதுச் சேரியிலே உள்ள வ.வே.சு. ஐயரை எப்படிக் கடத்தி வருவது என்று பிரிட்டிஷ் ஆட்சி பரிசீலனை செய்து கொண்டிருந்தது. பிரெஞ்சுப் பகுதியான புதுச்சேரி நகரிலே இருந்து, மெதுவாகப் பிரிட்டிஷ் பகுதியிலே உள்ள சின்னபாபு சமுத்திரம் என்ற எல்லைக்கு ஐயரைக் கடத்திக் கொண்டு வருபவர்களுக்கு பத்தாயிரம் ரூபாய் பரிசு கொடுக்கப்படும் என்று புதுச்சேரிக்கு அருகே உள்ள பிரிட்டிஷ் ஆட்சிக்குட்பட்ட எல்லையில் அரசு தண்டோரா போட்டு மக்களுக்குத் தெரிவித்தது. அதனைப் போலவே அதிகாரிகளும் அறிக்கைவாயிலாக அதே செய்தியை மக்களுக்குத் தெரிவித்தார்கள்.

ஐயர் தலைக்குப் பத்தாயிரம் ரூபாயா! என்று புதுச்சேரி மக்களும், அதனைச் சூழ்ந்துள்ள கிராமத்தார்களும் வியந்து போனார்கள். ஆனால், எந்த ஒரு மனிதனும் அவரைப் பிடித்து வெள்ளையனிடம் ஒப்படைக்க முன்வரவில்லை. அந்த அளவுக்கு அப்போது மக்கள் இடையே தேசாபிமானம் ஒற்றுமை உணர்வு ஓங்கி வளர்ந்து காணப்பட்டது.

எனவே, ஐயரைப் புதுச்சேரியிலே இருந்து குண்டுக் கட்டாக, இரவோடு இரவாகத் தூக்கிக் கொண்டு வந்து விடுவது என்று சதித்திட்டம் போடப்பட்டது. ஆனால், ஐயர் எல்லாச் சூழ்ச்சிகளையும் தகர்த்து, இந்திய, பிரிட்டிஷ் ஆட்சிகளின் முகத்திலே கரிபூசி அவமானப்படுத்தி விட்டார்! போலீசாரின் எந்த வித நடவடிக்கைகளையும் சந்திக்கத் தயாராக இருந்தார் என்பது மட்டுமல்ல; அவர்களின் எந்த நிகழ்ச்சிக்கும் ஐயர் இடம் கொடுக்காமலேயே விழிப்புடன் இருந்தார்!

ஒரு முறை, எப்படியும் வ.வே.சு.ஐயரைப் பிடித்து விடுவது என்று பிரிட்டிஷ் அரசு கங்கணம் கட்டிக் கொண்டு, கூலிப்படை களைப் புதுச்சேரியிலேயே அமர்த்திக் கொண்டு பகீரத முயற்சியிலே இறங்கியது.

திடீரென்று ஐயர் தங்கியிருந்த ஓர் இடத்தருகே, "பிடி விடாதே, விடாதே பிடி" என்ற கூச்சல் கேட்டது. என்ன இது ஒரே கூச்சலாக இருக்கிறதே என்பதைத் தெரிந்து கொள்ள ஐயர் வீதியின் நடுப்பாகத்திலே நின்று கொண்டு கூச்சல் போட்டு ஓடியவர்களைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

உடனே அடுத்த ஒரு கூலிப்படை ஓடிவந்து, "இதோ இவன் தான், திருடன், பிடிபிடி, விடாதே பிடி" என்ற கூச்சல்களைப் போட்டுக் கொண்டு ஐயரையும் பிடித்துத் தள்ளித் தூக்கியபடியே ஓடினார்கள். அதற்குள் வேறோர் கும்பல் நன்றாகக் குடித்து விட்டுப் போதையில், யார் எவர் என்ற அடையாளம் தெரியாததால், ஐயரைத் தூக்கிக் கொண்டு ஓடியவர்களைப் பிடித்து, உதைத்து, விரட்டி விட்டு, என்ன ஏது என்று புரியாத போதையிலே அங்கங்கே நிலை தடுமாறி விழுந்து விட்டார்கள். அதைக் கண்டு ஐயர் அவர்கள் மீது இரக்கப்பட்டு நடுவீதியிலே விழுந்து கிடந்த அவர்கள் ஒவ்வொருவரையும் தூக்கி வீதியின் ஓரத்தில் கிடத்தும் போது, முதலில் துரத்திக் கொண்டு வந்த அக்கூலிக் கும்பல் மீண்டும் போதையேற்றிக் கொண்டு 'விடாதே பிடி' விடாதேபிடி' என்று கோஷம் போட்டுக் கொண்டு வந்ததைக் கண்ட ஐயர், உடனே எழுந்து, இந்தக் குடி காரர்களிடம் சிக்கி விட்டால், முன்பு போல நம்மை வேறு எங்காவது கடத்திக் கொண்டு போய் வேறோரிடத்திலே தள்ளி விட்டு ஓடி விடுவார்களோ, இதில் ஏதாவது அரசியல் சதி இருக்குமோ என்று அச்சம் அவருக்கு ஏற்பட்டு விட்டதால், ஐயர் அக்குடிகாரர்களுக்கு முன்னாலே 'விடாதே பிடி' என்று ஓசையிட்டபடியே ஓடினார்! ஏதோ

குடிகாரர்கள் கலாட்டா போலிருக்கிறதே என்று மக்கள் யாரும் இதற்கு மதிப்பு அளிக்கவில்லை.

வ.வே.சு.ஐயர் இவ்வாறு ஓடி வந்த பாதையிலே ஒரு விநாயகர் கோவில் இருந்தது. வேறுவழி ஏதும் ஐயருக்குப் புலப்படவில்லை. திடீரென அவர் அக்கோயிலுக்குள் புகுந்துகொண்டு, அங்கிருந்த பிள்ளையார் சிலைக்குப் பின்னாலே மறைவாக ஒளிந்து கொண்டார்! ஐயரை விரட்டிக் கொண்டு வந்த முதல் கூலிக் கும்பல் ஐயரைக் காணாமையால் வந்த வழியே மீண்டும் போதைக் கூச்சலிட்டுக் கொண்டே ஓடி விட்டது.

இதைப் போலவே, பிரிட்டிஷ் போலீசார் வேறோர் முறை வ.வே.சு.ஐயரை எப்படியாவது பிடித்து விடுவது என்று திட்டம் போட்டார்கள்.

அந்தத் திட்டம் எப்படிப்பட்ட திட்டம் என்பதை இந்தப் புத்தகத்தின் முதல் அத்தியாயத்திலே படித்திருப்பீர்கள். அந்தப் பிண ஊர்வலம் ஓர் அற்புதமான ராஜதந்திர வியூகம் என்பதைப் புரிந்து கொண்டிருப்பீர்கள்! அதையும் இந்தப் புதுச் சேரிப் பிரச்சனையிலே சேர்த்துப் படித்தால், வ.வே.சு.ஐயர் பிரிட்டிஷ் ஆட்சியையும், போலீசையும் எப்படி எல்லாம் ஆட்டிப் படைத்தார் என்ற வீர வரலாறை நாம் புரிந்து கொள்ள முடியும்.

இந்த சம்பவங்களுக்குப் பிறகு, முதல் உலகப் போர் நடந்து கொண்டிருந்த நேரத்தில் ஐயரை எப்படியாவது அல்ஜீரியா நாட்டின் போர் முனைக்கு அனுப்பி விடலாம்; அங்கே போய் செத்துத் தொலையட்டும் என்று பிரிட்டிஷ் அரசு திட்டமிட்டது.

எவ்வளவோ முயற்சிகள் செய்து பார்த்தது தமிழ் நாட்டுப் பிரிட்டிஷ் போலீஸ் துறை. ஆனால் வ.வே.சு.ஐயர் பிரிட்டனின் பழிவாங்கும் படலத்துக்குப் பலியாகவில்லை. வ.வே.சு.ஐயரிடம்

இந்தப் பிரச்னையிலும் ஆங்கிலேயர் அரசு தோற்று மண்ணையே கவ்வியது!

சுதந்திரப் போராட்டத்துக்காக அரும்பாடுபட்ட எல்லாரையும், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் வ.வே.சு.ஐயரைப் போலவே அரசியல் வஞ்சத்துக்கு ஆளாக்கி அவர்களது வாழ்க்கைகளையே பூகம்பம் போல பிளந்து விட்டது.

இவ்வாறு, ஆண்டுகள் பல நகர வ.வே.சு.ஐயரின் அரசியல் ஞான முதிர்ச்சி வன்முறை வழிகளால் பாரத நாட்டிற்கு சுதந்திரம் பெற முடியாது என்பதைத் திட்ட வட்டமாய் உணர்த்தியது. காந்தியடிகளாரின் அகிம்சை முறைதான் இந்தயாவுக்கு சுதந்திரம் பெற்றுத் தரும் என்பதை உணர்ந்தார்.

வ.வே.சு.ஐயர் மனமாற்றம் கொண்ட நேரத்தில், காந்தியடி களாரின் சுதந்திரப் போராட்ட முறைகளுக்கு இந்தியாவிலே பலத்த செல்வாக்கு வளர்ந்து மக்கள் வன்முறைகளைக் கைவிட்டு, காந்தியண்ணலின் அகிம்சைப் போராட்டப் பண்பே அறப்போர் மாண்பு என்று நம்பி காந்தியாரின் சொல்வாக்கை பின்பற்றி நடந்தார்கள்.

இதனால், மறப்போர் முறைக்கும், வன்முறை செயற்பாடு களுக்கும், பலாத்கார உணர்வுகளுக்கும், பலிவாங்கும் பழிச் செயல்கட்டும் மக்கள் இடையே மதிப்பு மங்கி அற்றுவிட்டது என்பதை வ.வே.சு.ஐயர் உணர்ந்தார். அரசியல் விடுதலைக்கு சாத்வீக முறையே சாலச் சிறந்த ஆயுதம் என்பதையும் தனது மனத்தில் பதித்துக் கொண்டு பணிகளைச் செய்து வந்தார்.

1915-ஆம் ஆண்டு, காந்தியடிகள் புதுச்சேரி நகருக்கு வருகை தந்தார். வ.வே.சு.ஐயர் அண்ணலை சந்தித்து, நான் லண்டனில் வன்முறைதான் சிறந்த போராயுதம் என்று வாதிடடேன். அந்தக் கருத்து இப்போது தோற்றுப் போனதை முற்றிலுமாக உணர்ந்தேன்.

'எனது கருத்து தங்களிடம் தோற்றது. இனி நான் அறப்போராட்ட அகிம்சை வழியைத்தான் பின்பற்றுவேன்' என்று தெரிவித்து வணங்கினார்.

வ.வே.சு.ஐயரின் இந்த மன மாற்றப் போக்கைக் கண்டு மகாத்மா மிகவும் மகிழ்ந்தார். முதல் உலகப்போர் முடிந்தது! காந்தி அடிகளார் விடுத்த ஒரு வேண்டுகோளுக்கு ஏற்றவாறு வ.வே.சு.ஐயர் மீது பிரிட்டிஷ் அரசு தொடுத்திருந்த எல்லா வழக்குகளையும் திரும்பப் பெற்றுக் கொண்டது. உடனே, புதுவையிலே இருந்த வ.வே.சு.ஐயர் தமிழ் மண்ணிலே, தான் பிறந்த பூமியிலே காலடி வைத்தார்.

பல்லாண்டுகளுக்குப் பிறகு, தனது மனமாற்ற அரசியல் கொள்கையால், அவர் மனம் அளவிலா மகிழ்ச்சி பெற்றாலும், அந்த சுதந்திரப் போர் வீரத் திலகத்தின் பிறப்பும், வளர்ப்பும், தியாகமும், ஆன்மிக ஞானமும், தேச பக்தி உணர்வும் நம்மை எவ்வாறு மேம்படுத்துகின்றன என்பதைச் சிந்திப்போமாக!

# குற்றால நீரருவியிலே வ.வே.சு.ஐயர் மறைந்தார்

**கா**ந்தியடிகள் பிரிட்டிஷ் அரசுக்கு விடுத்த கருணை வேண்டுகோளுக்கு ஏற்றவாறு, வ.வே.சு.ஐயர் மேலிருந்த வழக்குகளை எல்லாம் ஆங்கிலேயர் ஆட்சி திரும்பப் பெற்றுக் கொண்டதால், கொலை வழக்குச் சட்டப் பிரச்னையிலே இருந்து அவர் விடுதலை பெற்றார்!

காந்தியடிகளிடம் அவர் கொடுத்த வாக்குப்படி, அறப்போர் முறையுடன் அகிம்சைத் தத்துவத்தையும் மக்களுக்கு எடுத்துரைத் தார்! அவர் சிறந்த ஓர் எழுத்தாளராக, சிந்தனையாளராக, ஆன்மிக ஞானியாக, செயல்வீரராக, மனோபலமுடைய ஆண்மையாளராக, ஒழுக்க சீலராக, மனிதாபிமானியாக நேர்மை தவறாதவராக, 'நா' நயம் படைத்தவராக, சுதந்திர மானாபிமானியாக, விடுதலை வீரராக, பன்மொழிப் புலமையாளராக, ஆறுமொழி ஆய்வு நிபுணராக, பத்திரிக்கை ஆசிரியராக, தமிழ் இலக்கிய வித்தகராக, சிறந்த நூல் படைப்பாளராக, நல்லதோர் மொழிபெயர்ப்புக் கலைஞராக, தமிழே எனது உயிர் மூச்சு என்ற உறுதிப்பாடுடைய தமிழராக, நூல் உரையாசிரியராக, உலகம் சுற்றி வந்த அனுபவ அறிஞராக, குருகுல ஆசானாக, ஆசிரமவாசியாக, வ.வே.சு.ஐயர் விளங்கினார்!

பல துன்பங்களையும் துயரங்களையும் சுமந்து கொண்டு ஊர் ஊராகச் சுற்றியலைந்த அனுபவ ஆசானாக விளங்கிய

வ.வே.ச.ஐயர், அந்த வன்முறைக் கோரக் கொடுமைகளிலே இருந்து விடுபட, அகிம்சா முறையை, காந்தீய முறையைக் காலத்துக்கும், தனது அறிவு முதிர்ச்சிக்கும் ஏற்ப மாற்றிக் கொண்டவர், காலத்திற்கேற்ப மக்களின வளர்ச்சிக்குரிய மனித சமத்துவப் பண்பிலே மட்டும் தன்னை மாற்றிக் கொள்ளாத மனிதனாக சாதீயத்தின் காப்பாளராகக் காட்சியளித்தார்! இதற்குரிய எடுத்துக்காட்டாக ஐயரின் சேரன்மாதேவி குருகுலம் இருந்ததைச் சற்று விவரமாகப் பார்ப்போம்.

இந்திய நாகரிகத்தையும், பண்பாட்டையும், மொழிவளங்களை யும், பழக்க வழக்கங்களையும் இந்திய மக்கள் மறந்து வருகிறார்கள். அதற்கு நேர்விரோதமாக ஆங்கில மொழி மோகிகளாக மாறிவரும் பழக்கத்தை மக்கள் மாற்றிக் கொள்ள வேண்டும் என்று வ.வே.சு.ஐயர் விரும்பினார். இந்திய நாடு உலகத்திற்கு மிகச் சிறந்த தத்துவங்களையும், உயர்ந்த கருத்துக் களையும் வழங்கிய பெருமை நம்முடைய முன்னோர்களுக்கு உண்டு என்பதை மக்கள் உணர்ந்து மதிக்க வேண்டும்.

அயல் நாட்டு நாகரிகத்தைப் பின்பற்றிப் போலியான வாழ்க்கை வாழ்வதைக் கைவிட வேண்டும். நமது ஞானிகள், தத்துவவாதிகள் காட்டிய வழிகளைப் பின்பற்றிச் சுதந்திர வாழ்வு வாழவேண்டும். அதற்கான பணிகளை மேற்கொள்வது தம்முடைய கடமை என்பது வ.வே.சு.ஐயரது கொள்கை. அதற்கு என்ன செய்யலாம் என்று தனது நண்பர்களுடன் கலந்து யோசித்தார்.

குருகுல முறையில் நமது பிள்ளைகளுக்கு தேசியப்பண்பாட்டுக் கல்வியைக் கற்பிக்க வேண்டும். அப்போதுதான், அவர்கள் உண்மையான இந்தியர்களாக வாழமுடியும் என்று யோசனை

கூறியது நண்பர்கள் குழு. இந்த சிந்தனைக் கருத்து ஐயருக்கு மிகவும் பிடித்திருந்தது. இந்த உயர்ந்த சேவைக்குத் தன்னையே காணிக்கை யாக்கிக் கொண்டார்.

இதற்குத் தகுந்த இடம் திருநெல்வேலி மாவட்டத்திலே உள்ள சேரன் மாதேவி என்று தேர்வு செய்து, அங்கே ஓர் ஆசிரமத்தை நிறுவ ஏற்பாடு செய்தார். இந்த ஆஸ்ரமத்துக்குப் பரத்வாசர் ஆசிரமம் என்று பெயர் சூட்டினார் ஐயர்.

இந்த ஆசிரமம் நிறுவுவதற்கு தமிழ் நாடு காங்கிரஸ் கட்சி பத்தாயிரம் ரூபாயை நிதியாக நிர்ணயம் செய்து. அந்த நன்கொடையின் முன்பணமாக ஐயாயிரம் ரூபாய் வழங்கியது. கடல் கடந்த நாடுகளும் ஆசிரமத்துக்கு நிதியை வாரி வழங்கின. இதையெல்லாம் பார்த்த ஐயர் தனது சேவைக்கு மக்களிடம் பெருகிவரும் மதிப்பைக் கண்டு மிக்க மகிழ்ச்சி அடைந்தார்.

சேரன் மாதேவியில் ஆசிரமம் ஏற்படுத்துவ ற்காக பல ஏக்கர் நிலங்கள் வாங்கப்பட்டது. அந் நிலத்தின் ஒரு பகுதியிலே ஐயர் குரு குலத்தை உருவாக்கினார். ஆசிரமம், அச்சுக்கூடம், ஆசிரம அலுவலகம் ஆகியவற்றுக்கு ஒதுக்கிய நிலம் போக, மற்றப் பகுதி நிலம் விவசாயத்திற்காக ஒதுக்கப்பட்டது. விவசாயப் பண்ணை நடத்துவதற்கும் அந்த நிலம் பயன்பட்டது. மொத்தத்தில் குருகுலப் பணிகள் எல்லாமே மன நிறைவுடன் நடந்தன.

பரத்வாசர் ஆசிரமத்தில் பல்வேறு சாதிகளைச் சேர்ந்த மாணவர்கள் கல்விகற்று வந்தார்கள். அந்த ஆசிரமத்தைச் சேர்ந்த குரு குலத்திற்கு ஐயர் தமிழ் நாட்டுக் குருகுலம் என்று பெயரிட்டார். இதிலிருந்தே வ.வே.சு.ஐயரின் தமிழ்ப்பற்றை நாம் புரிந்து கொள்ள முடிகின்றது. இது அவருக்கிருந்த தணியாத தமிழ்ப்பற்றைக் காட்டுகிறது அல்லவா? இங்கு தமிழ்க் கல்வியும் கற்பிக்கப்பட்டது.

'பால பாரதி' என்ற ஒரு மாத இதழை வ.வே.சு.ஐயர் வெளியிட்டு வந்தார். அந்தப் பத்திரிக்கையை நடத்தி அதன் மூலம் வந்த குறைவான வருவாயை வைத்துக் கொண்டே தனது குடும்ப வாழ்க்கையை நடத்தி வந்தார்.

வ.வே.சு.ஐயர் உலகம் சுற்றியவர்! அங்கே ஆண்டுக் கணக்கிலும் வாழ்ந்துள்ளார். அதனால், அந்நாட்டு மக்களது பழக்க வழக்க முற்போக்கு எண்ண வளர்ச்சிகளை நன்கு உணர்ந்தவர், நேரில் பார்த்தவர், பலரிடம் பழகிப் புரிந்தவர்! எனவே, அவர் பரந்த மன முடையவர் உயர்ந்த நோக்கம் உள்ளவர்; பாரத நாட்டின் மீது தனது உயிரையே வைத்திருந்தார். அத்தகையவரின் ஆசிரமத்தில், 'தனித்து உண்ணல்' என்ற, ஒரு சாதி முறைப் பழக்கம் இருந்தது. 'சமபந்தியில் பல்வேறு சாதி மாணவர்களும் ஒற்றுமையாக உண்பதை வ.வே.சு.ஐயர் ஆதரிக்க மறுத்து விட்டார். உயர்ந்த சாதிக்கென்று தனி மாணவர் பந்தியை நடத்தி உணவை உண்ண வைத்தார். மற்றச் சாதிகளுக்கென்று ஒரு தனிப் பந்தியும் அந்த ஆசிரமத்தில் இருந்தது. இந்தப் பிரச்னை தமிழ் நாட்டில் பெரியதோர் கலவரத்துக்கும், குழப்பத்துக்கும் முன் மாதிரியான சான்றாக அமைந்தது.

இராஜாஜி போன்ற சீர்த்திருத்த நோக்கம் கொண்டவர்கள் மற்ற ஜாதி மக்களோடு மட்டுமன்று; தாழ்த்தப்பட்ட ஆதி திராவிட மக்களுடனும் அமர்ந்து சமபந்தி உணவு உண்டார்கள். அதனால் அவர்கள் ஜாதி வேறுபாடுகளை வன்மையாகக் கண்டித்தார்கள். அதற்காக ஏச்சும் பேச்சும், நன்மை தீமைகளையும் அவர்கள் அனுபவித்திருக்கிறார்கள். ராஜாஜியும் ஓர் பிராமணர் தான் ஆனால், அவர் முற்போக்கு எண்ணமுடையவராக இருந்தார்! திருக்குறளை எழுத்தெண்ணிப் படித்ததால் அவரும் வ.வே.சு. ஐயரைப் போல, அதை ஆங்கிலத்திலே மொழி பெயர்த்தவர்தான்!

அதிலே கூறப்பட்டுள்ள 'பிறப்பொக்கும் எவ்வுயிர்க்கும் என்ற திருவள்ளுவர் பெருமானது கருத்தை ஆழ்ந்து ஊன்றிப் படித்தவர் என்பதின் எதிரொலியாக வாழ்ந்தவர்!

தேசியக் கவி சுப்பிரமணிய பாரதியாரும் ஓர் ஐயர்! அவர் சாதிகள் இல்லையடி பாப்பா, குலத்தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம் என்று பாடியவர். கவிதையிலே வீர முழக்கமிட்டவர். பிராமணர் என்று அடையாளம் காட்டிடும் முப்புரி நூலை அதாவது பூணூலைக் கழற்றி கனகலிங்கம் என்ற ஒரு புதுச்சேரி தாழ்த்தப்பட்டவருக்குப் போட்டு சாதி ஆதிக்க உணர்வை சாடிய கவிஞர் அவர்!

வ.வே.சு.ஐயரின் அரசியல் குரு நாதரான சாவர்கர், வைதீக மத்தின் மூடநம்பிக்கைகளை எதிர்த்து உயில் எழுதி வைத்து விட்டு, அதன் படியே எனது பிணத்தை எடுக்கவேண்டும் என்ற முற் போக்குச் சிந்தனையாளராகச் செத்தார்!

ஆனால், என்ன காரணத்தினாலோ வ.வே.சு.ஐயர் பரத்துவாசர் என்ற ஆசிரமத்தில் எல்லா ஜாதிகளைச் சேர்ந்த மாணவர்களும் ஒன்றாக உட்கார்ந்து உணவு உண்பதை ஆதரிக்க மறுத்து விட்டார்.

அதனால், தமிழ் நாடு காங்கிரஸ் கட்சியில் பெரிய கலவரமே, தகராறே உருவானது. தந்தை பெரியார், டாக்டர் வரதராசுலு நாயுடு போன்ற சுயமரியாதைக் காரர்கள், காங்சிரசில் இருந்து கொண்டே வ.வே.சு.ஐயரின் போக்குக்குச் சாதிவெறி என்ற பெயரைச் சூட்டி ஐயரைப் பலமாக எதிர்த்துக் கண்டனம் செய்தார்கள்.

தமிழ் நாடு காங்கிரஸ் கட்சி ஐயர் ஆசிரமத்திற்கு வழங்கிய ஐயாயிரம் ரூபாயைத் திருப்பித் தரவேண்டும் என்று தகராறை எழுப்பினார்கள். மேற்கொண்டு கொடுப்பதாக வாக்களித்திருந்த மற்ற ஐயாயிரம் ரூபாயைக் கொடுக்க மறுத்து விட்டார்கள்.

இந்தப் பிரச்னை தமிழ் நாடு காங்கிரஸ் கட்சியில் பலத்த சர்ச்சையைக் கிளப்பி விட்டது. அதனால், காந்தியடிகள் கூறினால், அல்லது ஆணையிட்டால் வ.வே.சு.ஐயர் பணிந்து விடுவார் அல்லது கேட்டு ஆவன செய்வார் என்ற எண்ணத்தால், தமிழ் நாட்டின் முற்போக்காளர்களில் சிலர், காந்தியண்ணலிடம் சென்று எடுத்துக் கூறினார்கள். அதற்கு மகாத்மா காந்தி, அந்தச் சர்ச்சையில் நான் தலையிட மாட்டேன்' என்று கண்டிப்பாகவே கூறிவிட்டார்.

டாக்டர் டி.எஸ்.எஸ்.ராஜன் திருச்சிநகரைச் சேர்ந்தவர் மட்டுமல்லர். லண்டன் நகர்லே உள்ள 'இந்தியா விடுதி'யிலே ஒன்றாகத் தங்கிப் பாரிஸ்டர்பட்டத்துக்குப் படித்தவரும் கூட. அது மட்டுமன்று வ.வே.ச.ஐயரும் திருச்சி நகர் தந்த வரகனேரி தியாகமூர்த்தி என்பதால், டாக்டர் ராஜனும், மற்றும் சிலரும் ஐயரிடம் சென்று, ஐயர் பிடிவாதம் காட்டாமல், எல்லா சாதி மாணவர்களும் ஒன்றாய் அமர்ந்து சமபந்தி உணவு உண்பதற்கு தக்க வழி எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். எல்லாருக்கும் ஐயர் முடியாது என்று பிடிவாதமாகக் கூறி விட்டார்

இந்த வர்ணாசிரமக் களங்கம், வ.வே.சு.ஐயருக்கு இருந்த பன்முகத் திறமைகளையும், பன்முகப் பண்புகளையும், பன்முக அறிவுகளையும் பாழ்படுத்தி விட்டது மட்டுமல்ல; அவருக்கு பெரிய தலைவர்களிடம் இருந்த தொடர்பையும் அறுந்து போகச் செய்து விட்டது. அரசியல் குறுக்கத்தையும், அறிஞர்களது அருவருப்பையும் உருவாக்கி விட்டது எனலாம். இந்தப் பிரச்னை பின்நாளில் ஆசிரமத்தில் பெரிய பிளவை மட்டும் உருவாக்க வில்லை. அதை மூடவும் வேண்டிய நிலைக்கு எதிர்ப்பு எழுந்து விட்டது

வ.வே.சு.ஐயரை, அவரைச் சேர்ந்த நண்பர்கள் 'தேச பக்தன்' என்ற பத்திரிக்கைக்கு ஆசிரியராக்கினர்.

தேசியக் கல்வித் திட்டம் என்றால் என்ன? காந்தியடிகள் அதை ஆரம்பித்ததின் நோக்கம் யாது என்பனவற்றை எல்லாம் அவர் ‘தேசபக்தன்’ பத்திரிக்கையில் விளக்கி எழுதி மக்களுக்கு அதன் அருமை பெருமைகளை எடுத்துரைத்தார்.

தமிழ் நாட்டு மாணவ, மாணவியர்களுக்குத் தமிழ் மொழியில் தான், தாய் மொழியில் தான் பாடங்களைச் சொல்லிக் கொடுக்க வேண்டும் என்ற துடிப்போடு எழுதினார் வ.வே.சு. பன்னிரண்டு வயதுக்கு மேல்தான் ஆங்கிலத்தைக் கற்றுக் கொடுக்க வேண்டும் என்பது ‘எனது கொள்கை’ என்ற தலைப்பில் வ.வே.சு. ஐயர் எழுதி எதிர்கால வாரிசுகளின் பொறுப்பைத் தூண்டிவிட்டார்.

ஐயர் புதுவையிலே வாழ்ந்திருந்த போது, ‘மங்கையர்க் கரசியின் காதல், சந்திர குப்த சக்கரவரத்தியின் சரித்திரம், புக்கர் வாஷிங்டன், தன்னம்பிக்கை, நெப்போலியன், கம்பராமாயணம். பாலகாண்ட உரை’, போன்ற அரும் பெரும் சாதனைகளைச் செய்து காட்டிய அவரது வரலாறு, மொழிபெயர்ப்புப் புலமைகளை இலக்கிய உலகுக்கு சான்றாக உள்ளது.

திருக்குறளையும், குறுந்தொகையையும் அவர் ஆங்கிலத்தில் அற்புதமாக மொழி பெயர்த்துள்ளார். இதன் வாயிலாக தமிழன்னையின் தன்னிகரற்ற பெருமைகளை உலகுக்கு உணர்த்தியுள்ளார்.

வ.வே.சு.ஐயர் நடத்தி வந்த ‘தேசபக்தன்’ பத்திரிகை, தமிழ் மக்களுக்கு அவரது தமிழ்ப் பற்றையும் புலமையையும் எடுத்துக் காட்டுகின்றன. அது ஒரு பல்சுவை பத்திரிக்கையாக தமிழ் மக்கள் இடையே நடமாடியது என்று தலைநிமிர்ந்து கூறலாம்.

‘தேச பக்தன்’ தொடங்கிய நேரத்திலேதான், காந்தியடிகளின் சத்தியாக்கிரகப் போராட்டம் ஆரம்பமானது. காந்தியடிகளின்

கொள்கைகளை தனது மூளைக்குக் கோபுரச் சிகரம் போல் உயர்த்திக் கொண்ட வ.வே.சு.ஐயர், மக்கள் ஏன் அந்தப் போராட்டத்தை ஆதரிக்க வேண்டும? அதனால் வரும் எதிர் கால நன்மைகள் என்னென்ன? என்பனவற்றை எல்லாம் வ.வே.சு. ஐயருக்கே உரிய தமிழில் அற்புதமாக எழுதியதை மக்கள் படித்துப் பின்பற்றி வந்தார்கள். அதனால், அண்ணல் போராட்டத்துக்குரிய ஆதரவும் பெருகியது.

'தேசபக்தன்' பத்திரிக்கைப் பலம் காந்தியடிகளது போராட்டத் திற்குப் பெரிய ஆதரவைப் பெருக்கிக் கொண்டே இருப்பதைக் கண்ட பிரிட்டிஷ் ஆட்சி, வ.வே.சு.ஐயரைச் சிறையிலே அடைக்கவும், பத்திரிக்கையை நிறுத்திவிடவும் முயற்சி செய்தது.

பத்திரிக்கையின் தலையங்கத்தை எப்போதும் ஆசிரியர்தான் எழுதுவார். ஆனால், வேறு ஒருவர் எழுதிய தலையங்கத்தைப் போலீசார் ஒரு முறைக்கு மும்முறைப் படித்தார்கள். அந்தத் தலையங்கத்தில் அரசுக்கு எதிராக எழுதியிருப்பதாக ஐயர் மீது குற்றம் சாட்டப்பட்டது.

அந்தத் தலையங்கத்தை ஐயர் எழுத வில்லை என்பது போலீசுக்கும் புரியும். ஆனாலும், அவரைத் தண்டிக்க வேண்டும்; பத்திரிகையை இழுத்து மூட வேண்டும்; இதுதானே வெள்ளையர் ஆட்சியின் நோக்கம். அதனால் ஐயர் மீது குற்றம் சுமத்தப்பட்டு, அந்த வழக்கு நீதி மன்றம் வந்து ஒன்பது மாதம் கடுங்காவல் தண்டனை என்று தீர்ப்புக் கூறப்பட்டது. செய்யாத குற்றத்தைச் செய்ததாக அரசு பொய்வழக்குப் போட்டது. அதன் முடிவு ஒன்பது மாதங்கள் கடுங்காவல்!

வ.வே.சு.ஐயர், அந்த ஒன்பது மாதக் கடுங்காவல் தண்டனையை அனுபவிக்க பெல்லாரி சிறைக்கு அனுப்பப்பட்டார்.

அவருக்குப் பெல்லாரி கடுங்காவல் தண்டனை கூடப் பெரியதாகத் தெரியவில்லை. தேச விடுதலைதான் அவர் கண்ணெதிரே வந்து நின்றது. அதனால், சிறையின் சித்ரவதைகளை எல்லாம் அவர் தனது கால் தூசாகக் கருதிப் பணியாற்றி வந்தார்.

ஒன்பது மாதம் கடுங்காவலை அனுபவித்து விட்டு விடுதலை பெற்று வெளியே வந்த வ.வே.சு.ஐயர், 'தேச பக்தன்' பத்திரிக்கை மூடப்பட்டுக் கிடந்ததைக் கண்டு கவலையடைந்தார். அதனால், அவரது குடும்ப வருமானம் சீர் குலைந்து நின்றது.

தனது வறுமையைப் பற்றி ஐயர் வருந்தினாரில்லை. ஆனால், வெள்ளைக் கொடுங்கோலனிடம் பாரத நாடு சிக்கிப் பரி தவித்துக் கொண்டிருக்கின்றதே! என்று கிடைக்குமோ எங்கள் சுதந்திரம் என்று அவர் கவலைப்பட்டார். சுதந்திரம் கிடைக்கும் காலம் எப்போது வருமோ என்று ஏங்கினார்!

சேரன் மாதேவி ஆசிரமப் பிரச்னை, சமபந்தி விரோதம், பெல்லாரி சிறைவாசம், தேசபக்தன் பத்திரிக்கை மூடிவிட்டதால் ஏற்பட்ட வருமான இழப்பு, வறுமையின் கோரம் போன்ற எதிர்பாராத வாழ்க்கைச் சிக்கல்கள் அவரைத் தினந்தோறும் அனலிடைப் புழுவாய் துடிக்க வைத்தன. என்றாலும் அவைகளுக்காக அவர் பயப்படவில்லை. ஏனென்னறால் எதிர் நீச்சல் போட்டே வாழ்ந்தவர் அல்லவா அவர்?

அந்த நேரத்திலே, 3.7.1925-ஆம் நாளன்று, வரகனேரி வேங்கடேச சுப்பிரமணியம் ஐயர் எனப்படும் வ.வே.சு.ஐயர், தனது மகள் சுபத்திரையை அழைத்துக் கொண்டு குற்றாலம் சென்றிருந்தார். அப்போது அவருடையமகள், குற்றாலத்திலே உள்ள 'கல்யாண் நீரருவி'யில் நடந்து செல்ல ஆசைப்பட்டார். ஆசைப்பட்டது மட்டுமன்று தந்தையையும் வற்புறுத்தினார்!

மகளது அவாவை நிறைவேற்ற எண்ணிய வ.வே.சு.ஐயர், பின்னே நடந்து வர, முன்னே நடந்து போகும் போது, காலிடறி நதியில் சுபத்திரை விழுந்து விட்டார். இதையறிந்து திடுக்கிட்டு, திகைத்து மகளைக் காப்பாற்று வதற்காக வ.வே.சு.ஐயர் அருவியில் குதித்தார். பாவம், தந்தையும் மகளும் இருவரும் நீரருவியின் வேகத்தில் மூழ்கி இறந்தே போனார்கள்.

இந்திய நாட்டின் சுதந்திரத்திற்காக அல்லும் பகலும் உழைத்து உழைத்து உருக்குலைந்து போன வ.வே.சு.ஐயர். தனது 44-ஆம் வயதில் இறந்து போன செய்தி நாடெங்கும் பரவியது. இதை அறிந்த தேசத்தலைவர்கள் அனைவரும் வருத்தப்பட்டுத் துயரத்தில் மூழ்கினார்கள்.

❑❑❑